நாவல்

மொழிபெயர்ப்பு:
பெ. கோ. சுந்தரராஜன்

P. Palani Velayudham

அப்டன் ஸிங்களேர்

M.S.G.A.Gr.V. Sal

# மதுவிலக்கு மங்கை

மலிவுப் பிரசுரங்கள்—6. ஆசிரியர் : சங்கு கணேசன்

# மதுவிலக்கு மங்கை

அமெரிக்க நாவலாசிரியர்

## அப்டன் ஸிங்களேர்

எழுதிய "வெட்பரேட்" என்னும் நூலைத்தழுவியது.

மொழிபெயர்த்தவர்: பெ. கோ. சுந்தரராஜன்

KALA NILAYAM
BOOK SELLERS & STATIONERS
...VANGADI, TRIVANDRUM.

சுதந்திரச்சங்கு காரியாலயம்

திருவல்லிக்கேணி : : சென்னை.

1937

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்
நூல் வரிசை எண்: 736
நன்கொடை எண்: 736

*Copyright by S. Ganesan*

கூடிய சீக்கிரத்தில் இந்தக் கதை டாகியில் எடுக்கப்படும்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
...தியல்துறை.

# பொருளடக்கம்


| எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | ராஜசேகரர் குடும்பம் ... | 1 |
| 2. | சின்னராஜா படாடோபம் ... | 10 |
| 3. | மரகதத்தின் கவலை ... | 13 |
| 4. | மறுமலர்ச்சி - மதுவளர்ச்சி ... | 23 |
| 5. | தேர்தல் பிரச்னை ... | 29 |
| 6. | சின்ன ராஜா சென்னை விஜயம் ... | 31 |
| 7. | பிரசாரம் ... | 38 |
| 7. a | பொற்சிறை ... | 44 |
| 8. | சாராயத்திற்குச் சாவு மணி ... | 52 |
| 9. | காமவெறி - வெற்றியின் அறிகுறி ! .... | 55 |
| 10. | பராங்குசத்தின் பாவம் ... | 62 |
| 11. | புதுமனிதன் ... | 69 |
| 12. | பழவேற்காட்டு ராமானுஜர் ... | 76 |
| 13. | அவதூறு ... | 83 |
| 14. | மரகதத்தின் காதல் ... | 92 |
| 15. | திருட்டுச் சாராய வியாபாரம் ... | 102 |
| 16. | விசாரணை ... | 116 |
| 17. | மரகதத்தின் தீவிரப் பிரசாரம் ... | 120 |
| 18. | சர்க்கார் போக்கு .... | 129 |
| 19. | பொற்சிறைக் காதலியின் விடுதலை .... | 141 |
| 20. | தியாகம் ... | 151 |
| 21. | மதுவிலக்கே மனித விமோசனம் ... | 162 |

"மதுபானம் அசுத்தமே யாகும். அவை சாத்தானுடைய காரியங்கள். எனவே வெற்றி பெற வேண்டுமாயின், அவற்றை வெறுத்துத் தள்ளுங்கள்."

—குர்ஆன் 5. 90

"மதுபானம், சூதாட்டம் இவை மூலமாக சாத்தான் உங்களிடையே பரஸ்பர சச்சரவையும் அருவருப்பையும் தோற்றுவித்து, நீங்கள் ஆண்டவனை வணங்குவதை மறக்கச் செய்ய முயற்சிக்கிறான். நீங்கள் அவன் வலையில் விழுவீர்களா?"

—குர்ஆன் 5. 91

"சாராய மருந்தா தீர்கள்; அது எல்லாத் தீமைக்கும் அடிப்படையானது."

—நாயக வாக்யம்.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க.சண்முகம் நூலகம்
தமிழியல் துறை



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**



அப்டன் ஸிங்களேர்

P. P. Velayudham.
M.S.G.B.G.V.
அவ்வை தி.க. சண்முக... தமிழியல்...

# மதுவிலக்கு மங்கை

## 1. ராஜசேகரர் குடும்பம்

தென்னிந்திய ரயில்வேயில் சோளவந்தான் என்று ஒரு ஸ்டேஷன் உண்டு. அங்கு இறங்கிக் குதிரை வண்டி மூலம் ஐந்து மைல் சென்றால் ஒரு தென்னந்தோப்புத் தோன்றும். அதைச்சுற்றியுள்ள இடம் முழுவதும் சதுப்புநிலம். ஆனால் சிறிது தூரம் தோப்புக்குள் சென்றதும் விஸ்தாரமான புல் தரையின்நடுவில்மயில்கள் ஆடிக்கொண்டும் வான்கோழிகள் ஆட முயன்று கொண்டுமிருப்பதைக் காணலாம். அதற்கப்பால் இரண்டு மாடிகள் கொண்ட கம்பீரமான மாளிகை ஒன்றுண்டு. அந்தக்கட்டிடத்தின் பெரிய தூண்களைப் பார்த்ததும் அது திருமலைநாயக்கன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

அதில் பெரிய குடும்பம் ஒன்று புராதனமான பெருமையோடு செல்வகரமாயிருந்துவந்தது. வீட்டில் வருவோர், போவோர், இருப்போர் கணக்கில்லை. எப்பொழுதும் கல்யாணம் பட்டபாடுதான். கலகலவென்று பேச்சு எப்பொழுதும் குடி கொண்டிருக்கும். வீட்டுக்குள்ளும் தோட்டத்திலும் வேலைக்காரர்கள் நடமாட்டத்தைப் பார்த்தால் அவர்களுடைய தொகை நூற்றுக்கணக்கைச் சேர்ந்ததாகத் தெரியும்.

மாளிகையின் முக்கிய ஒளி மரகதவல்லி. இவள் ராஜசேகரின் கடைசிக் குழந்தை. இவள் தன் குழந்தைப்பருவத்தில் தந்தையை ஒரு தெய்விக புருஷராகவே நினைத்திருந்தாள். அவருடைய மிருது வசனமும், அழகிய முகமும் அவளுடைய நிரந்தர சந்தோஷத்திற்குக் காரணமாகும்.'

தன்னை மடியில் வைத்துக்கொண்டு அவர் புராணக் கதைகள் சொல்லிய காட்சி மரகதத்தின் மனதில் அழியாமல் பதிந்திருந்தது.

ராஜசேகரர் உணர்ச்சி மிகுந்தவர். இரக்கம் நிறைந்தவர். கஷ்டத்தைக் காணச்சகிக்க மாட்டார். இக்காரணத்தினால் அவர் இவ்வுலகத்திற்குச் சிறிதும் பொருத்த மற்றவர் போலிருக்கும்.

ராஜசேகரர் வாழ்க்கையில் ஒரு துக்கம் நேர்ந்தது. வயதடையும் வரை மரகதத்திற்கு இது தெரியாது. வாலிபத்தில் அவர் ஒரு பணக்காரப்பெண்ணைக் காதலித்தார். ஆனால் அப்பெண்ணின் சகோதரியைப் பற்றி ஒரு அவதூறு கிளம்பிற்று. அவள் ஒரு ஹரிஜன வாலிபனோடு சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தாளாம். இந்த அவமானம் சகிக்க முடியாமல் ராஜசேகரரின் காதலி கிணற்றில் வீழ்ந்தாள். அவளைக் கிணற்றிலிருந்து மீட்ட ராஜசேகரரால் அவளது உயிரை மீட்க முடியவில்லை.

இந்த வருத்தத்தை ராஜசேகரர் என்றும் மறக்கவில்லை. மரகதத்தின் தாயாரை மணந்தது பிறரைச் சந்தோஷப் படுத்தவே. இது காதல்மணமல்ல வென்பதை முற்றிலும் உணர்ந்த அந்த அம்மாள் மனைவியின் கடமையைச் சரிவரச் செய்வதிலேயே கருத்தாயிருந்தாள். அவள் நாளடைவிற் பெற்ற எட்டு குழந்தைகளில் ஐவரே இப்பொழுது உயிரோடிருந்தனர். ராஜாசேகரர் மனைவி அனைவரையும் அன்போடு உபசரிப்பாள். குழந்தைகளின் சுகத்தையே தனது பாக்கியமாக எண்ணுவாள்.

மரகதம் பயத்திலேயே வளர்க்கப்பட்டவள். காரணம் வீட்டைச் சுற்றியுள்ள அபாயங்களே. ஆடு மாடுகள் குதிரைகள் தவிர, தோட்டத்தில் அனுமதியின்றி உலாவும் பாம்பு முதலிய பூச்சிகளால் குழந்தையைத் தனியாக விடமுடியவில்லை. மரகதம் செருப்பில்லாமல் வெளியே போகக் கூடாது. சிறு மரங்களில் ஏறக்கூடாது. வெயிலில் இருக்கக்

கூடாது. எல்லோரும் சாப்பிடும்போது அனுவசியமாகப் பேசக்கூடாது. பெண்கள் பேசக்கூடாத விஷயங்களைப் பற்றி அவள் கேள்விகள் கேட்கக்கூடாது. குடும்ப விஷயங்களைப் பற்றிவிருந்தினர் முன் பிரஸ்தாபிக்கக்கூடாது. சிரித்தல்பலமாகப்பேசுதல் மற்றோருக்குமுன் இலையைவிட்டு எழுந்துவிடுதல் நிச்சயமாய்ச் செய்யவேகூடாது. வீணைவாசித்தல் தவறாமல் அப்பியசிக்கவேண்டும். கற்றுக்கொள்ளும் சமஸ்கிருதத்தை மறக்கக்கூடாது. சிறுமி மரகதம் இந்த விஷயங்களைச் சரிவர அனுஷ்டிக்க மனப்பூர்வமாய் முயன்றாள்.

ஒவ்வொரு விதியையும் சரிவரப் பின்பற்றவேண்டுமே யென்ற கவலையைவிட மிகப்பெரியதோர் கவலை மரகத வல்லிக்கு ஏற்பட்டது. இந்த விசாரம் அவளுக்கு முதன் முதலில் எப்பொழுது ஏற்பட்டது என்று சொல்ல முடியாது. அவளுக்கு விவரம் தெரிந்த அன்றே மனத்தில் பயங்கர உண்மையும் புலப்பட்டது. இதை அறிந்த அவளுடைய ஆத்மா துன்பத்தில் மூழ்கிற்று. அது தன்னுடைய தந்தையின் கெட்ட குடிப்பழக்கமே.

குடி என்பதற்கு மரகதம் மனதில் விசேஷமான பொருள் கொண்டிருந்தாள். மாளிகையில் நடக்கும் விருந்துகளில் சீமைச் சாராயப் புட்டிகள் உடைக்கப்பட்டு எல்லோரும் சிறிது சிறிது சாப்பிடுவதை அவள், குழந்தை முதல் பார்த்திருக்கிறாள். அது செல்வவந்தர் வீட்டுவழக்கம். அதைப் பற்றி மரகதத்திற்குக் கவலையில்லை. முக்கியமான காரியங்களுக்கு நடுவிலும், ஒரே நாளில் அடிக்கடியும், மனது சாந்தமடையவேண்டும் என்பதற்காகவும், பலசாக்குகள் சொல்லி ஒரு மனிதன் சாராயப் புட்டிகளைக் கையிலெடுப்பதே 'குடி'. அதுவே மரகதத்திற்குக் கவலையை விளைவித்தது. இந்தப் பழக்கம் அனுவசியம். இதைச்சமூகம் ஒப்புக்கொள்வதில்லை. அதனால்தான் அப்படிக் குடிப்பவன் தன் பழக்கத்தை ரகசியமாய் வைத்துக்கொள்கிறான்.

குடியால் பாழடைந்து மதியிழந்த அநேக மனிதர்களை மரகதம் மதுரைக்குப் போகும்போது பார்த்திருக்

கிருள். அவர்கள் அனைவரும் ஏழைகளே. குடிமாத்திர மல்ல அவர்களுக்கு ஏற்பட்ட துன்பம். சீமைச் சாரா யம் பணக்காரர்களால்தான் வாங்கமுடியும். கள்விற்பதற்கு சர்க்கார் அனுமதிவேண்டும். ஆகையால் எங்கும் திருட்டுக் கள் இறக்கப்பட்டது. சர்க்கார் கலால் இலாகா இன்ஸ் பெக்டர்களை நியமித்து மக்கள் திருட்டு கள்ளிறக்காமல் பார்த்துக் கொண்டிருந்தது.

ராஜசேகரர் குடிவெறியிலிருந்தபோது வீட்டிலிருப்ப தில்லை. தமது காரியஸ்தர்வீட்டில் போய்த் தங்கிவிடுவார். அவரைக் குடிமயக்கத்தில் பார்த்திராவிட்டாலும் அடிக்கடி அவர் வீட்டை விட்டு வெளியில் போயிருப்பதிலிருந்து மரகதம் உண்மையை உணர்ந்துகொண்டாள். அந்தோ! தெய் வீகமாய்த் தோன்றிய தனது தந்தைக்கு இரண்டு உருவங் களா? ஒன்று உண்மை. மற்றொன்று உண்மையைக் கேலி செய்யும் போலி!

பாவம்! எப்பொழுது அவர் உண்மை நிலையிலிருக்கிருர் என்பதைக் குழந்தை எப்படி அறிவாள்? அவர் சிரிக்கும் போது............சந்தோஷப்படும் தனது உண்மைத் தந் தையா? அல்லது குடியில் மூழ்கிக் களிப்புடன் கொக்கரிக்கும் மனிதனா? அவர் கண்களில் நீர் வடியும்போது............ உலகத்திலுள்ள கொடுமைகளுக்காகத் துக்கிக்கும் தனது உண்மைத் தந்தையா? அல்லது குடியால் மெய்ப்பார்வை யிழந்த மதியிலியா? அவர் பேசும்போது............வழக்க மான முதுமொழிகளா..................பித்தம் நிறைந்த பிதற்றலா?

இவைகளைப் பகுத்து அறிவதே இச்சிறுமியினுடைய வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகிவிட்டது. தந்தையின் உணர்ச்சிகள் ஒரு சிக்கலான வழியாயிருந்தன. அதன் மூலம் தட்டுத் தடுமாறியே மரகதம் உண்மையாகிய கோட் டையை அடையவேண்டும். குடியில் மூழ்கியபோது தந்தையின் உணர்ச்சிகள் கேவலமாயிருந்தன. அப்பொழுது அளவுகடந்த களிப்பு, அடங்காக் கோபம், தன் அருமைப்

பெண் தன் கேவல நிலையை உணரக்கூடாதென்ற சங்கோசம் ஆகிய இவைகள் அவருக்குத் தோன்றும். ஆகவே மரகதம் தான் அறிந்ததை அறியாததுபோல் இருக்க வேண்டி நேர்ந்தது. ஒரு சிறு விஷயத்தில்கூடத் தன் தகப்பனுடைய நடத்தையைச் சந்தேகிக்கிறுளென்று தெரிந்து விட்டால், திடீரென்று எழுந்து அவர் வெளியில் போய் விடுவார்.

சிறுமியின் தாயாரோ "அப்பாவுக்கு உடம்பே சரியாயில்லை" என்று அவருடைய செய்கையை மறைத்துச் சொல்லுவாள். ஆனால், வயதாக ஆக மரகதம் தனக்கு உண்மை தெரியுமென்பதைத் தாய்க்குத் தெரிவித்து விட்டாள். ராஜசேகரரின் குழந்தைகள் ஒவ்வொருவரும் இவ்வாறே உண்மையை அறிந்தனர். ஆனால் தாயாரோ ஒவ்வொரு சமயமும் அடுத்த குழந்தையாவது. இந்தத் துக்ககரமான உண்மையை அறியாமல் இருக்கக்கூடாதா என்ற வீண் நம்பிக்கையையே கொண்டிருந்தாள்

மரகதம் மெல்லிய சரீரமும் அகன்ற கண்களும் அதிக அடக்கமும் உள்ள பெண். குடும்பத்தின் கடைக்குட்டி. அதனால் செல்லம். ஆனால் அவள் தந்தைக்கு மீறியவளில்லை. தன்மீது அன்பாயிருந்தவர்களுடைய சுகதுக்கம் தன்னையும் சேர்ந்தது என்பதை உணர்ந்தவள். தாயாருக்கு மனச்சாந்தியும் தகப்பனுக்குச் சுகமும் இருக்கவேண்டுமென்பதே அவளுடைய முக்கிய அவா.

தன்னுடைய வளர்ச்சியைக் கவனிக்க அவளுக்கு அவகாசமேயில்லை. அதோ தந்தையிருக்கிறுர்; அவருடைய சௌக்கியமே முக்கியம்: அவருடைய கவலையை யொழிக்க முயலவேண்டும். அவருக்கு வேண்டிய மனச்சாந்தி அளிக்க வேண்டும் என்றே எண்ணுவாள். ஆனால் அறிவற்ற கெட்ட சிநேகிதர்கள் அவள் தந்தையை மீண்டும் மீண்டும் குடிக்குழியில் வீழ்த்திக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் அவர் பணங்கொடுத்து உதவினுர். குடித்து விட்டுச் சீட்டாடுவார். பலமாகத் தோல்வியடைவார். பணம்

போய்க்கொண்டேயிருந்தது. ஓரே இரவில் சூதாட்டத்தில் தம்முடைய கரும்புத் தோட்டத்தின் ஒரு வருஷ வருமானத்தை இழந்தார்.

இதன் பிறகுதான் அவருடைய குடும்பம் முழுவதும் அவருடைய மனத்தைத்திருப்புவதற்குவேண்டிய முயற்சிகளுக்காகக் கூடி ஆலோசித்தது. அவருக்கு நாள் முழுவதும் சரியாக ஒரு வேலையில்லாமலிருந்ததே இக் கஷ்டத்திற்குக் காரணமாயிருந்தது. தோட்டம், நிலம் முதலிய விவகாரங்களைக் கணக்கர்களும் காரியஸ்தர்களும் பார்த்துக்கொள்வார்கள். பண விஷயமாய்ப் பாங்கியைக் குறித்து மதுரைக்குப் போனால் ஒருவேளை குடிப்பதற்கு சந்தர்ப்பமிருக்காது என்பதற்கும் இடமில்லை. வேலை முடிந்ததும் கிளப்புக்குச் செல்வார். பெரிய பிரபு வந்திருக்கிறாரென்று புதுச் சாராயப் புட்டிகள் அங்கும் உடைக்கப்படும்.

ஆகையால் தாயாரும் தந்தை மதுரைக்குப்போகும் போதெல்லாம் கூடச்செல்ல வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மாளிகைக்குத் திரும்பிவந்ததும் எல்லோரும் தந்தையைச் சுற்றிக்கொண்டு தங்களுக்குக் கதை சொல்லச் சொல்லுவார்கள்; தங்களோடு விளையாடச் சொல்வார்கள் அல்லது மோட்டாரில் அதிக தூரம் சென்றுவரலாமென்று அழைப்பார்கள். இந்த முயற்சிகளெல்லாம் வீண் காலப் போக்கு என்பதை ஒருவரும் அறியவில்லை.

ஆனால் இது முற்றிலும் தந்தைக்குத் தெரியும்! தம்மை அன்புச்சிறையில் சக்தியற்ற குழந்தையாக அடைத்து வைக்க அவர்கள் முயல்வதை அவர் அறிவார். ஏதோ யோசித்துக் கொண்டே ஏங்கி உட்கார்ந்துகொண்டிருப்பார். இங்குமங்கும் அலைவார். திடீரென அவர்களுக்குத் தெரியாமல் நழுவி விடுவார். தாம் மனிதன் என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும்! 'ஓரே ஒருதரம் குடித்துவிட்டு வருவோம். என்ற தீர்மானத்துடன் புறப்படுவார். ஒருதடவையான பிறகு 'இது சேர்த்தியில்லை' என்று சொல்லிக்கொள்ளுவார். பிறகு பழைய கதைதான்; சிவந்த முகத்துடனும்

குழறும் நாக்குடனும் வீடுதிரும்புவார். ஆனால் தாம்திடமாக இருப்பதாக ஒவ்வொருவருக்கும் காட்டிக்கொள்ளுவார்.

நாட்கள் செல்லச்செல்ல ராஜசேகரரை அடக்கியாளக் கூடியவள் மரகதம் ஒருத்திதான் என்று தோன்றிற்று. மரகதமே அவரது பொக்கிஷம்; அவருடைய கண்ணின் மணி! மற்றவர்களிடத்தில் அவருக்குக் கோபம்வரும். அவளைப் பார்த்தால் புன்சிரிப்பு உண்டாகும். ஆகவே, அவள் வீணை கற்றுக்கொண்டிருக்கும் சமயமாயிருந்தாலும், சம்ஸ்கிருதம் படிக்கும் போதாயிருந்தாலும் அடிக்கடி அழைக்கப்படுவாள்.

அழைத்த தாய் மரகதத்தைப் பார்த்து, "கண்ணே, அப்பா, ஊருக்குள் போயிருக்கிறார். உடம்பு சரியாயில்லை; வெயில் அதிகமாயிருக்கிறது; போய் அழைத்துக்கொண்டு வருகிறாயா" என்பாள்.

உடனே மரகதம் அக்குறிப்பை அறிந்து குதிரை வண்டியில் ஏறிக்கொண்டு விரைந்து செல்வாள்.

அந்தோ! சாராயக்கடைத் திண்ணையில் சிரித்துக் கதை பேசிக்கொண்டிருப்பார் தந்தை. தம் களிப்புக்காக கர்ணம் போட்டுக் குதிக்கும் சிறுவர்களுக்குக் காசுகளை எறிந்து கொண்டிருப்பார்.

மரகதத்தைப் பார்த்த நொடியில் எல்லாம் நின்றுவிடும். பெரிய வீட்டுப் பெண்ணாகிய அவளுடைய முன்னிலையில் எல்லோருமே மரியாதையாக நடந்து கொள்ளமுயலுவார்கள். தந்தை அவசரமாக எழுந்து "செல்லம்மா! எங்கே வந்தாய்." என்று சொல்லிக்கொண்டே வருவார். வீட்டில் மரகதத்திற்கு "அம்மாப்பொண்ணு" "செல்லக்குட்டி" முதலிய பெயர்களுண்டு. மற்றவர்களுக்கு முன்னிலையில் அவர் 'செல்லம்மா' என்ற கௌரவமான செல்லப் பெயரையே உபயோகிப்பார்.

மரகதம் "அப்பா நான் புதுப்பாட்டுக் கற்றுக்கொண்டு விட்டேன்" என்பாள்.




அந்தோ ! சாராயக்கடை திண்ணையில் பேசிக்கொண்டிருந்தார் தந்தை!!

உடனே அக்குறிப்பையுணர்ந்த தந்தை "அப்படியானால் கேட்கவேண்டுமே." என்று சொல்லிக்கொண்டு வண்டிம் லேறித்திரும்பிவிடுவார். ஆனால் சில சமயங்களில் அவர் பிடிவாதமாய் இருப்பார். பெண்ணின் தூண்டுதல்களுக்கு இணங்கமாட்டார். "நான் ஒருவரைப் பார்ப்பதற்காக்க காத்துக்கொண்டிருக்கிறேன்; ராத்திரி சாப்பாட்டிற்கு வந்து விடுகிறேனென்று அம்மாவிடம் சொல்; நீ போய் நேற்றுக் கொடுத்தேனே அந்தக் கதைப் புத்தகத்தைப் படித்து, அப் பாவுக்கு அந்தக் கதையைச் சொல்லவேண்டும்." என்று சால் சாப் சொல்லிவிடுவார்.

ஏமாற்றமுடன் திரும்பிவரும் மரகதம் தன் தாயின் துயரத்தைக் கண்டவுடன், "இன்னொருதரம் போய்ப் பார்க் கிறேனம்மா. ஒருவேளை இந்த முறை வந்துவிடுவார்" என்று சொல்லிப் போவாள்.

இம்மாதிரியே மரகதத்திற்கு அனுபவம் ஏற்பட்டது. தந்தையை இணங்கச் செய்வதற்கு, அவருக்கு முக்கியம் என்று தோன்றக்கூடிய யோசனைகளைச் சிந்தித்துக் கண்டு பிடிப்பதிலேயே அவளுடைய நோக்கமெல்லாம் கழிந்தது. அவள் அன்போடுமிருக்கவேண்டும்; கண்டிப்பாகவும் இருக்க வேண்டும்; தன்னுடைய சக்தி முழுவதையும் உபயோகித்து அவரை இணங்கச் செய்யவும் வேண்டும். என் செய்வாள்!

சீட்டு விளையாடுவதில் தன் தந்தைக்கு ஆசையிருப்பதை யறிந்து மரகதம் அவருடன் எந்நேரமும் 'அவுட்' விளையாடு வாள். அவருக்கு ஆட்டத்தில் சிரத்தை போய்விடாம லிருப்பதற்காகத் தான் தோற்றபொழுது வருத்தத்தையும், ஜெயித்தபொழுதுகளிப்பையும்காட்டுவாள். தன் தந்தைக்குத் தோல்வியில் வருத்தம் ஏற்பட்டுவிடுமோவென்ற கவலையில் அவருக்கு அதிகமாக வெற்றி வரும்படி ஆடுவாள். இம் மாதிரியே அவருடைய ஊக்கத்தை நிலைநிறுத்தி நாள் முழுதும் விளையாடும்படி செய்துவிடுவாள். மோசடியான திட்டமும் விளையாட ஆரம்பித்தாள். அதாவது வேறுவிதத் யில் அதிக நெருக்கடியான சமயங்களில் தப்பிழைத்துத்

தந்தை சிரிக்கும்படி செய்துவிடுவாள். அவர்களுடைய நிலைமை நேர் விரோதமாய் மாறிவிட்டது. குழந்தையான மரகதம், அவருடைய மனப்போக்குப்படி நடக்க முயலும் பெரிய பெண்ணுனள். எப்படியிருந்தாலென்ன, அவருக்காகத்தானே விளையாடுவது; உலகத்தில் முதல் தெய்வம்போன்ற தன் தந்தை ஆட்டத்தில் வெற்றிபெறச் செய்வது தவரு?

எல்லாக் குழந்தைகளும் மரகதத்துடனும் தந்தையுடனும் பல விளையாட்டுகள் விளையாடுவார்கள். அவற்றுள் "ஒளிந்து பிடிப்பது" ஒன்று. ஒருமுறை நல்ல இடமென்று நினைத்து 'அப்பா' கூரைமேலேறி ஒளிந்து கொண்டார். ஆனால் இறங்கமுடியவில்லை. இதைப்பார்த்த பண்ணைச் சிறுவர்களில் ஒரு பயல் "ஏன்சாமி எப்படி இறங்கப்போரீங்க" என்று தன்னையறியாமல் பரிகசித்து விட்டான். கோபமடைந்த ராஜசேகரர் அவனை மிகவும் கேவலமாக தூஷித்துவிட்டார். ஆட்டமும் நின்றுவிட்டது.

தாம் கேவலமான வார்த்தைகளை உபயோகப்படுத்திவிட்டதை உணர்ந்து அளவிலா வருத்தங் கொண்டார். அவ்வருத்தத்தை மறப்பதற்காகப் போய்க் குடித்துவிட்டு வந்தார்.

## 2. சின்னராஜா படாடோபம்

மரகதம் தள்ளாடிச் செல்லும் இந்தத் துன்ப வழியில், அவளுடைய மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் அவளுக்குத் துணையாயிருந்தனர். ஆனால் அவர்களெல்லோரும் மூத்தவர்கள். முதல்வனுன தியாகராஜன் மரகதத்தைவிடப் பன்னிரண்டு வயது பெரியவன். எப்பொழுதும் சில்க் சூட்டும், சர்ஜ் கோட்டும் போட்டுக்கொண்டு சிகரெட் பிடித்த வண்ணம் காலங் கழித்துக் கொண்டிருப்பான். அவனுக்கு அநேகம் பெண் நண்பர்கள் உண்டு. அவன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். அவனிடத்தும் சீட்டாட்டமும்

குடியும் இல்லாமலில்லை என்பதை மரகதம் மற்றவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து ஊகித்தறிந்து விட்டாள்.

அடுத்தவள் லீலா. தியாகராஜனுக்கு இரண்டு வருஷம் இளையவள். ஆடம்பரத்தில் பிரியமுள்ளவள். புது ஆடைகளும் ஆபரணங்களும் அணிதல், தன்மேல் நம்பிக்கை வைத்துக் காத்துக்கொண்டிருக்கும் வாலிபர்களுடன் அளவளாவுதல் அவளுடைய முக்கிய வேலை. பரந்த முகமும் சுருட்டை மயிரும் அவளது அழகை அதிகப்படுத்தின. பார்ப்போர் மனத்தை உடனே கொள்ளைகொள்ளுவாள். லீலாவின் லீலைகளுக்குச் சந்தோஷமான முடிவு ஏற்பட்டபோது, மாளிகை சுவர்க்கலோகம்போல் அலங்கரிக்கப்பட்டது. மதுரையில் ஒரு பெரிய கோடீஸ்வரர் குமாரருக்கு அவள் மணம் செய்விக்கப்பட்டாள்.

லீலாவுக்குப் பிறகு பிறந்த இரண்டு குழந்தைகளும் இறந்துவிட்டன. அடுத்தவன் ராஜாமணி. அவனைச் "சின்ன ராஜா" என்றழைத்தார்கள் வேலைக்காரர்கள். மரகதத்திற்கு நான்காண்டுகள் பெரியவன். இருவருக்கும் நடுவிற் பிறந்தவன் நடேசன்.

கடைசி மூன்று பேருமே எப்பொழுதும் இணைபிரியாமலிருந்தனர். நடேசன் அமைதியும் அடக்கமும் உடையவன். சிறிது மந்தகுணமுடையவன். ராஜாமணி பொறுமையற்றவன். எப்பொழுதும் அவசரம், ஆத்திரம், அதிகாரம், புகழ், அந்தஸ்து; எல்லாம் தனக்கே வேண்டுமென்ற பேரவா உடையவன்.

"சின்னராஜா" ஒரு மேதாவி. சேகரர் குடும்பத்தில் இம்மாதிரி ஒருவன் ஏற்பட்டதேயில்லை. எல்லோரைக் காட்டிலும் அதிசீக்கிரமாக விஷயங்களை அறிந்து விடுவான். வாக்கு சாதுரியமுடையவன். கேட்போர் மனத்தில் விரைவிற் பாய்ந்து ஊடுருவும்படி பேசுவான். வர்ணனைத் திறமையும் கற்பனு சக்தியும் எவரையும் திகைக்கச் செய்யும்படி அவனிடம் அமைந்திருந்தன. பெரியவர்கள் பேசுவதுபோல் பேசி வேடிக்கை செய்வான்.

கொடுமையும் அவனுக்குக் கொஞ்சம் உண்டு. தன்னுடைய அதிகாரத்தைக் காண்பிப்பதற்காக மற்றவர்களைக் கஷ்டப்படுத்துவான். மரகதத்தைவேண்டுமென்றே இம்சிப்பான்.

ஒருநாள் அவன் "நான் பெரியவனானதும் ஒருகுடிகாரனாகப் போகிறேன்." என்று தெரிவித்தான். "ஐயோ ராஜா! வேண்டாம்" என்று மரகதம் பயந்து கூறியும், "ஒன்று குடிகாரனாகப்போகிறேன், அல்லது சிப்பாயாக யுத்தத்திற்குப் போவேன்." என்று பிடிவாதம் செய்தான். உடனே, மரகதத்திற்கு மற்றொருகவலை தோன்றிவிட்டது; ராஜாமணி குடிகாரனாகவாவது போர்வீரனாகவாவது ஆகாமல் இருப்பதற்கு என்ன செய்வது? இவ்வளவுபெரிய குடும்பத்தில் ஒரு மேதாவி தன் இஷ்டம் போல் நடந்துகொள்ள முடியுமா? என்று இவ்வாறு மரகதம் எண்ணலானாள். ஆனால், ராஜாமணி தனக்காக ஒரு கற்பனை யுலகத்தையே சிருஷ்டித்துக் கொண்டான். மேல்மாடியில் ஒரு அறையில் பெரிய புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. ராஜாமணி பரம்பரைப் பொக்கிஷமாகிய அவைகளையெல்லாம் எடுத்துப் படிக்கத் தொடங்கினான். வேறு ஒருவரும் அந்தப் புத்தகங்களைக் கவனிப்பதேயில்லை. இந்தப் படிப்பினால் அவனுடைய மனம் அதிக வேகமாக விருத்தியடைந்தது.

இவனுடைய படிப்பும் அறிவு வளர்ச்சியின் ரகசியமும் ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அவ்வப்போது தன் ரகசியத்தை மரகதத்திடம் சொல்லிக்கொள்வான். அவனுடைய தீவிரமான கருத்துக்களையும் பேச்சுக்களையும் அறிந்து அவள் பயந்துவிட்டாள். ஆனால், தந்தைக்கு அடுத்தபடியாக அவளிடமே அவன் அதிக அன்பு கொண்டிருந்தபடியால், அவள் சொல்லியபடி யெல்லாம் நடந்து வந்தான். அவன் அவளுக்காகப் பல புத்தகங்களிலிருந்து கதைகளைப் படித்துச் சொல்வான். தான் கட்டிய கதைகளையும் சொல்லுவான். அதிவியப்புடன் மரகதம் சிருஷ்டியற்புதத்தையே கண்ணாரக் காண்பவளைப்போலக் கேட்டுக்கொண்டிருப்பாள்.

அவனிடமிருந்து மரகதம் புத்தகங்கள் படிக்கும் பழக்கத்தையடைந்தாள். ஜன்னல்களுக்கும் திரைகளுக்கும் நடுவில் உட்கார்ந்துகொண்டு ஒருவருக்கும் தெரியாமல் படிப்பாள். தாயாருக்கோ, மரகதம் புத்தகம் படிப்பதில் காலம் கழிக்காமல் பந்துக்களுடனும், நண்பர்களுடனும் அளவளாவி எல்லோருக்கும் சந்தோஷம் ஏற்படும்படி நடந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உண்டு.

சாதாரணமாக மரகதம் மதுரைசென்று கலாசாலையில் படித்துப் பல கலைகளிலும் தேர்ச்சியடைந்திருப்பாள். ஆனால், அவளுடைய கவனத்திற்கு ஏற்றவாறு முக்கிய விஷயமொன்று இருந்தது; அது தந்தையைப்பற்றி ஏற்பட்ட துயரம்.

## 3. மரகதத்தின் கவலை

மரகதவல்லிக்கு வயது ஆக ஆகக் குடும்பப் பொறுப்பும் அதிகமாயிற்று. மனிதர்கள் குடிக்கவேண்டியது அவசியமா? என்ற கேள்வியைப்பற்றியே அவள் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பதினன்கு வயது ஆனபோது தன் தாயாரைக்கேட்டு, அக்கேள்விக்கு விடை தெரிந்துகொள்ள முயன்ருள்.

தாயார், "இல்லையம்மா! குடி அவசியமில்லை. சிலர் குடிப்பதற்கு அதிக ஆசைப்படுகிருர்கள். அவ்வளவுதான்" என்ருள்.

"சிலர் ஒவ்வொரு சமயத்திலும், சிலர் எப்பொழுதும், குடிப்பதற்கு ஆசைப்படுகிருர்களே; குடிக்காமலே இருந்து விடுவது நல்லது இல்லையா?"

"ஒவ்வொருவனும் 'நான் குடிகாரனுகமாட்டேன்.' என்றுதான் எண்ணுகிருன்.

"ஆனல் அநேகம்பேர் குடிகாரர்களாகி விடுகிருர்களே; ஏன் குடியை ஒரேயடியாய் ஒழித்துவிடக்கூடாது?"

"அப்படிச் செய்வது நல்லதுதான். ஆனால் குடிப்பவர்களுக்கு மனம் வருகிறதில்லை."

அதற்குமேல் பாவம் தாயாருக்கு மரகதத்தின் ஆத்திரமடைந்த மனதை சமாதானப்படுத்த முடியவில்லை.

இந்தச் சமயத்தில் லீலாவின் கணவன் ஒருநாள் குடித்துவிட்டுப் பக்கத்திலிருந்த ஒருவனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்ட செய்தி கிடைத்தது. மரகதம் தனது சகோதரர்கள் குடிக்கக்கூடாது என்று முயற்சி செய்வதற்கு இது ஒரு பலமான சாட்சியாயிற்று. தன் சகோதரனாகிய நடேசனிடம் அடிக்கடி வாதித்து, அவனைக் குடிக்கக் கூடாதென்ற கொள்கையைப் பின்பற்றும்படி செய்துவிட்டாள். அச்சமயத்தில் அவ்வூரில் சில காங்கிரஸ்காரர்கள் மதுவிலக்குப் பிரசாரத்திற்காக வந்திருந்தார்கள். நடேசன் அவர்கள் சொற்படி குடிப்பதில்லையென்ற ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டான். இந்தச் செய்கை சேகரர் குடும்பத்தில் கோபத்தையும் பரபரப்பையும் உண்டாக்கிவிட்டது.

"சின்ன ராஜா" குடிவெறிகொண்ட மனிதர்களைப் பற்றிய புத்தகங்களையே படித்து வந்தான். பரிசுத்தமாக ஆடம்பரமின்றி வாழவேண்டுமென்ற கொள்கையை அவன் முற்றிலும் வெறுத்தான். மரகதம் எவ்வளவு முயன்றும் அவனுடைய பிடிவாதத்தை அடக்க முடியவில்லை. பரிசுத்த வாழ்க்கையைத் தொலைக்க ஒருபுரட்சி வேண்டுமென்று அவன் விரும்பிக்கொண்டிருந்தான்.

பொதுவாக, மனிதர்களின் பொய்க்கொள்கைகளும், சுயநலமும், பேடித்தனமும், நாடுமுழுவதும் வாலிபர்கள் மனதில் கோபத்தை யுண்டுபண்ணி விட்டன. ஒவ்வொரு புரட்சிக்கார வாலிபனும் தானே முதல்வனென்றும், தனியாகவே வேலை செய்ய வேண்டுமென்றும் நினைத்துக் கொண்டிருந்தான். ஆனால் இத்தகைய வாலிபர்கள் நாடெங்கும்நிறைந்திருந்தார்கள். அவர்கள் பத்திரிகைகள் மூலம் தங்கள் அறிவை வளர்த்துக்கொண்டு, பெரிய நகரங்களில் வந்து

சேர்ந்து புத்தகங்கள் எழுதுதல், நாடகங்கள் தயார்செய்தல் முதலிய கலைப்பயிற்சி இயக்கங்களைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். இவர்களெல்லோரும் குடியை சர்வ சாதாரணமாகக் கைக்கொண்டிருந்தார்கள். இவர்கள் குடித்தது தங்களுடைய சந்தோஷத்திற்காகவல்ல; தங்களைவிடப் பெரியவர்களின் பேச்சைக் கேட்பதில்லையென்பதைக் காண்பிப்பதற்காகவே.

ஒரு சமயம் தன்னுடைய தந்தை உலகமெல்லாம் ஒப்புக்கொண்ட மதக்கொள்கைகளைக் கொண்டவரல்லர் என்பதையும் மரகதம் நாளடைவில் அறிந்தாள். இரக்கமும் அன்பும் நிறைந்த கடவுள் உலகத்தைப் பாதுகாக்கிறார்; என்ற கொள்கையை அவரால் நம்ப முடியவில்லை. கடவுள் எல்லாம் வல்லவராயிருந்தும் உலகத்தில் கஷ்டம் அதிகமாயிருக்கிறதே. அவரை அருள்நிறைந்தவர் என்று எப்படி நம்புவது? மனிதர்களுக்கும், மற்ற ஜீவராசிகளுக்கும் ஏற்படும் துன்பங்களைப்பற்றி எண்ணி எண்ணி ஏங்குவார்.

முக்கியமாக, "தீண்டாதார்" பிரச்னையைப் பற்றியே அவருக்கு அதிக கவலை. சமூகத்தில் சரியாக நடத்தப்படாத இந்தப் பெருங்கூட்டத்தை எப்படிச் சீர்திருத்தி நிலையை உயர்த்துவது? குடிப்பதே அவர்களுடைய முக்கிய ஆகாரமாயிருக்கிறது என்றெல்லாம் நினைத்து மனம் அதிகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது அக்கவலை மாறுதற்காக அவர் மீண்டும் குடிப்பரர்.

ராஜசேகரர் சேற்றில் அகப்பட்டுக் கொண்டவனைப் போல் தம்முடைய விதிக்குப் பலியானார். பிறகு அவருடைய பாசாங்கு பயனில்லாமற் போயிற்று. தமது காரியஸ்தர் வீட்டில் இவர் குடிவெறியில் காலம் கழித்துக்கொண்டே வந்தார். அந்தக் காரியஸ்தரும் பொறுமை யிழந்தார்.

மரகதத்தின் தாயார் வீட்டிலிருந்த சாராயப் புட்டிகளையெல்லாம் வெளியில் கொடுத்தனுப்பிவிட்டாள். இனிமேல் எல்லோருக்கும் அநுமதிக்கப்பட்ட பானம் தண்ணீர் ஒன்றுதான் என்று தெரிவித்தாள். ஆயினும் என்னபயன்?



மரகதம் புட்டியை உடைத்தெறிந்தாள்.

தந்தைக்குக் குடியில்லாமல் வாழமுடியவில்லை. ஊரில் இருக்கும் கெட்ட மனிதர்களுக்குப் பணம் கொடுத்து அவர்கள் மூலம் சாராயப் புட்டிகளை வாங்கிக் குடித்துவந்தார். கடைசியில் பாசாங்குகள் முடியவேண்டிய காலம் வந்து விட்டது. தந்தையின் கொடும் பழக்கத்தைப்பற்றித் தனக்குத் தெரியுமென்பதை மரகதம் தெரிவிக்க வேண்டியதாயிற்று.

"அப்பா! அப்பா!! வேண்டாம். இனிமேல் குடிக்க வேண்டாம்!" என்று அவர்காலில் விழுந்து அழுது மன்றாடினாள்.

வெட்கமடைந்த தந்தை தேம்பியழுதார். "குழந்தாய்! செல்லம்மா! நான் எப்படி அதைவிடமுடியும்? அது என்னைப் பேய்போல் பிடித்துக் கொண்டிருக்கிறதே! ஐயோ! உனக்குமா இது தெரியவேண்டும். இனிமேல் உன் முகத்தை நான் எப்படிப் பார்ப்பேன்?" என்றார்.

மரகதம் எப்படியோ தன் தூண்டுதலில் வெற்றிபெற்று விட்டாள். தந்தை, தலையணையின் அடியிலிருந்த சாராய புட்டியை எடுத்து அவள் கையில்கொடுத்து விட்டு "இனிமேல் குடிப்பதில்லை" யென்று உறுதிகூறினார். மரகதம் புட்டியை உடைத்தெறிந்தாள்.

"கடவுள்மேல் ஆணை! நான் இவ்வழக்கத்தை விடாமலிருப்பதைவிட சாவது மேல்!" என்று சொல்லி மனம் நொந்து கொண்டார்.

சேகரர், இரண்டொரு மாதம் தமது உறுதிமொழி தவறாமலிருந்தார். பிறகு சத்தியம் தவறிவிட்டார். தம் பெண்ணின் முகத்தைக் காணச் சகியாது மறைந்து விட்டார். தியாகராஜன் அவரைத்தேடி யழைத்துக்கொண்டு வந்தான். ராஜசேகரர் நோயாளியாய்ப் படுக்கையிலிருக்கவேண்டி நேர்ந்தது.

மரகதம் தனியாகத் தன் அன்பின் வலிமையால் அவரை வெளியில் போகவிடாமல் காக்க முயன்றாள். இவ்வாறே சில மாதங்கள் சென்றன. குடும்பத்திற்கும் ஒரு ஓய்வு



ஒரு நாள் மரகதம் கடைக்குள்ளேயே நுழைந்துவிட்டாள்

உண்டாயிற்று. அந்த ஆண்டு சேகரர் நிலத் தோட்ட விளைவுகளும் செழிப்பாயிருந்தன.

அச்சமயத்தில்தான் புதிய சீர்திருத்தத் தேர்தல்கள் நடந்துகொண்டிருந்தன. ராஜசேகரருக்கு அரசியல் விஷயங்களில் ஈடுபட அதிகப் பிரியம். என்றாலும், தேகநிலை அனுமதிக்கவில்லை. ஆனால், அவருக்கும் நிம்மதி ஏற்படவில்லை. குடும்பத்திலோ பல சச்சரவுகள். சேகரர் சகோதரர் ஒருவருக்கும் சகோதரிக்கும் சொத்து விஷயமாய்க் கலகம் ஏற்பட்டது. இதுவே கூட்டுக் குடும்ப வாழ்க்கையல்லவா? பரம்பரைக் குடும்பத்தில் எத்தனையோ சிறு மனஸ்தாபங்கள் இருக்கும். இதனால் அமைதி இழந்த சேகரர் மீண்டும் தடுமாறிவிட்டார்.

ஒருநாள் திடீரென மரகதத்தின் தாயார் துக்கம்மேலிட, தந்தை சாராயக்கடை போயிருப்பதை அவளுக்கு அறிவித்தாள். தந்தை நலத்தையே முக்கியமாகக்கொண்ட மரகதம் விரைந்து சென்றாள். கடைக்குள் இருந்தபடியே தந்தை தாம் ஒரு நண்பருக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லிவிட்டார். மரகதத்திற்கு அதற்கு மேல் பொறுக்க முடியவில்லை. தான் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பதினேழு வயது இளம்பெண் என்பதையும் மறந்து கடைக்குள் நுழைந்துவிட்டாள். தந்தை திடுக்கிட்டெழுந்தார். சூதாட்டமும் குடியும் நிறைந்த இந்தக் குகைக்குள் தன் அருமைச் 'செல்லம்மா' வந்து விட்டதைக்கண்டு திகைத்துவிட்டார். வாய் குழறியது. தனக்கு வேலையிருப்பதாகவும் பிறகு வருவதாகவும் கூறினார். மரகதம் கேட்காமல் மன்றாடினாள். கோபமடைந்து அவளை வெளியே செல்லும்படி உத்திரவிட்டார்.

பாவம்! மரகதம், தான் தகப்பனுருக்குக் கீழ்ப்படிந்திருக்கக்கூடாதென்று பிறகு நினைத்தாள். தான் கள்ளுக்கடைக்குச் சென்ற அவமானத்தையும் கருதாமல், எப்படியாவது தந்தையை அழைத்துக் கொண்டு வந்திருக்க வேண்டும்; என்று எண்ணினாள். ஆனால் மரியாதையும், நாணமும், நன்னடத்தையும் குறுக்கிட்டன. அழுதவண்ணம் வீடுதிரும்

பினுள். நடேசனைத் தேடினுள். காணவில்லை. சின்னராஜா மதுரையில் இருந்தான். அவனுக்குத் தந்தியடித்தாள். அவன் மறுரயிலில் வந்துவிட்டான். ஆனல், சேகரர் மறைந்துவிட்டார். எங்கு தேடியும் அகப்படவில்லை. கடைசியில் 10 நாட்களுக்குப் பிறகு போலீஸ் உதவியால்தான் கண்டு பிடித்தார்கள். குடிவெறியில் சூதாடிகளோடு சீட்டாடிப் பணம் தோற்றுக்கொண்டு இருந்தபோது அவரைக் கண்டார்கள். அவர் தோற்ற பணம் சாதாரணமன்று. அங்கங்கே 'பாங்கிகளில் பணம் வாங்கிக் கொடுத்ததைத் தவிர, இரண்டுலட்ச ரூயாய்க்கு 'நோட்டும்' எழுதிக் கொடுத்து விட்டார். தேக சௌக்கியத்தை முற்றிலும் இழந்தார்.

மதுரையில் பெரிய ஆஸ்பத்திரிக்குக்கொண்டு போகப் பட்டார். அவருக்கு அவமானம் அசௌக்கியம் இரண்டும் சேர்ந்தன. நரகவேதனையில் ஆழ்ந்தார். ஆனல், அன்பு அவருக்கு உதவி செய்ய முன் வந்தது. அவர் அன்பிற்கு இருப்பிடம் மரகதம்தானே. நாள்முழுதும் அவள் ஓயாது அருகிலிருந்தாள். அவர் மனமுறிந்தகாலத்தில் அடிக்கடி தைரியம் கூறுவாள். அவளது அன்புப் பெருக்கைக் கண்ட தந்தை பலவித சத்தியங்கள் செய்வார்.

அப்போது மாளிகையில் குடும்பத்தின் ஆண்பிள்ளைகள் கணக்குகளைப் பார்த்துச் சேகரரின் குடிக் கடனையும் சூதாட்டக் கடனையும் தீர்க்க முயன்ருர்கள்.

ஆஸ்பத்திரியில் தந்தை எப்பொழுதும் மனம் வருந்தியேங்க அருகிலிருந்த மரகதம் தந்தையின் துன்பத்தையும், விதிக்கொடுமையையும் பற்றிச் சிந்தித்துக் கவலையுற்ருள். தன் தந்தையைப் போன்ற பல சிறந்த மனிதர்கள் இம்மாதிரிக் குடியால் பாழடைவது விதிப்பயனுகிய கருமப்பலனும்? என்று "கருதிக் கருதிக் கவலைக் கடலில்" மூழ்கினுள்.

இரவில் மரகதம் அடுத்த அறையில் தூங்குவது வழக்கம். ஒரு சமயம் சேகரருக்கு அருகில் இருந்த காவல்காரன்



ராஜசேகரரின் தற்கொலை

மதுரை

தூங்கிவிட்டான். சேகரர் மெதுவாக எழுந்தார்; சுவரோரத்தில் மேஜையிலிருந்த க்ஷவரக்கத்தியை எடுத்தார். கதவைத் திறந்துகொண்டு மெதுவாக வெளியே சென்றுவிட்டார். இருட்டில் புல்தரையில் உட்கார்ந்து கொண்டு கழுத்தில் ஒரு நரம்பை அறுத்துக்கொண்டார். கைகளையும் மணிக்கட்டுக்கருகில் அறுத்துவிட்டார். தலை சாய்ந்தது. சுவரோரத்தில் சோர்ந்து விழுந்து தூக்கத்தில் ஆழ்ந்தார். ஒரே தூக்கம் கடைசி தூக்கம்.

வேலைக்காரன் கதவு தட்டும் சப்தம் கேட்டு மரகதம் எழுந்தாள். தந்தையைக் காணோம்! விரைந்து பாய்ந்து ஓடினாள். வெளியில் ஒரு வேலைக்காரி "ஐயோ! அம்மா மரகதம்!! என்று அலறுவதைக் கேட்டாள். அவ்வளவு தான் உண்மையை உணர்ந்த அதே நொடியில் மரகதம் தந்தையருகில் வந்துவிட்டாள்.

மரகதத்தின் நெஞ்சைப் பிளந்துகொண்டு ஏதோ கிளம்புவது போலிருந்தது. துக்கமாகிய அன்பு வெள்ளம் பந்து ஜனங்களைக் காணும்வரை உள்ளே அடங்கி யிருந்தது. பின்னால் ஒரு சப்தம் வந்தது. தாயார் வந்துவிட்டாள் என்றறிந்த மரகதம் நடுங்கும் கைகளுடன் தந்தையைத் தழுவி "அப்பா, அப்பா!" என்று கூவிக்கொண்டு புலம்பினாள்.

தாயார் தந்தைமேல் விழுந்து அலறி அழுதாள். முகம் முழுவதும் முத்தமிட்டாள். போனஉயிரை மீண்டும் அழைப்பவள்போல் கூக்குரலிட்டாள். சுற்றியிருந்த வேலைக்காரர்களும் ஒப்பாரியில் கலந்து கொண்டனர்.

பின்பு மரகதம் அழவில்லை. 'அம்மா ஏன் அழுகிறாய்? அப்பாவுக்கு ஒன்றுமில்லை. அவர்தான் கஷ்டத்திலிருந்து விடுதலை அடைந்து விட்டாரே' என்றாள்.

கணவனைப் பறிகொடுத்த குடும்பத் தலைவியை இம்மொழி தேற்றுமா? 'ஐயோ தெய்வமே இழந்து விட்டேனே! பாவி' என்று மீண்டும் அலறினாள் தாயார்.

உத்தரகிரியையான மரணச் சடங்குகள் யாவும் நடந்தேறின. மரகதம் சிறிதும் மனஞ்சோராது அற்புதமாய் நடந்து கொண்டாள். துக்கத்தில் மூழ்கிய அந்தக் குடும்பம் முழுவதிலும் அவள் ஒருத்தியே தைரியமாயிருந்தாள். துன்பத்திலாழ்ந்து குடியால் வருந்திய தந்தை உயிர் நீத்தது பாக்கியம் என்றே கருதினள். கடைசி வரையில் தந்தைக்கு உதவியாயிருந்த மரகதம், இப்பொழுது அவர் ஸ்தானத்தை வகித்தாள். அவளே மற்றவர்கள் எல்லோருக்கும் வழி காட்டியாயிருக்க நேர்ந்தது.

## 4. மறுமலர்ச்சி - மதுவளர்ச்சி

சென்னைத் திருவல்லிக்கேணியில் "பெல்ஸ்ரோட்" என்று ஒரு தெருஉண்டு. அங்குஒரு பெரிய வீட்டு வாசலில் இரு வாலிபர்கள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேசிக் கொண்டிருந்த விஷயம், தமிழ் நாட்டில் சிறிதுகாலமாக உலவிவரும் புதிய இலக்கியவிஷயமே யாகும்.

"நாம் சாதாரணமாகப் பேசுவது போலவே சுருக்கமான எளிய வார்த்தைகள் எழுதுகிறார்கள். ஆனால் ஒரு விஷயத்தைச் சொல்லும் போது அது நம்முடைய கண் முன்னால் நடப்பது போலவே தோன்றுகிறது அதெப்படி?" என்று அவ்விருவரில் இளையவனான ஜகன்னாதன் கேட்டான்.

அவனது நண்பனான கந்தசாமி "ஒரு கட்டுரையின் நடை, எழுதுவோனுடைய கற்பனா சக்தியையும், சிந்தனைத் தெளிவையும் பொறுத்ததாகும். எழுதப்புகும் விஷயத்தில் உண்மையான சிரத்தை ஏற்பட்டுவிட்டால் நடைதானாகவே எளியதாய்விடும்." வர்ணனைச் சித்திரமும் அழகாக ஏற்படும் என்று ஜகன்னாதனுடைய சந்தேகங்களை விளக்கிக் கொண்டிருந்தான்.

ஜகன்னாதன்:—"நீ நல்ல அறிவாளி அப்பா! எழுத்தாளர்களோடு பழகுகிறாய். உன்னுடைய வாழ்க்கையே எப்பொழு

தும் சந்தோஷத்தைத் தரக்கூடியதாயிருக்கிறது. நானே வீட்டுவேலையிலேயே காலம் கழிக்கிறேன். உனக்கு வாய்த்த சந்தர்ப்பங்கள் எனக்கு வாய்த்ததுமில்லை. வாய்க்கப் போவதுமில்லை" என்றான்.

"இப்படிப் பேசிப் பயனில்லையப்பா. அவனவன் வாழ்க்கையிலேற்படும் தளைகளைத் தகர்த்தெறிந்து விட்டுப் புறப்பட்டால்தான், கற்பனையுலகத்தில் சஞ்சரிக்க முடியும்......" என்று கந்தசாமி உற்சாக வார்த்தைகள் சொல்லிக்கொண்டிருக்கும்போது, உள்ளிருந்து யாரோ கூப்பிடுவதறிந்து ஜகன்னாதன் எழுந்து உள்ளே சென்றான்.

ஜகன்னாதன் ஈடுபட்டிருந்தவேலை பொதுவில் எந்தத் தொழில் வர்க்கத்தையும் சேர்ந்ததன்று. அவன் பெற்றோருக்கு ஒரே குழந்தை. அவன் தகப்பனார் பராங்குசம் என்பவர் வியாபாரம் செய்வதற்காகத் திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலிருந்து சென்னைக்கு வந்தவர். ஏதோ ஒரு நண்பனுடைய மூடப்புத்தியைக் கேட்டுப் பணமெல்லாம் இழந்த பிறகு தமது அந்தஸ்துக்குத் தகுந்த வேலையொன்று வேண்டுமே என்று தேடி முயன்று கடைசியில் ஒரு ஹோட்டல் வைப்பதென்று தீர்மானித்தார். ஹோட்டலென்றால் சாதாரண ஹோட்டலல்ல. பராங்குசர் ஆரம்பித்தது ஒரு குடும்ப போஜனசாலை. இவர் தெற்கே பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராதலால், மதுரை திருச்சி தஞ்சை முதலிய ஜில்லாக்களிலிருந்து குடும்பத்தோடு சென்னைக்கு வருபவர்களெல்லாம் பராங்குசத்தின் வீட்டில் வந்து தங்குவார்கள். இதற்காகப் பராங்குசம் பெரிய வீடு ஒன்றை வாடகைக்கு வாங்கிக்கொண்டார். ஜகன்னாதனுக்கு வீட்டு வரவு செலவு விஷயமான கணக்குகளைப் பார்த்துக் கொள்வதே வாழ்க்கையின் வேலையாக ஏற்பட்டுவிட்டது. வீட்டில் வந்து தங்குவோர்களுடைய சௌகரியங்களைக் கவனிப்பது அவனுடைய கடமையாய்விட்டதால், அவனுடைய ஆவலின்படி புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படிக்க நேரம் கிடைக்கவில்லை.

கந்தசாமி ஒரு தினசரிப் பத்திரிகையில் ஒரு செய்தி சேர்ப்போனுக இருந்தான். பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டிருப்பது மிகவும் ஆனந்தமான வேலையென்பது ஜகன்னுதன் எண்ணம். ஆனுல், கந்தனுக்குத் தன்னுடைய வேலே பிடிக்கவேயில்லே. ஒரு பெரிய எழுத்தாளனுக வேண்டுமென்ற ஆசை அவனுக்கு இருந்தது. போலீஸ் கோர்ட்டு கேஸ்களேயும், காங்கிரஸ் தேர்தல் கூட்டங்களேயும் ரிப்போர்ட் செய்யவேண்டியிருந்ததால் அவனுக்கு இது சிறிதும் பிடிக்கவில்லே. அவனுடைய முக்கிய நோக்கம் பிரபல மாத, வார சஞ்சிகைகளில் கதைகள், கட்டுரைகள் எழுதவேண்டுமென்பதே.

சிறிது நேரத்தில் வந்த கந்தனேப் பார்த்து, "உன் வேலேதானப்பா! தமாஷாகவிருக்கும். கூடிய சீக்கிரத்தில் நீ உன்னுடைய தினசரிக்கு முக்கிய ஆசிரியராய் விடுவாய்," என்ருன் ஜகன்னுதன்.

"என்ன பயன். பிறர் எழுதும் கட்டுரைகளே யல்லவா படித்துப் பிரசுரிக்க வேண்டும்? ஒருவன் தானுகக் கற்பனு சக்தியின் உதவியைக்கொண்டு சிருஷ்டிசெய்தால்தான் உண்மையில் இலக்கிய வேலே செய்ததாகும்" தமிழ் நாட்டில் நடந்துவரும் இலக்கியப் புதுமலர்ச்சியில் நானும் முன்னணியில் நிற்கவேண்டுமென்று என் பேரவா. "அடுத்தாற்போல் ராஜாமணியைப் பார். என்ன கற்பனே! என்ன நடைத்திறம்! நான் சொல்லுகிறபடி நடக்கிறதா இல்லேயாபார். கூடிய சீக்கிரத்தில் ராஜமணி தமிழில் மிகவும் பிரபலமான கவியாகவும் ஆசிரியராகவும் ஆகப்போகிருன்".

மரகதத்தின் சகோதரனுன ராஜாமணியை ஜகன்னுதன் பார்த்ததில்லேயென்ருலும், கந்தன் அடிக்கடி பேசுவதிலிருந்து ராஜாமணியைப்பற்றி அநேக விஷயங்களே அறிந்துகொண்டிருந்தான். கந்தனும் ராஜாமணியும் திருச்சியில் கல்லூரி நண்பர்கள். ராஜாமணியின் எழுத்துத் திறமையில் கந்தனுக்கு அதிக நம்பிக்கையுண்டு. அவ்வப்போது ராஜாமணியிடமிருந்துவரும் கடிதங்களேயும் அவன், எழு

திய பாட்டுகளையும் கந்தன் ஜகன்னாதனுக்குப் படித்துக் காண்பித்து அவனுடைய வியப்பை அதிகப்படுத்தினான். நாளடைவில் ஜகன்னாதனும் ராஜாமணியை நெடுநாள் பழகிய நண்பன்போல் பாவிக்க ஆரம்பித்துவிட்டான்.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது சிவந்த முகமும், கருத்த மீசையுமுடைய ஒருவர் வருவதைப் பார்த்து இருவரும் எழுந்து நின்றனர். வந்தவர் ஜகன்னாதன் தந்தை பராங்குசம்.

பராங்குசம்:—"என்ன கந்தசாமி! ஆபீஸ் இல்லையா என்ன? வேலை எப்படி யிருக்கிறது?" என்றார் சிரித்துக் கொண்டே.

கந்தசாமி:—"புதன்கிழமை தோறும் எனக்கு லீவ் ஞாயிற்றுக்கிழமைகூட நான் வேலை செய்கிறேனல்லவா?"

"ஆமப்பா வாரத்தில் ஒரு நாளாவது லீவில்லாவிட்டால் கஷ்டம்தான். தவிர பத்திரிகை வேலை எவ்வளவு கடினமானது என்று எனக்குத் தெரியும். என்னுடைய நண்பனொருவன் இப்பொழுது பம்பாயில் பத்திரிகாசிரியனாக இருக்கிறான். அவன் வேலை சிரமம் பாரு; ஒவ்வொரு நாளும் ஒரு திராம் போட்டால்தான் சிறந்த தலையங்கம் அவனால் எழுத முடியும்............அது போகட்டும். என் வீட்டில் சரியான நாட்டுச் சாராயம் சேகரித்து வைத்திருக்கிறேன். வேண்டுமானால் உள்ளே வருகிறாயா........." என்று கந்தனை விருந்தழைத்தார் பராங்குசம்.

கந்தசாமி:—"இல்லை, சாராயத்தைத் தொடவே கூடாதென்று எனக்கு டாக்டர் உத்தரவு."

"அடடா! டாக்டர்கள் சொல்வதையா கேட்கிறாய்? அவர்களுக்கு என்ன தெரியும்? என்னைப்பார். அறிவு தெரிந்தது முதல் நான் குடித்துக்கொண்டுதான் வருகிறேன். என் உடம்பு எப்படி யிருக்கிறது. சர்க்கஸ்களில் சாண்டோவாக அமர்ந்துவிடலாமென்றே எனக்குச் சில சமயங்களில்

தோன்றுகிறது.'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே பாராங்குசம் உள்ளே சென்றார்.

“நாங்கள் திருச்சியிலேயே இருந்திருந்தால் அப்பா இம்மாதிரி குடிக்குப் பலியாயிருக்கமாட்டார்.'' என்று ஜகன்னாதன் பரிதாபத்துடன் கூறினான்.

ஜகன்னாதன் முகத்தைப் பார்த்ததும் கந்தனுக்கு இரக்கம் வந்துவிட்டது. “அதைப்பற்றி நீ ஏன் கவலைப்படுகிறாய். நீ நினைக்கிறதுபோல அவர் அவ்வளவு கெட்டுப்போகவில்லை. அவர்தான் எப்பொழுதும் சந்தோஷமாயும் முகமலர்ச்சியுடனும் இருக்கிறாரே.'' என்று கந்தசாமி தேற்றினான்.

“கையில் பணமில்லாதபோது குடிவெறியில் சந்தோஷமாயிருந்து என்ன பிரயோசனம்? அவருடைய வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதிலிருந்து அதிகமாகக் குடிக்கத் தொடங்கிவிட்டார். மேலும், என் தாயார் கொஞ்சம்கூடக் கவனிப்பதில்லை. அவர் குடிப்பது தப்பு என்றும் சொல்வதில்லை. குடியென்று ஒன்று இருப்பதால்தான் அவர் கெட்டுப் போகிறாரென்று குடியின்மீது குற்றம் கூறுகிறாள்.'' என்று ஜகன்னாதன் தன் தாயாரின் நல்ல குணத்தைப்பற்றிக் கூறி வருந்தினான்.

“சில மாதர்கள் தியாகம் செய்வதற்காகவே பிறந்திருக்கிறார்களப்பா! அவர்களுடைய குணத்திற்குச் சரியாக உன்னைப்போல் தியாகபுத்தியுடைய புத்திரர்களும் பிறந்துவிடுகிறார்கள்'' என்றான் கந்தசாமி.

“என்ன செய்வது, நமது கடமையை நாம் தானே செய்யவேண்டும்'' என்று சிறிது தத்துவ தொனியுடன் ஜகன்னாதன் கூறினான்.

தன்னுடைய பெற்றோரைப்பற்றி ஜகன்னாதன் இவ்வளவு வெளிப்படையாகப் பேசியிருக்கமாட்டான். ஆனால் ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய கவலைகளை சொல்லிக் கொள்வதற்கு ஒரு நண்பன் வேண்டும். கந்தசாமி ஒருவன் தான் ஜகன்னாதனது நெருங்கிய நண்பன். தந்தையின் குடிப்

பழக்கம் நின்றுபோவதற்கு அந்த வீட்டில் பலர் நடமாட்டம் சிறிதும் உதவி செய்யவில்லை. அங்கு வருபவர்களெல்லாம் முக்கால்வாசி குடியர்களே. பணக்காரர்களும் மிராசுதாரர்களுமே அடிக்கடி வந்து தங்குவதால் 'ஹோட்டல்' வேலைக்காரனிடம் பாத்திரத்தைக் கொடுத்தனுப்பி அருகிலிருந்த கடைகளிலிருந்து சாராயம் வாங்கிக்கொண்டு வரச் சொல்லுவார்கள் தாங்கள் நேராகக் கடைக்குச் செல்வது கேவலமா யிருக்குமல்லவா ?

அன்று மாலை, கந்தசாமி க்கையில் ஒரு காகிதத்துடன் வேகமாக வந்தான். அவனுடைய பரபரப்பைக் கண்ட ஜகன்னுதன் ஏதோ விசேஷமிருக்கவேண்டுமென்று உணர்ந்தான். "ஜகன்னுதா ! தொலைந்தது சேகரர் குடும்பம். ராஜசேகரர் தற்கொலை செய்துகொண்டுவிட்டார்."

"என்ன ?"

"ஆம் க்ஷவரக்கத்தியால் கழுத்தை அறுத்துக்கொண்டு இறந்துவிட்டார். குடிதான் காரணமென்று தெரிகிறது. ஆனால் ராஜாமணி உண்மைக் காரணத்தை எழுதவில்லை."

ஜகன்னுதன் திகைத்துவிட்டான். அவன் சேகரர் குடும்பத்தாரைப் பார்த்ததேயில்லை யென்றாலும், கந்தனுடைய பேச்சுகளிலிருந்து அவர்களிடம் அதிகப் பிரியம் கொண்டிருந்தான். இப்பொழுது இந்த விஷயத்தைப்பற்றிக் கேட்டதும், அவனுக்கு உண்மையில் வருத்தம் ஏற்பட்டுவிட்டது.

"அப்படியானல் ராஜாமணி சென்னைக்கு வரமாட்டானு? என்று ஜகன்னுதன் கேட்டான்.

கந்தசாமி "என்னமோ. இந்தச் சம்பவத்தினல் தனக்குத்தான் பொறுப்பு அதிகமாகு மென்று எழுதுகிருன்.

ஜகன்:—"அதற்காக அவன் சோளவந்தானிலேயே இருக்க வேண்டுமா ?"

கந்த:—"ஏதாவது வீட்டோடு இருந்து கவனித்துக் கொண்டால்தானே நல்லது. அவன் ஒரு வேலையிலமர

வேண்டும். குடும்ப ஆஸ்தியில் முக்கால்வாசி போய்விட்டது. ராஜசேகரர், கடைசியில் சீட்டாட்டத்தில் அதிக தொகை தோற்றுவிட்டார். இனிமேல் இலக்கியத் தொழிலே விட்டு விட்டு ராஜாமணி நில விஷயங்களைப் பார்த்துக்கொள்ள நேரிடும்.''

## 5. தேர்தல் பிரச்னே

"நண்பர்களே! நாம் ஒவ்வொருவரும் இந்தியன் என்பதை மறக்க முடியுமா? புராதனம் மிகுந்த பெரிய தேசமாகிய பரத கண்டத்தின் மக்கள் நாம் என்று நினைக்கும்போது எவ்வளவு பெருமையடைகிறோம்! சகோதரர்களே! இப்பொழுது உங்களுடைய தேசாபிமானத்திற்குச் சோதனைக் காலம் வந்திருக்கிறது. ஜஸ்டிஸ் கட்சி என்ற பொதுநல இயக்கத்தின் சார்பாக நான் உங்களை ஒரு கேள்வி கேட்கப்போகிறேன். உங்களுடைய வேலைகளை யெல்லாம் கெடுத்து சுயராஜ்யம் சுயராஜ்யம் என்று சொல்லிப் பசியால் தவித்த மக்களை ஜெயிலுக்கு அனுப்பிக் கஷ்டப்படும்படி செய்த காங்கிரஸுக்கு வோட் கொடுக்கப் போகிறீர்களா? அல்லது உங்களுடைய நலத்தை விரும்பி உங்களுடைய சுகத்தையே முக்கியமாகக் கருதும் உங்களுடைய பிரதிநிதியான ஜஸ்டிஸ் கட்சிக்கு வோட் கொடுக்கப் போகிறீர்களா?'' என்றவுடன் "கேளுங்கள்! கேளுங்கள்!!'' என்ற சப்தமும் கரகோஷமும் முழங்கப் பராங்குசம் தமது பிரசங்கத்தை முடித்துக்கொண்டு மேடை மீதிருந்து இறங்கினர்.

பராங்குசம் இம்மாதிரி அநேக தெருமூலைக் கூட்டங்களில் பேசியிருக்கிறார். இப்பொழுது தேர்தல் சமயம். குடிப் பழக்கத்தை ஒழிக்கவேண்டு மென்னும் காங்கிரஸுக்கும் சர்க்காரோடு சேர்ந்துழைத்து மதுவிலக்கை எதிர்க்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் பெரிய போராட்டம். குடியையே உயிராகக் கொண்ட பராங்குசம் ஜஸ்டிஸ் கட்சியின் சிறப்பைப்பற்றி

பிரசங்கங்கள் செய்தார். இவரும் இவரோடு சேர்ந்தவரும் இம்மாதிரி கூட்டங்கள் முடிந்தவுடன் சிரமபரிகாரத்திற்காக ரெஸ்டாரெண்டுகளுக்குப் போய்விடுவார்கள். அங்குள்ள எல்லா விதமான புட்டிகளும் உடைத்துப் பொது நலத்தைக்கருதும் இந்தப்பிரசங்கிகளால்உபயோகிக்கப்படும். தேர்தல் பிரசங்கங்கள் எங்கும் மும்முரமாக நடந்தன. கூட்டங்கள் அதிகமாக ஆகப் பராங்குசத்தின் குடியும் விருத்தியாயிற்று. அவரைத் தடுக்க ஒருவராலும் முடியவில்லை.

தேர்தல்கள் முடிந்து வோட்டுக்கள் எண்ணப்படும் தினத்தன்று ஜனத்திரள் அடக்க சாத்தியமில்லை. பத்திரிகைகள் அவ்வப்போது மணிக் கணக்காக அனுபந்தங்கள் கொண்டு வந்தன. எண்ணிக்கையைப் பார்க்கப் பார்க்கப் பராங்குசத்திற்குப் பீதியுண்டாய்விட்டது. ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரஸே ஜெயித்துவிடும் போலிருந்தது.

மறுநாள் தேசிய பத்திரிகைகளெல்லாம் சட்டசபையில் காங்கிரஸுக்குப் பெருவாரியான வெற்றியென்னும் செய்தியை அறிவித்தன. இனி அரசியல் காங்கிரஸ் கையில்தான்; சமூக சீர்திருத்தங்கள் வந்துவிடும்; குடி ஒழிந்துவிடும்; என்பதை உணர்ந்த பாராங்குசம் பல இடங்களில் தோல்வியடைந்த பிரதிநிதிகளைக் காட்டிலும் அதிக வருத்தமடைந்தார். தோல்வியுற்ற பிரதிநிதிகளுக்கு அங்கத்தினர் பதவி கிடைக்காத வருத்தத்தைவிட, இவருக்குச் சட்டமூலமாய் மதுவிலக்கு வந்துவிடுமோ என்ற கவலை அதிகமாயிற்று. எங்குபார்த்தாலும் இந்த காங்கிரஸ்வாதிகள் பிறர் குடிப்பதில் தலையிட்டுக் கொண்டு என் பேசவேண்டும்? யார் எப்படிப் போனலென்ன? இந்த வருத்தத்தைப் போக்குவதெப்படி? என்று எண்ணிப் பராங்குசம் மீண்டும் குடிப்பார்.

ஆனல் ஒரு வாரத்திற்குள் பராங்குசத்திற்கு சந்தோஷ செய்தி ஒன்று கிடைத்தது. சட்டசபையில் பெரும்பான்மைத் தொகையை யடைந்திருந்த காங்கிரஸ் கட்சி

மந்திரி பதவி ஏற்க மறுத்துவிட்டது. ஆகவே, அதற்கு அடுத்தபடியாக அதிக அங்கத்தினர்கள் கொண்ட கட்சித் தலைவரையே கவர்னர் அழைத்து மந்திரிசபை அமைக்கச் சொன்னார். யார் இருந்தாலென்ன? குடியை ஒழிக்கும் காங்கிரஸ்காரர் மந்திரி பதவி அடையவில்லை. அது போதாதா? பராங்குசத்திற்கு ஆனந்தம் அதைக் கொண்டாடுவது எப்படி? குடியினால் தான். உடனே அவர் குடித்துக் களித்தார்.

## 6. சின்ன ராஜா சென்னை விஜயம்

கந்தசாமி ஒரு சந்தோஷச் செய்தி கொண்டு வந்தான். அவனுடைய கதையொன்று, ஒரு உயர்தர மாதப் பத்திரிகையில் பிரசுரத்திற்கு அங்கீகரிக்கப்பட்டு விட்டது! அது மட்டுமன்று. கந்தன் கொண்டு போயிருந்த ராஜாமணியின் பாட்டுகளிரண்டும் அந்தப் பத்திரிகையின் அதிபரால்புகழ்ந்து பிரசுரத்திற்கெடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்தச் சம்பவத்தைக் கொண்டு ராஜாமணியை எப்படியாவது சென்னைக்கு வரும்படி செய்து விடலாமென்று கந்தசாமிக்கு நம்பிக்கை உண்டாயிற்று. அப்படியே கடிதமும் எழுதினான். தனக்குத்தெரிந்த இருவர் கூடிய சீக்கிரத்தில் இலக்கியஉலகில் புகழடையப் போகிறார்களென்பதைநினைத்து ஜகன்னாதனும் அதிக சந்தோஷமடைந்தான். ராஜாமணி வீட்டுப் பொறுப்பையும் மரகதவல்லியையும் நடேசன் பார்வையில் விட்டு விட்டு வருவதாக எழுதியிருந்தான். தியாகராஜன், ரங்கூனில் வியாபாரத்திலமர்ந்து விட்டான். ஆகவே நடேசனும், மரகதவல்லியும் தான் சோளவந்தானில் இருக்கவேண்டும்.

அடிக்கடி மரகதவல்லியைப் பற்றிக் கேள்விப்பட்ட ஜகன்னாதன் ஒரு நாள் கந்தசாமியை நோக்கி, "மரகதவல்லி எப்படியிருப்பாள்?" வாசிக்கிறாளா? என்று கேட்டான்.

உடனே கந்தசாமி "ஆ, உனக்கு ஏற்ற மனைவியாவாள் மரகதம். என்னைக் கேட்டால் நீ உடனே போய் அவளைக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும்'' என்றான்.

ஜகன்னாதன் வெட்கத்தால் முகம் வெளுக்க, "சரிதான் இந்த வேலையோடு எனக்கு விவாகம்தானா குறைவு?'' என்றான்.

"அப்படியில்லை. சீக்கிரத்தில் யாராவது நல்ல பெண்ணாகப் பார்த்து விவாகம் செய்து கொள்வதுதான் உன் போன்றவர்களுக்கு நல்லது. நீயோ இதுவரை ஒரு பெண்ணோடும் பேசியதுகூட இல்லை'' என்று கந்தசாமிகூற, அப்பேச்சு இயற்கைக் காதல் என்னும் கட்டிலடங்காத விஷயத்தில் இறங்கிற்று.

ஒவ்வொரு வாலிபனும் வெட்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடாது என்பதும், அநேக பெண்களோடு நட்புக்கொண்டாடி, தன்னுடைய மனோபாவத்தை விஸ்தாரமாக்கிக் கொள்ளவேண்டுமென்பதும், கந்தசாமியின் கொள்கை. இதோடு மனோதத்துவ நுணுக்க விஷயங்களைபற்றியும், ஜகன்னாதனுக்குக் கூறி, அவனைப் போல ஒரு பெண்ணையும் நேசித்து விளையாடாமலிருப்பது தப்பென்றும் தெரிவித்தான். தன் தத்துவத்துக்குத் திருஷ்டாந்தமாகத் தான் நேசித்த பெண்களைப்பற்றியும் அந்த விஷயத்தில் தன் அனுபவங்களைப் பற்றியும் சவிஸ்தாரமாகக் கூறினான். பின்னும், நாடகத்திலும் சினிமாவிலும் ஆடும் பல பெண்கள் இருக்குமிடம் தனக்குத் தெரியுமென்றும், அவர்களிடையில் ஜகன்னாதன் சென்றால், சந்தோஷத்தோடு வரவேற்பார்களென்றும் கூறினான்.

ஜகன்னாதனோ சிரித்த வண்ணம், ஏதோ பதில் சொல்லி விட்டுப் பேச்சை மாற்றிவிட்டான்.

மறுதினம் கந்தசாமி தன்னுடைய மாமன் முதலிய வயது முதிர்ந்த பந்துக்கள், தான் சென்னைக்கு வருவதை அங்கீகரித்து விட்டதாகவும், தான் சென்னையில் இலக்கியத்

தொழிலில் ஈடுபடப்போவதாகவும், ராஜாமணியிடமிருந்து வந்த கடிதத்தைக் கொண்டுவந்து ஜகன்னாதனுக்குக் காண்பித்தான். ஜகன்னாதனுக்கு சந்தோஷம் அதிகமாயிற்று. தனக்கு அம்மாதிரி யாராவது அனுமதி கொடுத்தால் எப்படியிருக்குமென்று நினைத்துப் பார்த்தான். ஆனால், ராஜாமணியோ தான் இலக்கியத்திற்காக உயிரையே தியாகம் செய்பவனைப் போல் பாவித்துக்கொண்டு எழுதியிருந்தான்.

நண்பர்களிருவரும் ராஜாமணி வந்தால் தங்குவதற்கு ஒரு அறை ஏற்பாடுசெய்ய முயன்றார்கள். ஜகன்னாதனுடைய தாயாருடன் கலந்துபேசி ஒரு அறையை அழகாகத் தயார் செய்து வைத்தார்கள். ஏனெனில், ராஜாமணி ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆடம்பர வாழ்க்கையை அனுபவித்தவ னல்லவா?

பிறகு இருவரும் நெடுநேரம் ராஜாமணியைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். ராஜாமணியின் மேதையைப் பற்றிக் கந்தசாமி ஜகன்னாதனுக்கு விரிவாகக் கூறினான். ராஜாமணி, கொஞ்சம் விசேஷபாவனையுள்ள மனிதர்களைக் கண்டால் அவர்களோடு நெடுநேரம் பேசி, அவர்களுடைய தன்மை, மனோபாவம் முதலியவைகளை அறிந்து பிறகு அந்த விஷயங்களைத் தன் எழுத்தில் அழியாச் சித்திரமாக எழுதிவிடுவான். "மேதை, வாழ்க்கையைச் சேர்ந்ததன்று. அது தனியாய்ப் பிரிந்து நின்று வாழ்க்கையைப் பார்வையிடுகிறது. ஆனால், அது வாழ்க்கையின் மத்தியிலுள்ள அற்புதத்தைக் கிரகித்துக்கொண்டு மீண்டும் வாழ்க்கையுடன் ஐக்கியமாகிவிடுகிறது. ராஜாமணி தன் மார்க்கத்தைத் தானே திட்டப்படுத்திக்கொண்டான்," என்று ராஜாமணியின் கற்பனை வளர்ச்சி ரகசியத்தைக் கந்தசாமி எடுத்துக்கூறி, ஜகன்னாதன் வியப்படையும்படி செய்தான்.

ராஜாமணியின் வருகை, பராங்குசம் விடுதியில் பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. ஒன்று, ராஜாமணி ஒரு பெரிய தென்னாட்டுக் குடும்பத்தைச் சேர்ந்தவன்; இரண்டாவதாக அவன் ஒரு பெரிய கவி; அவனுடைய பாட்டுக்கள்

ஒருவருக்கும் புரியாவிட்டாலும், ஒரு பெரிய பத்திரிகையில் வெளி வரவில்லையா? அந்தச் சம்பவமே அவன் வரகவி என்பதற்குப் போதுமான சாட்சியாகும் அன்றோ!

பராங்குசம், அவருடைய மனைவி, ஜகன்னாதன் மூவரும், சில தினத்தில் வந்த ராஜாமணியை அதிக சந்தோஷத்துடன் வரவேற்றார்கள். பராங்குசத்தைப் பார்த்ததுமே, தனக்கு ஏற்ற தந்திரப்பேர்வழி, என்று ராஜாமணி நிச்சயித்துவிட்டான். பராங்குசம் பெரிய மனிதர் முறையில் தனக்குச் சீமைச்சாராயம் கொடுத்து உபசரித்தபோது, ராஜாமணியின் தீர்மானம் வலுவடைந்தது.

ஜகன்னாதன், உலகானுபவந்தெரியாத சிறுவன்; ஆனால், வாழ்க்கையில் அதிசீக்கிரமாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள நேரிட்டுவிட்டது. எல்லோரையும், நம்பும் குணமுடையவன் என்று, பார்த்த மாத்திரத்தில் ராஜாமணி சொல்லிவிட்டான். ஜன்னாதனுக்கோ, ராஜாமணியைக் கண்கூடாகப் பார்த்ததில் ராஜாமணி ஒரு கவிமட்டுமல்ல, எல்லாச் சிறப்பான அம்சங்களும் அமையப்பெற்ற ஒரு பெரிய மேதாவி என்ற உணர்ச்சி தோன்றிவிட்டது.

பராங்குசம் நாகரிக முறையில் ராஜாமணிக்கு மதுபான உபசாரம் செய்தபோது, ராஜாமணி ஜகன்னாதனையும் அவனுடைய தாயாரையுங்கூட உபசரித்தான். அவர்களிருவரும் பானஞ்செய்ய மறுத்தது, அவனுக்குப் வியப்பாகவே இருந்தது.

ஜகன்னாதனுக்குத் தன்னைப்பற்றித் தயக்கமும், சுயமதிப்புக் குறைவும் ஏற்பட்டுவிட்டது. தான் குடிப்பதில்லையென்ற விஷயத்தை, ராஜாமணி மெச்சக்கூடியதாகக் கருதவில்லையென்பதை யவன் உணர்ந்தான். ராஜாமணியைப் போல்தானும் ஆகவேண்டுமென்று, ஜகன்னாதன், அடிக்கடி கனவு கண்டதுண்டு. ராஜாமணியின் முதல் தரிசனமே, தான் ஒரு நாளும் அவனைப்போலிருக்க முடியாதென்பதை ஜகன்னாதனுக்குத் தெளிவுறுத்திவிட்டது.



பராங்குசம் தனக்கு எற்ற பேர் வழி என்றுன் ராஜாமணி. மேலும் மேலும் குடித்தனர்.

பராங்குசமும், ராஜாமணியும் சாராய சாஸ்திரத்தின் பல பகுதிகளையும் பேசிக்களித்தனர். பல ரகமான சரக்குகளின் தன்மையையும் பலனையும்பற்றி ஆராய்ந்தனர். மேலும் மேலும் குடித்தனர்; ஒருவரோடொருவர் சல்லாப வார்த்தைகளாட ஆரம்பித்தனர்.

ஜகன்னாதனோ, குடியர்கள் நிறைந்த உலகில் தனது தனிமையைப்பற்றிச் சிந்தித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். அவன் ஒரு தடவையாவது மதுவை ருசி கூடப்பார்த்தது கிடையாதாகையால், அதனுடைய உற்சாக மூட்டும் சக்தியைப் பற்றி அவனுக்குத் தெரியாது. முந்தி தாயாருக்குக் கொடுத்த வாக்கை மீற முடியுமா? அவளுடைய துக்க வாழ்க்கை அவனுக்குத் தெரியும். கணவனும் குடிகாரன், மகனும் இந்த வழியில் இறங்கிவிட்டால் அவள் அழுது அழுது செத்துப் போய்விடுவாள். அவன் 'ஒருதரம்' கூடக் குடிப்பதில்லையென்று தீர்மானித்துக்கொண்டான். தான் எங்குபோனாலும் இந்த மாதிரி களியாட்டங்களில் கலந்து கொள்ளாமல் இருக்கவேண்டியதே" என்று தீர்மானித்தான். ஆனால், தான் மற்ற வாலிபர்களை விட்டுப்பிரிந்து தனியாய் இருக்க நேரிட்டதற்காகத் தன்னையே வெறுத்துக் கொண்டான்.

வேண்டிய மட்டும் குடித்துவிட்டு ஜகன்னாதனை நோக்கி ராஜாமணி தனக்குப் பசியெடுப்பதாகத் தெரிவித்த போதுதான், ஜெகன்னாதன் தன்னுடைய சிந்தனையிலிருந்து விழித்துக் கொள்வான்.

ராஜாமணியின் இலக்கிய வளர்ச்சி வேகமாக ஆரம்பித்தது. அவனுடைய பாட்டுக்களைப் பிரசுரிக்கஎடுத்துக்கொண்ட பத்திராதிபர் அவனுக்கு ஒரு விருந்தளித்தார். ஒரு பெரிய புத்தகப் பதிப்பாளருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ராஜாமணியின் புத்தகத்தை அந்தப் பதிப்பாளர் பிரசுரிக்க எடுத்துக்கொண்டதற்குக் காரணம், அவருடைய மனைவிக்கு ராஜாமணி பிடித்திருந்தது தான். அது முதல் ராஜாமணி பல விருந்துகளுக்கு அழைக்கப்பட்டான். எல்லோரும் அவனை

அதிக மரியாதையாக நடத்தினார்கள். பல புத்தக விமர்சகர்களையும், ஆசிரியர்களையும் ராஜாமணி சந்தித்தான். தான் சந்திக்கும் மனிதர்களின் மனோபாவங்களை யெல்லாம் புகுத்தி ஒரு புத்தகம் எழுதவேண்டுமென்று மெள்ளத் தீர்மானித்தான். அப்புத்தகத்தில் பாரதியாரின் கற்பனா சக்தியையும், ராஜமய்யரின் சித்திர வன்மையையும் ஒன்றாகச் சேர்த்துப் புகுத்திக் காண்பிக்க வேண்டுமென்பது அவனுடைய எண்ணம்.

பத்திரிகை நிருபன் என்ற முறையில் கந்தசாமியும் ராஜாமணியுடன் விருந்துகளுக்கும் தேக்கச்சேரிகளுக்கும் செல்வது வழக்கம். இருவரும் திரும்பிவந்து ஜகன்னாதனுக்குத் தங்களுடைய அனுபவங்களைப் பற்றிக் கூறுவார்கள். ஜகன்னாதன் வியப்புமிகுந்த களிப்புடன் கேட்டுக் கொண்டிருப்பான்.

இப்படிப்பட்ட சுவையும் களிப்பும் நிறைந்த வாழ்க்கை அதிக நாள் நடந்து வந்தது. ராஜாமணி பிரபலஸ்தர்களைச் சந்தித்ததுமட்டுமல்லாமல் தானே பிரபலஸ்தனாகிவிட்டான். அவனோடு நட்பாடுவதே ஒரு பாக்கியம் என்று மற்றவர்கள் நினைத்தார்கள். அவனுடைய பாட்டுக்கள் புஸ்தகரூபமாக எப்பொழுது வெளிவருமென்று எல்லோரும் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், துரதிர்ஷ்டமும், ராஜாமணியின் நேசத்தை விரும்பிற்று. இதற்கு ராஜாமணியின் புத்தகம் வெளிவந்த தினத்தன்று தான் அது சந்தர்ப்பம் பார்த்தது. அன்றைய தினம் மகாத்மா காந்தியின் முக்கிய அறிக்கையொன்று வெளியிடப்பட்டபடியால், பாவம், ராஜாமணியின் புத்தகம் வெளியானதைப்பற்றிய செய்திகள் பிரசுரிப்பதற்கு இடமில்லாமற்போய்விட்டது. இரண்டொருபத்திரிகைகளில் ஒரு மூலையில் இச்செய்தி பிரசுரமாயிருந்தபோதிலும் காந்திஜியின் அறிக்கை முக்கியத்தில் அதை ஒருவரும் கவனிக்கவில்லை.

சுமார் ஒருவாரம், புத்தகத்தைப்பற்றி ஒருவரும் சிரத்தைஎடுத்துக்கொள்ளவில்லை. அச்சமயம் தமிழ் நாட்டில் ஒரு விமர்சகர் இருந்தார். அவருடைய தூஷணைக்குப் பயந்த ஆசிரியர்களே, அவருடைய புகழ்ச்சியால் பலனடைந்தவர்களைக் காட்டிலும் அதிகமாயிருந்தனர். தமக்கு ஒரு ஆசிரியர் பிடித்திருந்தால் அவருடைய புத்தகத்தைப்பற்றி நன்ருக விமர்சனம் செய்வார். இவருடைய வீட்டிற்கு ஆசிரியர்கள் அடிக்கடி யாத்திரை செல்வது வழக்கம். இவருடைய மதிப்புரைக்கு மதிப்பு உண்டு. ராஜாமணி இவருக்குத் தன் புத்தகப் பிரதியொன்றைப் பிரத்தியேகமாக அதிகமரியாதையுடன் அனுப்பினுன். உடனே ஒரு இலக்கிய வாரப் பத்திரிகையில் ராஜாமணியின் புத்தகத்தைப்பற்றிய மதிப்புரை வெளி வந்தது. இப்புது ஆசிரியரின் நூல் அமைப்பு, கற்பனை வெள்ளம், வர்ணனைத்திறம், முதலியவைகளைப்பற்றி அதிகமாகப் புகழப்பட்டிருந்தது. அது முதல் இலக்கிய ரஸிகர்கள் ராஜாமணியை ஒரு தெய்விக மனிதனுகவே எண்ணிப் பேசத் தொடங்கினர்கள்.

## 7. பிரசாரம்

ராஜாவுக்கு மரகதத்திடமிருந்து அடிக்கடி கடிதங்கள் வரும். 'சின்ன ராஜா' பெரிய கவியானதைப்பற்றி அவளுக்கு அடங்காக் களிப்பு. கடிதங்களில் குடும்பவிஷயங்களைப்பற்றி விரிவாக எழுதுவாள். இதை ராஜாமணிபடிக்க ஜகன்னுதன் ஆவலுடனும் சிரத்தையுடனும் கேட்டுக்கொண்டிருப்பான். ராஜாமணியின் பாட்டுக்களில் சில தனக்குப் புரியவேயில்லையென்று மரகதம் எழுதியதைக் கேட்டதும் தனக்கும், மரகதத்திற்கும் ஒரு பரஸ்பரமான பொதுகுணவிசேஷம் இருப்பதை ஜகன்னுதன் அறிந்தான். மேலும் தன்னைப் போலவே மரகதமும், அவளுடைய அன்பிற்குரியவர்களைப்பற்றி அதிக கவலை கொண்டிருந்ததையும் அவன் உணர்ந்தான். கடிதத்தில் எழுதவேண்டிய விஷயங்களையெல்லாம் எழுதி விட்டு

மரகதம், "ராஜா! உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். அதிகமாய்க் குடிக்காதே. பாவம்! அப்பாவை நினைத்துக்கொள்." என்று முடிப்பாள்.

ஜகன்னாதனும் இதைத்தானே கூறவிரும்புவான். அவன் ராஜாமணியின் அருகிலேயே இருப்பதால் சில சமயங்களில் அவன் அதிகமாகக் குடிக்கிறனென்று அவனுக்குத்தெரியும். ஒரு தடவை ராஜாமணி, கந்தன், ஜகன்னாதன் மூவரும் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டார்கள். ராஜாமணி, ஒரு படத்தை மரகதத்திற்கு அனுப்பி அதில் ஜகன்னாதனைப் பற்றி எழுதியிருந்தான்.

"ஜகன்னாதன் அழகாக இருக்கிறன்" என்று மரகதம் பதிலெழுதியிருந்தாள். அதைப்பார்த்த ஜகன்னாதனுக்கு அன்று முழுவதும் தலைகால் தெரியவில்லை. அவன் கனவில் நடமாடுபவனைப்போலவே காணப்பட்டான்.

இச்சமயத்தில், குடியர்கள் எல்லோரும் ஒரு விஷயத்தைக் குறித்து ஓயாமல் பேசிக் கொண்டிருந்தனர். அதுதான் மது விலக்குப் பிரசாரம். வைசிராய்க்கும் மகாத்மா காந்திக்கும் ஏற்பட்ட சமரஸத்தால் காங்கிரஸ் மந்திரி பதவி ஏற்றுக் கொண்டுவிட்டது. சில சீர்திருத்த வெறிபிடித்தவர்கள், நாட்டிலிருந்து மதுவையே ஒழித்துவிடவேண்டுமென்று முயற்சி செய்தார்கள்! அவர்கள் அநேக ஜில்லாக்களில் கள்ளுக்கடையை ஒழித்தும், கள்ளுக்கடை ஏலங்களை மறியல் செய்தும் வெற்றி பெற்றுவிட்டார்கள். கோடிக்கணக்கான ஏழை மக்கள் ஒரு பொழுது உணவின்றி வருந்தும்போது அவர்களுடைய வரிப்பணத்தின் உதவியால் அவர்களையே குடிக்குழியில் தள்ளுவது அக்கிரமம் என்பது இந்த மது விலக்காளர்களின் கட்சி.

சிலருக்குச் சாப்பாட்டைவிடக் குடியே முக்கியமாக விருந்தது. அவர்கள் இம்மாதிரி சீர்திருத்தத்தினல் தங்களுடைய சுதந்திரம் போய்விடுமென்று ஓல மிட்டு எதிர்ப்பிரசாரம் செய்தார்கள். அவர்களில் பராங்குசம் முக்கியமான

வர். அவர் ஒவ்வொருநாளும் கையில் பத்திரிகையுடன்வந்து ராஜாமணியுடன் இந்த மது விலக்குப்போக்கிரிகளைப் பற்றி ஆத்திரத்தோடு பேசுவார். பிறகு இருவரும் குடிப்பார்கள். இது ஜகன்னாதனுக்குப் பெரிய கவலையை உண்டு பண்ணிற்று. தன் தந்தை ராஜாமணியோடு சேர்ந்து பாழடைவதைத் தடுக்கத் தான் தலையிடலாமா கூடாதா என்ற பிரச்சனையே அவனுக்குப் பெரிதாய் விட்டது.

ஒருநாள் ஜகன்னாதன், ராஜாமணி, கந்தசாமி மூவரும் மதுவிலக்கைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். "ஏதோ சிறிய ஊர்களில், முனிசிபாலிட்டி ஜில்லாபோர்டுமூலம் சாராயக் கடைகளை எடுத்துவிடலாம். சென்னையில் முடியாதப்பா. எத்தனை ஐரோப்பியர்கள்! வடஇந்தியர்கள்! இவர்களை யெல்லாம் சட்ட மூலமாய்க் குடிக்கக் கூடாதென்று சொன்னால் கேட்பார்களா?" என்றான் ராஜாமணி.

"ஏன் காங்கிரஸ் மந்திரி சபை சட்டம் செய்யமுடியாதா?" என்று ஜகன்னாதன் கேட்டான்.

"உடனே ராஜாமணி அம்மாதிரி சட்டம் செய்யவே முடியாது. செய்தாலும் கவர்னர் அங்கீகரிக்கமாட்டார். என்றான்."

ஜகன்னாதன் "கவர்னரை அங்கீகரிக்கும்படி செய்து விடக்கூடாதா? என்றான்."

"ஜகன்னாதா! நீ பேசுவது வெறும் பேத்தல். நீ ஒரு நூற்றாண்டு உயிரோடிருந்தாலும், இம் மாதிரி சட்டத்தைப் பார்க்கப்போவதில்லை." என்று, கந்தசாமி தனக்கு எல்லாம் தெரிந்ததைப்போல் கூறினான்.

ராஜாமணிக்குத் திடீரென ஏகாந்தத்தில் பிரியம் வந்துவிட்டது. அவன் தனிமையிலுள்ள சாரத்தை அனுபவிக்க விரும்பினான். தனியாய் ஒருவருடைய உபத்திரவமும் இல்லாத இடத்திலமர்ந்து புத்தகமொன்று எழுதவேண்டுமென்று நினைத்தான். குடியையும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாமென்ற எண்ணம் உண்டாயிற்று.

அதற்காகச் சோழமண்டலக் கடற்கரையில் ஒரு சிற்றாரில் போய்த் தங்கினன். தன்னுடைய சாராயப்புட்டிகளையெல்லாம் ஒரு பீரோவில் வைத்துப்பூட்டிச் சாவியைக் கந்தசாமியிடம் கொடுத்துக் கந்தன் இஷ்டம்போல் உபயோகிக்கலாமென்று சொல்லிப்போய் விட்டான்.

தான் இருக்கும் ஊரிலிருந்து அடிக்கடி கடிதம் எழுதினன். கடற்கரையின் இயற்கைக் காட்சியைப்பற்றி வர்ணித்து எழுதியிருந்தான். பராங்குசத்தின் வீட்டில் கந்தன் ஜகன்னதன் பராங்குசம் மூவரும் அடிக்கடி ராஜாமணியின் அறையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். அந்த சமயங்களிலெல்லாம் பராங்குசம் ஏக்கத்துடன் சாராயப் புட்டிகளடங்கிய பீரோவைப் பார்ப்பான்.

மதுவிலக்குப் பிரசாரமோ! நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டு வந்து விட்டது. தென்னைமரங்கள் கள்ளிறக்குவதற்கு விடக்கூடாது என்று பேசிப் பெரிய தோட்டக்காரர்களையெல்லாம் இப்பிரசாரகர்கள் தம்மோடு சேர்த்துக் கொண்டார்கள். பொப்பிலி ராஜாவும் ஒன்று சேர்ந்து உதவியளித்தார். கடைசியில், ஏறக்குறைய இருபது ஜில்லாக்களில் தென்னைமரக் குத்தகை நிறுத்தப்பட்டுவிட்டது. இதைக் கேட்டுச் சென்னை நகரமே திடுக்கிட்டு விட்டது.

காங்கிரஸ் காரர்களோ வேறு விதத்திலும் குடியைக் குறைக்க முயன்ருர்கள். அயல் நாட்டுச் சாராயத்தின்மேல் வரியை உயர்த்தி ஒரு சட்டத்தை எப்படியோ நிறைவேற்றிவிட்டார்கள். அன்றுதான் பராங்குசத்தின் வாழ்நாட்களில் மிகுந்த துன்பம் விளைந்ததாயிருந்தது. சாராய விலை அபரிமிதமாக ஏறிவிட்டது. ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் ஏறிக்கொண்டே யிருந்தது. பராங்குசத்திற்கு அவ்வளவு விலை கொடுத்து வாங்கிக் குடிக்க முடியவில்லை.

குளிர்காலம் வந்து விட்டது. ராஜாமணி தன்னுடைய ஏகாந்த வாசத்திலிருந்து சென்னைக்குத் திரும்பிவிட்டான். அவனுடைய தேகம், முன்னைவிட அதிக ஆரோக்கியத்தைக் காண்பித்தது. வந்தவுடன் கந்தனும் அவனும் சந்தோஷ

மாகத் தங்களுடைய சந்திப்பைக் கொண்டாட முற்பட்டார்கள். கந்தனிடமிருந்து திறவுகோலை வாங்கி ராஜாமணி பீரோவைத் திறந்து ஒரு புட்டியை எடுத்தான். இரண்டு கண்ணுடி டம்ளர்களில் சாராயத்தை ஊற்றினுன். திடீரென நிறுத்தி டம்ளரைக் கையில் எடுத்துப் பார்த்தான்.

"கந்தா, புட்டியில் சாராயத்திற்குப் பதில் தண்ணீர் நிரப்பியிருக்கிறதே." என்ருன்.

கந்தன் திடுக்கிட்டு "என்ன? நான் பீரோவை ஒரு முறைகூடத் திறக்கவில்லை. திறவுகோல் என்னிடமேயிருந்தது." என்ருன்.

ராஜாமணி பீரோவிலிருந்து வேருெரு புட்டியை எடுத்துப் பார்த்தான்; அதிலும் தண்ணீர்தான்; பீரோவின் சாவி துவாரத்தைக் கூர்ந்து பார்த்தான். அதில் மெழுகு சிறிது ஒட்டிக்கொண்டிருந்தது.

"யாரோ சாவி துவார அச்சு எடுத்து வேறு சாவி தயார் செய்திருக்கிருர்கள்." என்ருன்.

அருகில் நின்றுகொண்டிருந்த ஜகன்ஞதன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வடிந்தது.

இதைப்பார்த்த ராஜாமணி அவனுடைய தோளின் மேல் கைவைத்த வண்ணம் "என் நேசனே ஏன் வருத்தப்படுகிருய்?" என்று கேட்டான்.

உடனே ஜகன்ஞதன் "ஐயோ, இறந்து விடலாமென்றே எனக்குத் தோன்றுகிறது." என்று சொல்லி விம்மியழுதான்.

"நீ என்னப்பா செய்வாய்? இது அந்தத் திருட்டுப் பயல் வேலைக்காரனுடைய காரியமாயிருக்கலாம்" என்று தேற்றினுன் கந்தன்.

ஆனுல், அவ்வளவு சுலபமாய் ஜகன்ஞதன் தேறுதலடைந்து விடவில்லை. இன்னும் அடக்கமுடியாத துக்கத்

துடன் "வேலைக்காரனல்ல..........என் தந்தை............"
என்று மீண்டும் அழுதான்.

ராஜாமணி சிரித்தான். "அந்தப் பேர்வழியா? நல்ல வேடிக்கை செய்தாரப்பா!" என்று ராஜாமணி சமாதான மாகப் பேச முயன்றான்.

ஆனால், ஜகன்னாதன் "சாராயம் விலை யதிகமாகி விட்டது. தந்தையிடத்தில் பணமில்லை. அதனால் இப்படிக் கேவல மான திருட்டுத்தொழிலை..............இதைவிட அவர் இறந்துபோயிருக்கலாம்" என்று வெறுப்புடன் கூறினான்.

ராஜாமணியும் கந்தனும் எவ்வளவு தேற்றியும் கேட்காமல் ஜகன்னாதன், தன் தந்தை திருடிய பொருளுக்கு ஈடு செய்ய வேண்டுமென்று தீர்மானித்தான். அதன் விலை கட்டிலடங்காததாயிருந்தது. ஆயினும், ஜகன்னாதன் தனது தீர்மானத்தில் சிறிதும் தளரவில்லை. இதற்காகத் தன் தாயாரிடத்தில் பணம் வாங்கி ராஜாமணி முக்கியமாக விரும்பும் சாராயத்தை வாங்கிக் கொடுத்தான்.

இந்தக் காரியம் ராஜாமணியைப் பிரமிக்கச் செய்து விட்டது. அவன் ஒரு வேலை செய்தான். ஒரு நல்ல புடவை யொன்றை வாங்கிக்கொண்டு வந்து ஜகன்னாதன் தாயார் அறையில் வைத்து விட்டான். புடவை எந்தக் கடையில் வாங்கப்பட்டதென்று ஒருவருக்கும் தெரியவில்லை. தான் வாங்கவில்லை என்று ராஜாமணி எவ்வளவு மறுத்தபோதிலும், அந்த அம்மாள் உண்மையை ஒருவாறு உணர்ந்து விட்டாள்.

டெல்லிசட்ட சபையில் ஒரு நெருக்கடி வந்துவிட்டது. மதுவிலக்குப் பிரசாரகர்கள் நாட்டுக்கள் இறக்குவதைத் தடுத்தும், அயல் நாட்டுப் பானங்கள் மீது வரியை உயர்த்தியும், வெற்றிபெற்றதோடு நில்லாமல், மதுபானங்கள் வியாபாரமே கூடாதென்றுசட்டம்கொண்டுவரமுயன்றார்கள். எப்படியோ பெருவாரியான அங்கத்தினர்களைத் தங்களோடு சேர்த்துக்

கொண்டுவிட்டனர். இதைத் தடுக்க எதிர்க்கட்சியைச்சேர்ந்த ஒரு சாமர்த்திய அங்கத்தினர் ஒரு திருத்தம் கொண்டு வந்துவிட்டார். அதாவது மது ஒழிப்புச் சட்டம், ஆறு வருஷங்களுக்குள் அகில இந்திய சட்டசபையில் நிறைவேற்றப் பட்டு வைசிராய் அனுமதி பெறுவிட்டால் அதிகாரத்தை யிழந்து விடுமென்பதே.

இந்த ஆறு வருஷங்களுக்குள் ஜனங்களைத் தங்கள் பக்கத்தில் திருப்பி விடலாமென்பது குடியை விரும்பியவர் கள் எண்ணம். இது முதல், டெல்லி சட்டசபையில் இச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய வேலைக்கு மதுவிலக் குப் பிரசாரகர்கள் தீவிரமாய் உழைக்க வாரம்பித்தார்கள்.

ஜகன்னாதனுக்குத்தான் இதில் அதிக சந்தோஷம். ஒன்று தன் தகப்பனார் இனிமேல் குடிக்க முடியாது. இரண் டாவதாகக் குடிக்க வேண்டிய அவசியமின்றி அவர் இனிப் பிறரோடுபழகி அளாவளாவலாம். ஜகன்னாதனது சந்தோஷத் தைக்காணக் கந்தன் ராஜாமணி முதலியவர்களுக்குக் கோபம் தான். ஆனால் பராங்குசத்திற்கு இன்னும் ஏமாற்றம் உண் டாயிற்று. இச்சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆறுமா தத்திற்குள் மற்ற எல்லா ஜில்லாக்களும் தனித்தனி யாகச் சட்டத்தை ஒப்புக்கொண்டுவிட்டன. வரி சையாய் நிறுத்தி வைக்கப்பட்ட பொம்மைகள் ஒன்றின் மேலொன்றாய் விழுந்து எல்லாம் கீழே சாய்வது போல் ஒவ் வொரு ஜில்லாவும் மதுவை ஒழிக்க முன்வந்து விட்டது. மது விலக்கு, வெற்றியடைந்து விட்டது!

## 7. பொற் சிறை

பர்மாவில் அச்சமயத்தில் ஏற்பட்ட பூகம்ப விபத்து சேகரர் குடும்பத்தையும் பாதித்தது. தியாகராஜன் அந்த விபத்தில் இறந்து போய்விட்டானென்று சிறிதுநாட்களுக்கு முன் அவ்விடம் சென்றிருந்த நடேசன் எழுதியிருந்தான்.

நடேசனுக்கும் பல காயங்கள் ஏற்பட்டன. தியாகராஜன் மரணத்திற்காகக் 'கவி' ராஜாமணி அதிகம் வருந்தவில்லை. அவன் தன்னுடைய "பொற்சிறை" என்ற காவியத்தை முடிப்பதிலேயே கருத்தாயிருந்தான்.

"பொற்சிறை", மோஹினி என்ற ஒரு பெண்ணைப் பற்றிய கதை. இந்தக் கதையைப் பற்றிக் கந்தனும் ராஜாமணியும் பேசிக்கொண்டிருப்பதை ஜகன்னுதன் கேட்டிருக்கிறுன். கலியாணமான ஒரு பெண்ணை ஒரு வாலிபன் காதலித்துக் காதலர்கள் இருவரும் தப்பியோடும் போது கணவனுக்கும், காதலனுக்கும் சண்டை வருதலும், கணவன் இறந்துபடுதலும் அந்தச் சோகத்தினுல் காதலி ஏங்கி, காதலனை மணக்க மறுப்பதும் கதையின் முக்கிய அம்சங்கள்.

கதை நன்ருயிருப்பதாக ஜகன்னுதன் கூறியதின் பேரில் அது உண்மைக்கு விரோதமானதென்று கந்தன் கூறினுன். ராஜாமணி சென்னைக்கு வந்தது முதல், ஒரு பெண்ணுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண்ணைப் போற்றவே இந்தக் காவியம். ஒருவனிடத்திலும் சொல்லக் கூடாதென்று ரகசியமாய் வைத்துக்கொள்ள வாக்குறுதி வாங்கிக்கொண்டு கந்தன், ராஜாமணியின் காதல் கதையைப் பற்றிப் பின்வரும் விஷயங்களை ஜகன்னுதனுக்குக் கூறினுன்.

ஒரு நாள் பெருமழையில் ராஜாமணி இரண்டு பெண்கள் நனைந்து கொண்டுபோவதைப் பார்த்து ஒரு மோட்டாரில் அவர்களை ஏற்றிக் கொண்டுபோய் வீடு சேர்ப்பித்தான். அவர்களில் இளையவளான பெண் அதிக அழகாக இருப்பதைப் பார்த்து, முதல் பார்வையிலேயே அவளைக் காதலித்து விட்டான். வீட்டுக்கு வந்ததும், அவளுடைய அழகைப் புகழ்ந்து ஒரு பாட்டு எழுதி, அந்த வீட்டு விலாசத்திற்கு அனுப்பினுன். பாட்டு ஒரு வார்த்தையுமின்றித் திரும்பிவந்து விட்டது. உடனே அந்தப் பெண் சிறையிலடைபட்டவளைப் போல் நடத்தப் படுகிறுளென்பதை உணர்ந்தான். அடிக்கடி அவளுடைய வீட்டுக்குச் சென்று சுற்று முற்றும் காத்திருந்து, அவள் ஒரு பணக்கார வியாபாரியின் மனைவி,

கணவன் அனுமதியின்றி எங்கும் போகமாட்டாள் அவளுக்கு செல்வத்தால் ஏற்படக்கூடிய ஆடம்பரங்களெல்லாமிருந்தும், சந்தோஷங்கிடையாது. வேறு மனிதன், உள்ளே வந்துபோவதை வீட்டு எஜமான் அறிந்தால் அவருக்குக் கட்டிலடங்காத கோபம் வந்துவிடும். அவர் தனது வாழ்க்கையில், ஆண்களேயோ பெண்களேயோ நம்புவது கிடையாது என்பவைகளேயும் தெரிந்துகொண்டான்.

அவ்வீட்டு வேலேக்காரி ஒருத்திக்கு லஞ்சம் கொடுத்துத் தன் பாட்டை நேராக அவளுக்கு அனுப்பினுன். உடனேப் பாட்டைப் புகழ்ந்து, அவள் பதில் எழுதினுள். இருவருடைய பரஸ்பர காதலுக்கும் அது அஸ்திவாரமாய் விட்டது.

ஆனல் அவளே வெளிப்படையர்கச் சந்திக்க முடியுமா? அது தான் கஷ்டம். இதற்கு ராஜாமணி ஒருவழி கண்டுபிடித்தான். அந்த வீட்டுக்கு அடுத்தாப் போல, ஒரு பெரிய கட்டிடம். அந்த வீட்டு மேல்மாடிக்கு நேராக இந்தக் கட்டிடத்தில் ஒரு அறையிருந்தது. இரண்டு வீடுகளிலும், எதிர் எதிராக இரண்டு ஜன்னல்கள் உண்டு. ராஜாமணி இந்தக் கட்டிடத்தின் அறையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டான். ஒருபெரிய பலகையைப் பாலம் போல் இரண்டு ஜன்னல்களுக்குமிடையில்வைத்துப் "பொற்சிறை"க்குள்சென்றுவிட்டான். பொற்சிறையின் அழகிய கைதியும், அவனே அன்போடு வரவேற்றுள். இம்மாதிரி போக்கு வரத்து அநேக நாட்களாய் நடந்து கொண்டுவந்தது. கடைசியில் "பொற்சிறை" யின் வேலேக்காரர்கள் ராஜாமணியைப் பார்த்துவிட்டார்கள். தன் சாமர்த்தியத்தால் ராஜாமணி தப்பியோடி வந்துவிட்டான்.

ஆனல் பொற்சிறை மோகினி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள். இன்னெரு குழந்தையும் பிறக்கப் போகிறது என்று முடித்தான் கந்தசாமி.

உடனே ஜகன்னுதன் "அந்தப் பெண் தன்னுடைய கணவனே விட்டு விலகி ஏன் ராஜாமணியை விவாகம் செய்து

கொள்ளக் கூடாது?'' என்று கேட்டான். அதன்பின், கந்தசாமி அலக்ஷ்யமாய்க் குழந்தை பிரசவத்தைப்பற்றிக் கூறியதைக் கேட்டு ஜகன்னாதன் திகைத்துப் போய்விட்டான்.

உடனே கந்தசாமி "மேதாவிகள், கவிகள், இவர்களுக்கெல்லாம் விவாகம் ஏற்றதல்லப்பா: ராஜாமணி அவளை விவாகம் செய்துகொண்டிருந்தால் அவனுடைய மேதை மழுங்கிப்போயிருக்கும்.'' என்றான்.

பின்பு ஜகன்னாதன் "ஆனால் அந்தக் குழந்தை!'' என்றான்.

"ஓ! மோகினிக்குக் குழந்தை பிறந்திருப்பது அவளுக்குச் சந்தோஷம்தான். அவளுடைய கணவன் குழந்தை தன்னுடையதென்று தான் நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆகவே எல்லோரும் இப்பொழுது சந்தோஷமாயிருக்கிறார்கள்'' என்ற கந்தசாமியின் முடிவுரையைக் கேட்ட பரிசுத்த மனமுடைய ஜகன்னாதனுக்கு இதைப்பற்றி என்ன நினைப்பதென்று தோன்றவில்லை.

பூகம்பத்தில் காயமுண்ட நடேசன் சென்னைக்கு வருவதாக எழுதியிருந்தான். அவனைச் சந்திப்பதற்காக மரகதவல்லியும், அவளுடைய தாயாரும் சென்னைக்குவரப்போகிறார்கள் என்பதை அறிந்ததும், ஜகன்னாதனுக்கு, சந்தோஷ உணர்ச்சி உண்டாயிற்று. கடைசியில் ராஜாமணியின் சகோதரியான இந்த அற்புதமான பெண்ணை அவன் பார்க்கப்போகிறான்!

தன்னுடைய தாயாரும், சகோதரியும் வசிப்பதற்கு ராஜாமணி ஒரு வீடு தேடினான். அவன் மாத்திரம் பராங்குசம் விடுதியைக் காலி செய்துவிடப் போவதில்லை. இரண்டு இடங்களிலும் இருந்துகொண்டு வருவான். அடிக்கடி மரகதமும் தாயாரும் பராங்குசத்தின் விடுதிக்கு வருவார்கள்.

அவர்கள் வந்தவன்று ஜகன்னாதன் அவர்களுடைய இருப்பிடத்திற்குப் போயிருந்தான். ராஜசேகரர் மனைவி

அதிக செல்வாக்கான வாழ்க்கையிலீடுபட்டவளென்று அவளுடைய பழக்கவழக்கங்களிலிருந்து தெரிந்தது.

மரகதம் கொடிபோன்ற மெல்லிய சரீரமும், கறுத்த கூந்தலும், சிற்பப்பதுமைபோன்ற அழகான அவயவங்களும் அமையப் பெற்றவள். அவளுடைய கண்களும், பொதுத் தோற்றமும், அவளுடைய அன்பு மிக்க தன்மையையும், புத்தி சாதுர்யத்தையும் அறிவித்தன. அவளுடைய பேச்சு இனிமையாயிருந்ததோடுகூட ஒருவித பெருந்தன்மை யையும் காட்டிற்று. இது ஜகன்னுதன் கண்ட காட்சி. அவன் அடிக்கடி அவளைப் பார்த்துக் கொண்டேயிருந் தான். அவளும், "நீதானு ஜகன்னுதன்!" என்று கேட்பவ ளைப்போல அவனைத் தன் அழகிய கண்களால் பரீக்ஷித்துக் கொண்டேயிருந்தாள்.

அவர்கள் சாப்பிட்ட பிறகு ராஜாமணி வழக்கம்போல் சாராயப்புட்டியை உடைத்தான். விலைதான் அதிகமே ஒழிய சாராயம் இன்னும் கிடைத்துக் கொண்டுதானிருந்தது. இந் திய சட்டசபை அங்கீகாரம்வரை பணம் இருப்பவர்கள் குடிக்கலாம். இதைப் பார்த்துக் கொண்டிருந்த மரகதம், ஜகன்னுதனைப் பார்த்து, "நீங்கள் குடிப்பதில்லை என்பதைப் பற்றிக் கேட்க எனக்கு அதிக சந்தோஷமாயிருக்கிறது" என்ருள்.

"அது மாத்திரமா, என்னையும் குடிக்கக்கூடாதென் கிருனே என்ருன் ராஜாமணி.

"அவர் சொல்வதுதான் சரி. அவரைப் பரிகாசம் செய் யத்தான் தெரிகிறது உனக்கு" என்று சொல்லிவிட்டு ஜகன் னுதன் பக்கம் திரும்பி மரகதம், "ரொம்ப நாளாக என் சகோதரர்களைக் குடியிலிருந்து விலக்க முயன்றேன். ராஜா மணியிடம் என் முயற்சிகள் பலிக்கவில்லை. ஆனல் நடே சன் வாக்குறுதி கொடுத்தபடி குடிக்காமலே இருந்து வருகி ருன்." என்ருள்.

நடேசன் அச்சமயத்தில் ஜெனரல் ஆஸ்பத்திரியில் தன் காயங்களுக்காகச் சிகிச்சையில் இருந்தான்.



நீ தானா ஜகன்னாதன் !

"நீங்கள் சென்னையிலேயே இருந்திருந்தால் நான் சொல்லுவதற்குப் பயப்பட்ட விஷயங்களையெல்லாம் சொல்லி ராஜாமணியைத் திருப்பியிருப்பீர்கள்.'' என்றான் ஜகன்னாதன்.

"சாராயம் முதலிய பானங்கள் எங்கேயும் கிடைக்காமல் போய்விடவேண்டும்; அப்பொழுது தெரியும்!" என்றாள் மரகதம்.

கவர்னர் சட்டத்தை அங்கீகரித்தால் உங்களுடைய தவம் நிறைவேறும்." என்றான் கந்தசாமி.

"ஒவ்வொரு ஜில்லாவிலும் நடக்கும் வேலைகளைப் பார்த்தால் கூடிய சீக்கிரம் அங்கீகாரம் கிடைத்துவிடும் போலல்லவா இருக்கிறது'' என்று சற்றுக் கோபத்துடன் கூறினான் ராஜாமணி.

"இந்தச் சீர்திருத்தப் பயல்கள் அக்கிரமம் செய்து ஜில்லாபோர்டு, முனிசிபாலிடிகளில் தங்கள் கட்சி அங்கத்தினர்களைச் சேர்த்து விட்டார்கள்'' என்று குற்றம் சாட்டினான் கந்தசாமி.

"பின் எப்படிச் சீர்திருத்தம் கொண்டுவருவது? வாக்காளர்களுக்குக் கெட்ட விஷயத்தின் பலன்களை எடுத்துக் கூறி அவர்களுடைய வோட்டுகளைப் பெற்றுத்தானே சீர்த்திருத்தம் செய்யவேண்டும்." என்று அரசியல் ஞானம் விளங்கக் கூறினாள் மரகதம்.

"ஆனால் பலன் என்ன? சட்டசபைகளில் இந்த மாதிரியான முதுகெலும்பில்லாத மதுவிலக்குத் திருட்டுப்பயல்கள் தானே நிறைந்துவிடுகிறார்கள்'' என்று கந்தசாமி கூறியதற்குப் பதிலாக மரகதம், "அவர்கள் உங்களுடைய மனப்போக்குப்படி நடக்கவில்லையென்று அவர்களைத் தூஷிக்கவேண்டுமோ?'' என்றாள்.

"மரகதவல்லி, நீங்கள் நான் நினைக்கும்படியான விஷயங்களைத் தைரியமாய்க் கூறுவதற்கு வந்தனமளிக்கிறேன். நீங்கள் மாத்திரம் இங்கே இருந்திருந்தால் நான் சொல்லிய

போது கேட்காத இவர்களை நல்வழிப் படுத்தியிருப்பீர்கள்" என்று ஜகன்னுதன் களிப்புடன் கூறினுன். அவனுக்கு மரகதவல்லியைப்பற்றி வியப்பும் சந்தோஷமும் அதிகரித்துக்கொண்டேவந்தன. 'என்ன ஆச்சரியம்! குழந்தைபோல் தோன்றும் இந்தப் பெண், தான் நினைப்பதைத் தைரியமாய் வெளிப்படச் சொல்லுகிருளே! தன்னைக் கர்நாடகமென்று நினைத்து விடுவார்களோ வென்னும் பயம் இவளுக்குச் சிறிதும் இல்லையே!' என்று ஜகன்னுதன் தனக்குள் நினைத்தான்.

ஜகன்னுதனைச் சௌகரியப்பட்டபோதெல்லாம் தன்னை வந்துபார்க்கும்படி மரகதம் கூறியிருந்தாள். ஜகன்னுதனுக்குக் கொஞ்சம் தயக்கம் உண்டு. ராஜாமணியிடம் கேட்டான். ராஜாமணி அடிக்கடி வந்து மரகதத்தை அழைத்துக் கொண்டுபோய் நகரத்தில் விசேஷமான இடங்களைக் காண்பிக்கச் சொன்னுன். ஜகன்னுதனும் மரகதத்தைக் காட்சிச் சாலைகள், மீன்காலேஜ், செத்த காலேஜ், உயிர்க் காலேஜ், சினிமா முதலிய இடங்களுக்கு அழைத்துச் சென்றுன்.

ஒருநாள் ராஜாமணியின் காவியத்தைப்பற்றி இருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"எனக்கு என்னமோ அந்தக் கதை புரியவேயில்லை. "பொற்சிறை" நல்லபெயர்தான்; ஆனுல் விவாகமென்பதைத்தான் பொற்சிறை யென்று ஒப்பிட்டு எழுதியிருக்கிறது. அப்படித்தானே!" என்று கேட்டாள் மரகதம்.

"ஆம். அதாவது எல்லாம் விவாகங்களாகி விடுமா? மோகினிக்கு விவாகம் குழந்தைப் பருவத்திலேயே ஆய்விட்டது. அவள் அநேக வருஷங்களுக்குப் பிறகுதான் காதல் என்பதை உணர்ந்திருப்பாள். அதனுல் அவளுடைய விவாகம் சிறை போலத்தானே இருக்கும்" என்று உண்மையையறிந்த ஜகன்னுதன் விளக்கினுன்.

"இருக்கும். எனக்குக் கொஞ்சம்கூட அது பிடிக்கவில்லை. நான் கர்நாடக மனுஷிதானே" என்று தன் கருத்தை வெளியிட்டாள் மரகதம்.

# 8. சாராயத்திற்குச் சாவுமணி

மரகதத்துக்கும், அவளுடைய தாயாருக்கும் பராங்கு சத்தின் விடுதியில் ஒரு விருந்து அளிக்கப்பட்டது. பல பிர பலஸ்தர்கள் வந்திருந்தார்கள். பெரிய குடும்பத்துப் பெண்க ளல்லவா அவர்கள்? விருந்து முடிந்ததும் பராங்குசம் விளை யாட்டாகப் பேசிக்கொண்டிருந்தார். குறிப்பாக ராஜாமணி யிடம் என்னென்ன கூறியும், அவன் சாராயப்புட்டிகளை எடுக்க மறுத்துவிட்டான். அன்று பெண்கள் அதிகமாக வந்திருந்தபடியால், ராஜாமணி மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று தீர்மானித்தான்.

ராஜாமணியின் தாயார் அவனுடையஅறையைப்பார்க்க வேண்டுமென்று கூறினள். எல்லோரும் மேல்மாடிக்குச் சென்ருர்கள். ராஜாமணியின் அறையினுடைய சௌகரி யத்தையும் அழகையும் வியந்து, அவனுடைய தாயார் ஜகன் ஞதனுடைய தாயாருக்கு வந்தனமளித்தாள்.

பராங்குசம் சாராயப் புட்டிகளடங்கிய பீரோவையே ஆவலுடன் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் ஜகன்ஞதனுக்குத் துக்கமும் அவமானமும் தோன்றின. பராங்குசமோ எப்படியாவது சாராயம் பெறவேண்டு மென்ற எண்ணத்தினல் “ராஜாமணி, உன்தாயாருக்கு உன்னுடைய பொக்கிஷத்தைக் காண்பிக்க வேண்டாமா?” என்ருர்.

ஜகன்ஞதன் அவரருகிற் சென்று, மெல்லிய குரலில் “மானத்தைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம், பேசாமலி ருங்கள்.” என்ருன். பராங்குசம் கோபமடைந்து வெளி யில் சென்றுவிட்டார்.

சுண்டைக்காய்ப்பயல்! என்ன அதிகப்பிரசங்கித்தனம். இவனுடைய அகம்பாவத்தைக் கண்டு சகிக்காமல் தானே குடிக்கவேண்டியிருக்கிறது! மதுவிலக்குக்கே ஒரு அடிப்படை யான இந்தப்பயலால் தான் தேசம் முழுவதும் குடிக்க

நேருகிறது! என்று பல எண்ணங்களை எண்ணிக்கொண்டு சென்றார் பராங்குசம்.

நடேசனுக்கு உடம்பு பெரும்பாலும் குணமாய் விட்டது. சிறிது காலம் சிரமபரிகாரம் செய்துகொண்டால் முற்றிலும் குணமடைந்து விடுவான். சோளவந்தானுக்குப் புறப்பட ஏற்பாடாயிற்று. மரகதமும், தாயாரும் கூடப்போக வேண்டியது தானே?

மரகதமும் ஜகன்னாதனிடம் விடைபெற்றுக் கொண்டாள். அப்பொழுதுதான் ஜகன்னாதன் மரகதம் இல்லாவிட்டால் தனக்கு மகிழ்ச்சி இருக்காது என்பதை உணர்ந்தான். மரகதம் ஜகன்னாதனை ஒருமுறையாவது சோளவந்தானுக்கு வந்து தன்னைப் பார்க்கவேண்டுமென்று கூறியபோது ஜகன்னாதன் கண்களில் நீர் ததும்பிற்று.

மர:—"நீங்கள்தான் ராஜாமணியைப் பார்த்துக் கொள்ளவேண்டும்." என்றாள்.

ஜக:—"எனக்கும் ஆசைதான். ஆனால் ராஜாமணி நான் சொல்வதைக் கேட்டாலல்லவோ." என்றான்.

"ராஜா, ஜகன்னாதம் சொல்லியபடியெல்லாம் நீ நடக்க வேண்டும். உன்னைப்பற்றிய நடவடிக்கைகளை அவர்தான் எனக்கு எழுதுவார்." என்று மரகதம் உத்திரவிட்டாள்.

ராஜாமணி சிரித்துக்கொண்டே "அப்படியே ஆகட்டும்" என்றான். இது வீண்பேச்சு என்று ஜகன்னாதனுக்குத் தெரியும்.

ரயில் புறப்படும் சமயம். பலஹீனமாய் முகம்வெளுத்துத் தோன்றிய நடேசனை உடம்பைப்பார்த்துக் கொள்ளச் சொல்லி, ராஜாமணி விடைபெற்றுக் கொண்டான். வண்டி நகர ஆரம்பித்ததும் எல்லோருடைய கண்களிலும் நீர்ததும்பிற்று. ஜன்னல் வழியாய் மரகதம் ஜகன்னாதனை நோக்கி வந்தனம் செய்தாள். ராஜாமணிக்குக்கூட ஏதோ உணர்ச்சி தோன்றிற்று. "பொற்சிறை" கதை எழுதியதற்கு தன்னையே வெறுத்துக் கொண்டான்.

மது வியாபாரம் சட்ட விரோதமானதென்று சட்ட சபை நிறைவேற்றிய தீர்மானம், பைத்தியக்காரர் செய்கை யென்று சிலர் நினைத்துக்கொண்டிருந்தார்கள். மேலும் அது கவர்னர் அங்கீகாரம் பெறும்வரை அமுலுக்கு வராதென் பதில் அவர்களுக்கு நம்பிக்கை. மத்திய சட்டசபையில் பல மாகாணப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள். எல்லோரும் ஒப்புக் கொண்டாலல்லவா இது நிறைவேறும்?

ஆனால், இந்த நம்பிக்கையாளர்களைத் திடுக்கிடச் செய் யும் சில சம்பவங்கள் ஏற்பட்டன. மத்திய சட்டசபைத் தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் மது விலக்குப் பிர சாரகர்கள் தங்களுடைய சட்டத்திற்குச் சார்பாக வாக்கா ளர்களிடமிருந்து கையெழுத்து வாங்கிவிட்டனர். நாளுக்கு நாள் இந்தத் தொகுதிகளின் தொகை அதிகமாயிற்று. இரண்டு சட்டசபையிலும் நிறைவேற வேண்டுமானால் அங் கத்தினர்களில் மூன்றில் இரண்டுபங்கு தொகை ஒப்புக் கொள்ளவேண்டும். தொகுதிதோறும் வாக்காளர்கள் கையெழுத்திட்டுத் தங்களுடைய பிரதிநிதிகள் அவசியம் சட்டத்தை ஆதரிக்குமாறு செய்துவிட்டார்கள். இன்னும் இரண்டு தொகுதிகள்தான் பாக்கி. அவைகளும் ஒப்புக் கொண்டு விட்டால், சட்டம் நிறைவேறியதேதான்.

நினைக்க முடியாத காரியம் நடந்து விட்டது! இன்னும் ஒரு வருஷத்தில் மது விலக்குச் சட்டம் அமுலுக்கு வந்து விடும்! இனி கள் இறக்கவோ சாராயம் விற்கவோ கூடாது. மது அரக்கனுக்குக் குழி தோண்டியாய் விட்டது; புதைக்க வேண்டியதுதான் பாக்கி. நகரமெங்கும் குடியர்கள் திடுக் கிட்டுப்போய் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு நின் றார்கள். கோபம் வந்து என்ன செய்வது? தனிமனிதனது சுதந்திரம் போய் விட்டது. ஒருவன் எதைச் சாப்பிடலாம், எதைச் சாப்பிடக்கூடாது என்பதற்குக் கூடவா சர்க்கார் ஆக்கினை! என்பார்கள்.

ராஜாமணியோ சிறிதும் பயப்படவில்லை. இந்தச் சட் டத்தைக் கூடிய சீக்கிரத்தில் ரத்து செய்து விடுவார்கள்

என்று சொல்லிக்கொண்டிருந்தான். தவிர சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னுலேயே வேண்டிய அளவு சரக்கை வாங்கி ஒளித்து வைத்துக் கொள்ளலாம் என்று நம்பிக் கொண்டிருந்தான்.

## 9. காம வெறி : வெற்றியின் அறிகுறி !

இந்தச் சமயத்தில் "பொற்சிறை" பிரசுரிக்கப்பட்டது. ஒவ்வொரு பத்திரிகையிலும் இந்தப் புத்தகத்தைப் புகழ்ந்து மதிப்புரைகள் வெளியிடப்பட்டன. ராஜாமணியின் கவிதைத் திறத்தையும், வார்த்தைச் சித்திரத்தையும் மிகைபடப் புகழ்ந்தனர். கதை முழுதும் பாய்ந்த உணர்ச்சி வெள்ளத்தை விமர்சகர்கள் விசேஷமாகக் குறிப்பிட்டனர்.

சென்னையில், செல்வத்துக்காகவும், பெருமைக்காகவும் வயது முதிர்ந்தவர்களை மணந்த பெண்கள் ஏராளமாயிருந்தனர். புது நாகரீகத்திற்கு அறிகுறியான புடவைகள், மோட்டார் வண்டிகள், முதலியவைகள் எல்லாம் இவர்களுக்கு வாய்த்திருந்தன. இந்தப் பெண்களுக்கு காமவெறி கொண்ட நாவல்கள் படிக்கவும், சினிமாக்களுக்கும், நாடகங்களுக்கும் போகவும், வேண்டிய நேரம் இருந்தது. இவர்களுடைய கணவர்களுக்கு, இவர்களுடைய செலவிற்காகப் பணம் சம்பாதிப்பதற்கே நேரம் சரியாயிருந்தது. இம்மாதிரியான வீடுகளில் கணவனும் மனைவியும் சந்திக்கும் போது மனைவி எவ்வளவு ஸ்வாரஸ்யமான விஷயங்களைப்பற்றிப் பேசினுலும், கணவனுக்குப் பணம் சேகரிக்கும் வழியைப் பற்றிப் பேசுவதுதான் பிடிக்கும். ஆகவே, மனைவிக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிடும். தான் செய்துகொண்ட விவாக விதியின் படி நடக்கவேண்டியது அவசியமா என்ற சந்தேகம் கூட மனைவிக்குத் தோன்றிவிடும்.

இந்த கோஷ்டியைச் சேர்ந்த ஸ்திரீகள் 'பொற்சிறை'யின் கதையைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் விரைந்துபோய் ஒரு

புத்தகம் வாங்கிக் கொண்டுவருவார்கள். மனப்பதைப்புடன் அதைப்படிக்கும்போது அதில் தமது பிரசனேயே கதையாக எழுதப்பட்டிருப்பதாக நினைத்துக்கொள்வார்கள். தைரியமிருந்தால் கதையில் நடந்தமாதிரியே செய்திருப்பார்கள். கதை ஒரு தூண்டுதலாயும், தாம் சிறையிலிருந்து விடுதலைபெற ஒரு வழியாகவுமே அவர்களுக்குத் தோன்றும்.

மரகதத்திற்கு அந்தக் கதை புரியவில்லை. ஆனால் அவள் ஒருத்தி தவிர மற்றெல்லாப் பெண்களுக்கும் நன்றாகப்புரிந்து விட்டது. வேலை மீது கவனமாயிருக்கும் கணவனை மோசம் செய்யும் மனைவிக்குப் பொற்சிறைக் கதாநாயகியின் பெய்ரைப் பட்டமாகக் கொடுப்பது ஒரு வழக்கமாய் விட்டது.

இதுமட்டுமல்ல, ராஜாமணியின் உண்மைக்காதல் கதையும் எப்படியோ வெளியாய் விட்டது. புதுமாதிரி சமூக நடத்தையில் பித்தம் பிடித்த பெண்கள் ராஜாமணியின் நட்புக்கு ஏங்கினர். அழைப்புக் கடிதங்கள், டெலிபோன் செய்திகள், மணிக்கு முப்பது பேராக இப்பெரும் ஆசிரியரைப் பார்க்க வருவோர், இவைகள் அதிகமாயின. ராஜாமணியினால் சகிக்க முடியவில்லை. உணர்ச்சிப் பித்தம் பிடித்த பெண்களிடத்திலிருந்து தப்பித்துக்கொள்ள, அவன் ஒருவரிடமும் சொல்லாமல் எங்கேயாவது போய்விடுவான். அவனைத் தேடிவருகிறவர்களுக்குத் தக்கபடி பதில் சொல்லியனுப்புவதற்கே, பாவம்! ஜகன்னாதனுக்கு வேலை சரியாயிருந்தது!

ராஜாமணியின் இலக்கியப் புகழ் கந்தசாமிக்கு நல்ல பலனையளித்தது. அடிக்கடி ராஜாமணிக்குக் கொடுக்கப்படும் விருந்துகளுக்குப்போய் அவைகளைப்பற்றி எழுதுவதால் அவன் அநேக பிரபலப் பத்திராதிபர்களைச் சந்திக்க நேர்ந்தது. கடைசியில் அவனுக்கு ஒரு பெரிய உயர்தர இலக்கியச் சஞ்சிகையில் இடங்கிடைத்தது. அவனுடைய ஆவலும் பூர்த்தியாய் விட்டது.

பல கூட்டங்களுக்கு ராஜாமணிக்கு அழைப்புக்கள் வரும். அவன் தனக்கு இஷ்டமில்லா விட்டால் ஜகன்னாதனைப் போகச் சொல்லுவான். இலக்கிய உலகத்தைப்பற்றி ராஜாமணியும் கந்தனும் பேசிக்கொள்வதைக் கேட்டுப் பரவசமடைந்த ஜகன்னாதன் இரண்டொரு கூட்டங்களுக்குப் போய் விட்டுவந்து தன்னுடைய அநுபவங்களை, புது விளையாட்டுச் சாமானைப் பெற்ற குழந்தையைப்போன்ற களிப்புடன் கூறுவான். இம்மாதிரி பலசம்பவங்களுக்குச் சென்று ஜகன்னாதன், சமூக முன்னேற்றம் அடைந்து, குடி, சிகரெட் முதலியவற்றை முன்னேற்ற அடையாளங்களாகக்கொண்ட பல பெண்களையும் சந்தித்தான்.

ஒருமுறை ஜகன்னாதன் ராஜாமணியுடன் ஒரு தேக்கச் சேரிக்குச் சென்றிருந்தான். பவுடரும் வர்ணமும் பூசித் தம்மை அழகு படுத்திக்கொண்டதாக எண்ணிக்கொண்டிருந்த இரண்டு பெண்களுக்கிடையில் அவன் உட்கார நேர்ந்தது. ராஜாமணியின் ஓயாத பேச்சையும், அவன்மீது மற்றவர்களுக்கிருந்த மரியாதையையும், விருந்துக்கு வந்தவர்கள் போட்டி போட்டுக்கொண்டு குடிப்பதையும் பார்த்துக் கொண்டு மிகுந்த கஷ்டத்துடன் பேசாமல் காபியைச் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருந்தான் ஜகன்னாதன்.

அருகிலிருந்த பெண் ஒரு நாவல் ஆசிரியை. அவள் ஜகன்னாதனைச் சம்பாஷணைக்கு இழுத்துப்பல விஷயங்களைப் பற்றிப் பேசலானாள். அதில் முக்கியமானது ஆண்களும் பெண்களும் சரிசமானமாக அளவளாவி வாழவேண்டிய தன் அவசியமே. ஜகன்னாதன் அதிக அடக்கமும் நாணமுமுள்ளவன் என்பதையறிந்து, அந்தப்பெண் ஜகன்னாதன் அம்மாதிரி யிருப்பது சரியல்லவென்றும், அவனை உலக அனுபவம் நிறைந்த வழியில் நடத்த ஒரு பெண் அவசியம் வேண்டுமென்றும் நீண்டதோர் பிரசங்கம் செய்தாள்.

ஜகன்னாதன் பயந்து விட்டான். அம்மாது சிரித்துக் கொண்டே, "பயப்பட வேண்டாம் என் கண்ணே! நான் உன்னை அன்பாகவே நடத்துவேன். உனக்குக் கெடுதி செய்யமாட்டேன்" என்றாள்.

ஜகன்னாதனுக்குக் கலக்கமும், கலவரமும் வியப்பும்உண்டாயிற்று. என்ன சொல்வதென்று தோன்றவில்லை. தனக்கு விவாகமாகி விட்டதென்று கூறினால், ரத்து செய்துவிடச் சொல்லுவாள் அந்தப்பெண். கடைசியில் தான் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளப்போவதாகவும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன வென்றும் சொல்லிவிட்டுக் குடிவெறியும், கேளிக்கையும் நிறைந்த அவ்விடத்தைவிட்டு அவசரமாக அகன்றான்.

மரகதம் ஜகன்னாதனை அடிக்கடி கடிதம் எழுதச்சொல்லியிருந்தாள்.ஜகன்னாதனும் கடிதங்கள் எழுதினான். "பொற்சிறை" வெளியீட்டினால் ராஜாமணி அடைந்த புகழைப்பற்றியும் விருந்துகளின் வைபவத்தைப்பற்றியும் எழுதினான். ஆனால், அவ்விருந்துகளில் நடக்கும் கேவலமான செய்கைகளை மாத்திரம் மரகதத்திற்கு எழுத அவன் துணியவில்லை.

மரகதம், நடேசன் உடம்பு முற்றிலும் சௌக்கியமானதைப்பற்றியும், நில விவகாரங்களைப்பற்றியும், அவ்வப்போது எழுதிக் கொண்டிருந்தாள். "ராஜா எப்படியிருக்கிறான்? நல்லவனாக நடந்து கொள்கிறானா? உண்மையை எழுதுங்கள்" என்று எழுதுவாள்.

நாட்கள் செல்லச்செல்ல, இந்த இலக்கியச் சிங்கத்தின் வாழ்க்கை அபரிமிதமான வேகத்துடன் ஓட ஆரம்பித்தது. ராஜாமணியின் நடத்தையைப்பற்றிய உண்மையை எழுதத் தயங்கினான் ஜகன்னாதன். எழுதினால் ராஜாமணிக்குக் கோபம்வரும். ஆனால், மரகதம் ஒருத்தி தான் அவனை வழிக்குக் கொண்டுவர முடியும். என்று ஜகன்னாதனுக்கு ஒரு யோசனை உதித்தது. மரகதத்தைச் சென்னைக்கு வந்து ராஜாமணியின் அருகிலேயே, இருக்கும்படி எழுதலாம்! ஆனால், இந்த யோசனையினால் ஜகன்னாதனுக்கு ஒரு தர்மசங்கடம் ஏற்பட்டது. தன்னுடைய எண்ணத்தையே சந்தேகித்தான். அவன் மனச்சாட்சி அவனை வருத்திற்று. "உண்மையில் மரகதம் உன்னருகில் இருக்கவேண்டுமென்று உனக்கு ஆசை. அதற்காகத்தான் இந்த தந்திரம் செய்கிறாய்" என்று மனச்சாட்சி கூறுவது போலிருந்தது.

ஜகன்னாதன் தன் எண்ணத்தை நிறைவேற்றவில்லை. தன்னாலியின்றமட்டும் ராஜாமணியைத் திருப்பமுயன்றான். இதற்காகக் கந்தசாமியின் உதவியை நாடினான். அவனோ குடிகாரனைக் குடிக்காதே என்று சொல்வது தப்பு என்றும், அப்படிச் சொன்னால் வீம்புக்காகவே குடிப்பானென்றும் சொல்லிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டான். இந்த மனப் பான்மை, ஜகன்னாதனுக்குப் புரியவில்லை. போதாக்குறைக் குப் பராங்குசம் ராஜாமணிக்கு உதவியாக இருந்தார். அவர் ராஜாமணியுடன் சேர்ந்து விட்டால், இருவரையும் யார் நிறுத்தமுடியும்? ஆனால், ராஜாமணி ஜகன்னாதன்மீது இரக்கம்கொண்டு பராங்குசத்திற்கு ஒருநாளுக்கு ஒரு முறைக்குமேல் குடிக்கக் கொடுக்காமல் பார்த்துக்கொண் டான். ராஜாமணிக்கு உண்மையில் ஜகன்னாதன் மீது அன்பும் அனுதாபமும் உண்டு.

ராஜாமணி, வெற்றி ஏணியில் அதிவிரைவாக ஏறி விட்டான். "பொற்சிறையை" நாடகமாகச் செய்யவேண்டு மென்று சிலர் கூறினர். சில நாடக மானேஜர்கள், இதன் பொருட்டு "பொற்சிறை"யின் நாடக உரிமைகளைக் கேட்ட னர். ராஜாமணி தன்னுடைய காவியத்தை ஒருவரிடமும் கொடுப்பதில்லை யென்றும் தானே அதை நாடக ரூபமாக எழுதி, நாடகம் நடத்திவிடுவது என்றும் தீர்மானித்தான்.

இதற்காக அநேக நாட்கள் அறையைவிட்டு வெளியே செல்லாமல், வேலை செய்தான். விருந்தழைப்புக் கடிதங்க ளைப் பார்க்கவும் மறுத்துவிட்டான். இப்பொழுது கீர்த்தி பெற்ற ஆசிரியராகிய ராஜாமணியை ஒருவரும் பார்க்கமுடி யாது. இவ்வாறு நாடகம் எழுதி முடித்தபின், அதை நடத் திக் காண்பிப்பதற்கு, ஒரு மானேஜர், நடிகர்கள் முதலியவர் களைத் தேட வேண்டியதாயிற்று.

இவை சாமான்யமான வேலைகளல்ல. கந்தனும், ராஜா மணியும் இந்த விஷயங்களைப்பற்றி யெல்லாம் பேசி ஆலோ சித்துக்கொண்டிருந்ததை முழுதும் கேட்டுக்கொண்டிருந்த ஜகன்னாதனுக்கு நாடகமேடை நுணுக்கங்கள் யாவும் சீக்

கிரத்தில் தெரிந்துவிட்டன. வருஷக்கணக்காய் நாடகமேடை அனுபவம் பெற்றவனைப்போலானான். புதிய சீன்கள் தயார் செய்யப்பட்டன. உடைகள் தைக்கப்பட்டன. நாள் தவறாது ஒத்திகை நடந்தது.

முதலில் நாடகம் வெளியே ஒரு சிற்றூரில் போடப் பட்டது. பிறகுதான், சென்னையில் நடிக்கப்பட்டது. சென்னை யில் நாடகம் ஆரம்பித்த முதல் நாள், கொட்டகையில் எள் விழ இடமில்லை. இரவு நாடகத்திற்குப் பகல் முதலே டிக்கட் வாங்க ஜனக்கூட்டம் கூடிவிட்டது. பிரபல நகரவாசிகளும் சமூக சீர்திருத்தத்தில் ஈடுபட்ட பிரபல பெண்மணிகளும் வந்திருந்தனர். பட்டுப் புடவைகளும், வைர ஆபரணங் களும், எலக்டிரிக் வெளிச்சத்தில் மின்னிப் பிரகாசித்தன. அரசியல் வாதிகள், பத்திரிகாசிரியர்கள், வியாபாரிகள், வக்கீல் கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் இவர்கள் யாவரும் தம்பதி சகிதம் வந்திருந்தனர். பொற்சிறைக் கைதிகளான மனைவி கள் கதாநாயகி எப்படி அச்சிறையிலிருந்து தப்புவிக்கப்பட் டாள் என்பதை அறியவே ஆவலுடன் வந்தனர். விவாக மானபெண்களின் வாழ்க்கையில் அந்த நாடகம் ஒரு பெரிய மாறுதலையுண்டு பண்ணிவிடும் போல் அவர்களுடைய மனப்பான்மை தெரிவித்தது.

இந்தக் கூட்டத்தார்தான் நாடகம் எப்படி இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பவர்கள். இவர்கள் பார்த்து அங்கீகரித்து விட்டால் அந்தநாடகம் போற்றப்படும் இல்லா விட்டால் அதோகதிதான். இவர்களுக்குப் பணம்தான் பிர தானம். பணத்தினால் கிடைக்கக்கூடிய இன்பம் எல்லாம் இவர்கள் அனுபவித்துவந்தார்கள். கொலை, களவு, குடி, விப சாரம் முதலிய விஷயங்கள் நிறைந்த கதைகளை ரஸித்தார் கள். இவ்விஷயங்களே இவர்களுடைய பிரத்யேக வாழ்க் கையில் நிறைந்திருந்ததால் நாடகமேடையில் காணப்படும் பிரதி பிம்பத்தைக்கண்டு ஆனந்தமடைந்தார்கள். இதை யாராவது ஆக்ஷேபித்தால் இவர்களுக்கு சாதகமான விமர் சகர் கோஷ்டி அப்படி ஆக்ஷேபிப்பவர்கள் கலை வாசனையில்

லாத மூடர்கள் என்றும் பத்தாம் பசலிப் பேர்வழிகளென்றும் பரிகாசம் செய்ய காத்துக் கொண்டிருந்தது.

ராஜாமணியின் நாடகத்தில் இளமையின் காதலைப்பற்றியும், அறியாமை மூடநம்பிக்கை இரண்டையும் அஸ்திவாரமாகக் கொண்ட விவாக வழக்கத்தைப்பற்றியும் எவ்வளவோ உண்மைகள் இருந்தன. ஆனால் தம்மைப் பணத்துக்காக விற்றுக்கொண்ட மனைவிகளுக்குத் தங்களுடைய செல்வபோகத்தோடு தாங்கள் இஷ்டப் படி செய்யலாம் என்னும் உண்மையைக்கண்டறிவதுதான் முக்கியமாயிருந்தது. கதாநாயகியின் உணர்ச்சியில் ஈடுபட்டு அவர்களும் தங்களுடைய மகிழ்ச்சியை ஆரவாரத்தால் தெரிவித்தனர்.

பணங் கொடுத்து மணந்தவர்கள் தங்களுடைய சென்று போன இளமையைப்பற்றிக் கனவு கண்டனர். காதல் உலகத்தில் கிடையாது என்று வெறுப்புற்ற பெண்களுக்கு இந்த நாடகக் காதலைப்பார்க்க ஆச்சரியமாயிருந்தது.

நாடகம் வெற்றிகரமாக நடந்தது. எங்கும் புகழ்ச்சி. சிங்காரரஸம் ஒவ்வொரு காட்சியிலும்ததும்பித் பிரவகித்தது. உண்மையில் சில காட்சிகள் போலீஸ் தலையீட்டினால் நீக்கிவிடப்பட்டன. இந்தக் கதை, வயது வித்தியாசமின்றி எல்லோருக்குமே காமவெறி வளரும்படி செய்துவிட்டது. கதாநாயகி மோகினி தன் கணவனை நிராகரித்து ஒரு பிரசங்கம் செய்துவிட்டுக் காதலனோடுசேரத் தீர்மானிக்கும் காக்ஷி நடக்கும்போது கொட்டகை இடிந்துவிழும்படி கரகோஷம் உண்டாயிற்று. நடிகைக்கு மாலைக்குமேல் மாலை விழுந்தது. அவள் பாடிய பாட்டு மீண்டும் மீண்டும் வேண்டுமென்று கேட்கப்பட்டது.

இவ்வளவுக்கும் காரணமான ஆசிரியர் ராஜாமணி மேடைமீது பகிரங்கமாக கௌரவிக்கப்பட்டார். நாடகம் பார்க்கவந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் அவன்மீது அளவிலாத பிரேமை உண்டாகிவிட்டது. அற்புதமான இந்தக் கதையை உலகத்துக்குக் கொடுத்துச் சிறைப்பட்ட கைதி

களுக்கு உற்சாகமும், விடுதலை நம்பிக்கையும் கொடுத்த அருமை ஆசிரியரைப் போற்ருமலிருப்பார்களா? விமர்சகர்கள் புகழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் எழுதவில்லை.

காமவெறி வெற்றியின் அறிகுறியாகவும் நாகரிகத்தின் முதிர்ச்சியாகவும் கருதப்படுவது விந்தையல்லவா!

## 10. பராங்குசத்தின் பாவம்

நாட்கள் வேகமாகக் கழிந்துகொண்டுவந்தன. மதுவிலக்குச்சட்டத்தை இரண்டு சட்டசபைகளும் அங்கீகரித்துவிட்டன. கவர்னரும் அனுமதி கொடுத்துவிட்டார். இன்னும் இரண்டொரு மாதங்களில் சட்டம் அமுலுக்கு வந்துவிடுமென்று தெரியவந்தது. குடியைவிட்டுப் பிரிய மனமில்லாதவர்கள் பலவேறு விதங்களில் தயார் செய்துகொண்டார்கள். குறிப்பிட்ட தேதிக்குமேல் சாராயம் வாங்க முடியாதாகையால் முதலிலேயே புட்டிகள் கணக்கில்லாமல் வாங்கிச் சேகரித்துக் கொண்டார்கள்.

பாவம் பராங்குசத்தின் நிலைமைதான் பரிதாபமாயிருந்தது. அவருக்கோ ஒரே அடியாய்ச் சரக்குவாங்கப் பணம்கிடையாது. உலகமே அந்த அமுல் தேதியிலிருந்து பாழடைந்துவிடும் என்பது அவருடைய எண்ணம். பணமில்லாததால் வீட்டிலேயே சாராயம் தயார்செய்யலாமென்று முயன்ருர். இதற்காக ஒருநாள் அவர் ஒரு பெரிய தொட்டி வாங்கிக்கொண்டுவந்தார். அதில் பதனியை ஊற்றி கள் இறக்க அவருடைய முயற்சி. ஆனல் இதைப்பார்த்த அவருடையமனைவி தொட்டியை அப்புறப்படுத்திவிட்டாள்.

வந்துவிட்டது கோபம் பராங்குசத்திற்கு. இவ்வளவு கேவலமாக வாழ்க்கை நடத்துவது சரியல்லவென்று அவருக்குத் தோன்றிற்று. தம்முடைய மனைவி பார்க்காத சமயத்தில் உள்ளே சென்று அவளுடைய பெட்டியை உடைத்தார். அதிலிருந்த 100 ரூபாய்களையும் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

இப்படி இவர் வீட்டைவிட்டுச் செல்வது முதல் தடவையன்று. எத்தனையோ தடவை போயிருக்கிறார். ஜகன்னாதன் போய் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறான். இனி இம்மாதிரி சென்றால் கடைசி முறையாகிவிடும் என்று தாயாரும் புத்திரனும் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது ஜகன்னாதன் தன் தந்தை ஊரிலில்லை என்று மற்றவர்களுக்குக் கூறிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டான். சில நாட்களுக்குப் பிறகு ராஜாமணிக்குச் சந்தேகமுண்டாகி ஜகன்னாதனை விசாரித்தான். உண்மையை யறிந்ததும் அவரையழைத்துக்கொண்டு வரவேண்டுமென்றான். ஆனால், ஜகன்னாதன் அதிக சிரத்தை காட்டிக்கொள்ளவில்லை. ராஜாமணிக்கு மனம் பொறுக்கவில்லை. தான் போய்த் தேடியழைத்து வருவதாகக் கூறினான். இன்னும் சில நாட்களில் சட்டம் அமுலுக்கு வந்துவிடுமென்றும் அதன் பிறகு பராங்குசத்திற்குக் குடிக்கச் சந்தர்ப்பம் வாய்க்காதென்றும், இம்முறை எப்படியாவது அவரை மீட்கவேண்டுமென்றும் வற்புறுத்தினான்.

"நீ போகவேண்டாமப்பா! அவர் போகும் இடங்கள் நரகத்திற்குத்தான் ஒப்பாகும். அங்கே போய்த் தேடுவதா நீ?" என்றான் ஜகன்னாதன்.

"தருமபுத்திரர்கூட நரகத்திற்குப் போனதாகப் புராணங்களில் சொல்லியிருக்கிறார்களே நான் போனாலென்ன? தவிர நான் அப்படிச் செல்வதனால், எனக்கு ஏதாவது கதைக்கு விஷயங்கள் கிடைத்தாலும் கிடைக்கக்கூடும்." என்று வாதித்தான் ராஜாமணி.

ராஜாமணி முதலில் அதே தெருவிலிருந்த கள்ளுக்கடைக்குச் சென்று பார்த்தான். அதுதான் பராங்குசம் வழக்கமாகப் போகும் இடம். பராங்குசத்தை அங்கே காணவில்லை. கடற்கரை ஓரத்திலுள்ள பல சாராயக்கடைகளிலும் பார்ப்பதென்று தீர்மானித்தான். இதற்காக ஒருபழைய சட்டையைப்போட்டுக்கொண்டு தலையில் ஒரு துணியைக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். பெரிய ஆசிரியராயிற்றே! யாராவது

பார்த்து அவனுடைய முக்கிய வேலையைக் கெடுத்துவிட்டால்! இரவில்தான் தேடப் புறப்படுவான்.

ஒவ்வொரு குடிக்குகையிலும் நுழைந்து பார்ப்பான். உள்ளே சாராய நாற்றமும் அழுக்கடைந்து கால்மாடு தலைமாடாகப் படுத்துப் பிதற்றிக் கொண்டிருக்கும் மனிதர்களும் தான் அங்குக் காணப்படுவர். ஒவ்வொருவனையும் அருகில் சென்று உற்றுப் பார்த்து அடையாளம் கண்டுபிடிக்கவேண்டியதாயிருந்தது. சாராயக் கடைகள் மாத்திரமல்ல, விபசாரத்தடைச் சட்டத்தை ஏமாற்றும் பொருட்டு ஹோட்டல்களென்ற பெயருடன் பெண் வேலைக்காரிகளை வைத்து நடத்தப்படும் விடுதிகளுக்கும் சென்று பார்த்தான். முகத்தில் மாவும் சிவப்பும் பூசப்பெற்ற பெண்கள், ஒரு ஆடவன் வந்தானென்பதைப் பார்த்ததும், "வாங்களேன் உட்காருங்கள்." என்று உபசாரம் செய்தார்கள்.

இந்தக் கேவலக் காட்சியையுடைய போலி உலகைக் கடந்து மேலும் மேலும் சென்றான் ராஜாமணி. சில விடங்களில் சாராயம் அதிக மலிவாகக் கிடைக்கும். இந்தக்கடைகளில் குடித்து மிஞ்சிய சாராயத்தை யெல்லாம் சேகரித்து வைத்து விற்பது வழக்கம். ஒருவேளைச் சோற்றுக்கும் வழியில்லாத ஏழைக் கூலிகள் கையில் கிடைத்த சில தம்பிடிகளோடு இந்த ஸ்தாபனங்களை நாடி குடித்து உறங்குவார்கள். மறுநாள் போலீஸ் வண்டிவந்து ஏற்றிச் செல்லும். இத்தகைய மோசமான சரக்கை உட்கொண்டால் கண் பார்வையை யிழந்துவிடுவார்கள். ராஜாமணி இம்மாதிரியான இடங்களிலும் பராங்குசத்தை தேடிச்சென்றான். கடைசியில் ராயப்பேட்டையில் ஒரு "டீ" கடையின் பின் கட்டில் பராங்குசத்தைக் கண்டான்.

பெரிய புராதன குடும்பத்தைச் சேர்ந்த பராங்குசம், கைகளில் தலையைச் சாய்த்துக் கொண்டு ஒரு மூலையில் முடங்கிக் கிடந்தார். அவருடைய ஆடை முழுவதும் சொல்ல முடியாத அளவு அழுக்குப் படிந்திருந்தது.

ராஜாமணியைக் கண்டதும் அவர், "ஐயோ ராஜாமணி! நரகவேதனையா யிருக்கிறதே" என்று அழுதார். ராஜாமணி,

ஒரு வேளைதான் பணம் திருடியதைப் பற்றிக் கேட்பானே வென்று பயந்து மீண்டும், "இவர்கள் எனக்கு விஷத்தைக் கொடுத்து விட்டார்களப்பா! என் பணத்தையும் எடுத்துக் கொண்டு என்னைக் கொல்லுகிறார்களே!" என்றார்.

"போகட்டும் வீட்டுக்குப் போகலாம் வாருங்கள்". என்றான் ராஜாமணி.

பராங்:—"ஐயையோ என்னை வீட்டுக்குக் கொண்டு போகாதே. அவர்கள் என்னைக் குடிக்கவே கூடாதென்று சொல்லி விடுவார்கள்" என்றார்.

ராஜா:—"இல்லை நான் பார்த்துக் கொள்கிறேன்." என்றான்.

பராங்:—"இல்லையப்பா! உனக்குத் தெரியாது. அவளும் அந்தப் பயலும் வெறி பிடித்தவர்கள். அவர்களுக்குக் கொஞ்சம்கூட இரக்கம் கிடையாது" என்றார்.

ராஜாமணி "நான் உங்களை நல்ல ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகிறேன்." என்றான்.

பராங்குசம் "வேண்டாம் கடவுளே! ஆஸ்பத்திரியில் ஒரு சொட்டுகூட கொடுக்கமாட்டார்களே" என்று ராஜா மணியின் கைகளைப் பிடித்துக் கொண்டு கெஞ்சியழுதார்.

அவருக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை யுண்டாகும்படி பொறுமையுடன் பேசி, மெல்ல அழைத்துச் சென்றான் ராஜாமணி. அவரைத் தனக்குத் தெரிந்த டாக்டர்கள் இருந்த ஒரு ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்விட்டுப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு வந்தான்.

குறித்த நாள் வந்துவிட்டது. சாராயக்கடைகளெல்லாம் மூடப்பட்டன. அன்று இரவு 12 மணிக்கு மது விலக்கு ஸ்பெஷல் போலீஸ்காரர்கள் புறப்பட்டுத் திறந்திருக்கும் கடைகளை யெல்லாம் பலாத்காரமாக மூடுவார்களென்று பத்திரிகைகள் அறிவித்தன. மதுவிலக்குப் பிரசாரகர்கள் தங்களுடைய வெற்றிக்காகக் கோயில்களிலெல்லாம் பிரார்த்தனைகள் நடத்தினர். சில இடங்களில் இச்சட்டத்

தை மறுப்பதற்கு முயற்சிகள் நடக்கப்போவதாகவும் வதந்திகள் உலவின.

பராங்குசம் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு வந்துவிட்டார். அவர் தன்னுடைய அறையிலேயே உட்கார்ந்துகொண்டு, கோபத்தோடு முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அங்கங்கே பெரும் சாராயக் கடைகள் மூடப்பட்ட செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கப்படிக்க அவருக்குச் கோபம் அதிகமாயிற்று. ஜகன்னாதன் தந்தையிடம் அன்பாகவே இருந்தான். இனிமேல் தந்தை குடிக்க முடியாதல்லவா? தவிர ஜகன்னாதன் சந்தோஷமா யிருப்பதற்கு வேறொரு காரணமும் இருந்தது.

அவனைச் சோளவந்தானுக்கு வரச்சொல்லி மரகதமும் அவளுடைய தாயாரும் எழுதியிருந்தனர். ஜகன்னாதன் தாயாரும், அத்தையும் அவனுக்குப் புதிய உடுப்புக்களெல்லாம் தைத்துக்கொடுத்துப் பணக்கார வீட்டில் நடந்துகொள்ளவேண்டிய முறைகளை எல்லாம் கற்பித்தனர். மரகதம் ஜகன்னாதனை வெறும் மரியாதைக்காக மாத்திரம் அழைக்கவில்லையென்று அவர்கள் ஊகித்தனர். அவன்மீது அவளுக்கு விருப்பம் இருக்கவேண்டுமென்று நிச்சயித்தனர். ஜகன்னாதன், புறப்படவேண்டிய நாள் நெருங்கிற்று. மரகதத்தைப் பார்த்தவுடன் தான் அவளுடன் பேசவேண்டிய விஷயங்களைப்பற்றி இனிய கனவுகள் கண்டான். ஆனால், அவனுடைய ஆகாயக் கோட்டையை விதி இடித்துவிட்டது.

வேலைக்காரன் ஒருவன் ஓடிவந்து ஜகன்னாதனை அவசரமாக அழைத்தான். தம்முடைய அறையில் பராங்குசம் கீழே விழுந்துகிடந்தார். தலையில் ஒரு காயம். ரத்தம் வழிந்துகொண்டிருந்தது. திடீரென பக்ஷவாதத்தால் பீடிக்கப்பட்டு கீழே சாய்ந்துவிட்டார். ஜகன்னாதன் அவரைப் படுக்கையிலிட்டு வேண்டிய சிகிச்சைகளைச் செய்தான். ஆனால், பராங்குசம் எப்பொழுதும் புகார்செய்து கொண்டேயிருந்தார். தம்மிடம் ஒருவரும் பேசுவதில்லை

யென்றும், தம்மை ஒருவரும் கவனிப்பதில்லையென்றும் கூறி அழுது கொண்டேயிருந்தார். அவருடைய வலது கண், கை, கால்—வலது பக்கம் முழுவதுமே உயிரற்றுப் போய் விட்டது. தம்முடைய நண்பர்கள், தம்மைப் பார்க்கவரும் போதெல்லாம் ஒருவருக்கும் தெரியாமல் அவர்களிடம் தமக்குக் கொஞ்சம் சாராயம் வேண்டும் என்று கெஞ்சுவார்.

மேற்கண்ட காரணங்களால் ஜகன்னுதன் தான் வரச் சரிப்படாததற்கு மன்னிக்கும்படி, மரகதத்திற்கு எழுதி விட்டான். மரகதம் வீட்டில் எல்லோரும் அவனுடைய சற் புத்திரத் தன்மையை மெச்சினுர்கள்.

அடிக்கடி கந்தசாமி தன்னுடைய அனுபவங்களை யெல்லாம் ஜகன்னுதனுக்குச் சொல்லிக் கொண்டிருந்தான். ஒரு பிரபலமாத சஞ்சிகையின் விசேஷக் கட்டுரையாளன் என்ற ஹோதாவில் அவனுக்குப் பெருமையும் சந்தோஷ மும் அதிகரித்தன. ராஜாமணியை ஜகன்னுதன் இப் பொழுது அதிகமாய்ப் பார்ப்பதில்லை. அந்தப் பிரபலக் கவிச் சிங்கம் இன்னெரு பெண் விவகாரத்தில் மூழ்கிவிட்டான். இந்தப் பெண்மணி, "பொற்சிறை"யின் கதாநாயகியாக நடிப்பவள். நாளடைவில் நடிகைக்கும், ஆசிரியருக்கும் ஆழ்ந்த நேசம் ஏற்பட்டு விட்டது. நடிப்புக்கேற்ற காதலுணர்ச்சி நடிகைக்கு இயற்கையாகவே தோன்றிவிட்டது போலும்!

ஜகன்னுதனுக்கு வருத்தம் உண்டாயிற்று. இனி ராஜாமணியின் வாழ்க்கை திருந்துவதற்குச் சந்தர்ப்பமில்லா மல் போய்விடும் என்று பயந்தான். ராஜாமணிக்கு இரவும் பகலும் ஒன்றுயிருந்தது. இந்த இராவாழ்க்கையில் முன்னை விடக் குடி அதிகமாக நடமாடிற்று.

இதற்கிடையில் பெரிய வியாபார மந்தம் ஏற்பட்டது. விலைகள் குறைந்தன. விவசாயிகள் விளைந்த தானியங்களை விற்கமுடியாமல் தவித்தனர். மிராசுதாரர்களுக்கெல்லாம் அதிகநஷ்டம் உண்டாயிற்று. இந்த விபத்து ராஜாமணியை யும் பாதித்தது. அவனுடைய நாடகத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவில்லை. மானேஜர், நாடகம் நடத்துவதை

நிறுத்தத் தீர்மானித்துவிட்டார். ராஜாமணிக்கு வருத்தமும் கோபமும் மேலிட்டன. அவனும் அவனுடைய காதலியும் கண்ட கனவுகள் வீணுயின. ராஜாமணி கவியின் இயற்கைக் குணத்தோடு தனக்கு நஷ்டம் ஏற்படுத்திய உலகத்தைச் சபித்தான். திடீரென ஐரோப்பாவுக்குப் போவதென்று தீர்மானித்துவிட்டான். அவன்சென்ற கப்பலில் அவனுடைய நாடகத்தின் முக்கிய நடிகையும் கூடச்சென்ருள். கந்தனும், ஜகன்ஞதனும் அவர்களை வழியனுப்பிவிட்டுத் திரும்பி வரும் போதுதான், கந்தன் அவர்களுடைய காதற் கதையை ஜகன்ஞதனுக்குத் தெரியப்படுத்தினுன்.

வியாபார மந்தத்தால் எல்லோருமே கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். சோளவந்தானிலிருந்தும் இதே செய்தி தான் வந்தது. கரும்புத் தோட்டத்தை விருத்தி செய்வதற்காக நடேசன் அதிகமாகக் கடன் வாங்கியிருந்தான். ஆனுல், விளைந்த தானியம் விற்கவில்லை. மரகதம் முதலியவர்கள், இனிமேல் சோளவந்தானில் வசிக்காமல் சென்னைக்கு வந்து விடுவார்களென்று ஜகன்ஞதன் நம்பினுன். அப்படி அவர்கள் வந்தால் மரகதத்தை விவாகம் செய்து கொள்ளவும் முயற்சி செய்யலாமென்று நினைத்தான்.

படுத்த படுக்கையில் இருந்த பராங்குசம் ஒரு சொட்டு சாராயத்துக்காக ஜகன்ஞதனைக் கெஞ்சினுர். புத்திரனே சாராயம் கிடையாதென்றும் சட்டவிரோத மென்றும் சொல்லி விட்டுப் பேசாமல் இருந்துவிட்டான்.

“என்னுடைய நண்பர்களையாவது வீட்டை விட்டுத் துரத்தாமல் இருக்கக்கூடாதா” என்று பராங்குசம் புகார் செய்தார்.

“நான் ஒருவர் விஷயத்திலும் தலையிடவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது” என்ருன் ஜகன்ஞதன்.

“நீ பொய்சொல்லுகிருய்; முழுப்பொய்” என்று கத்திக்கொண்டே முழங்கையை ஊன்றியவண்ணம் பராங்குசம் படுக்கையிலிருந்து சிறிது எழுந்தார்.

"அனுவசியமாய்க் கத்தக் கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்" என்று எச்சரிக்கை செய்தான் ஜகன்னாதன்.

"கத்தினால் மோசம்போய்விடுமோ? நான் இருந்துதான் என்னபயன்? நீயும், உன்னைச் சேர்ந்த மதுவிலக்கு மூடர்களும் என்னைச் சித்திரவதை செய்கிறீர்களே! உங்களுடைய கொடுமையினால் என்னைக் கொல்லுகிறீர்கள்!" என்று பராங்குசம் மீண்டும் உரக்கக் கூவினார்.

ஜகன்னாதன், பராங்குசத்தின் வார்த்தைகளைக் கவனிக்கவே இல்லை. அறையிலுள்ள சாமான்களை ஒழுங்கு படுத்துவதிலேயே கருத்தாயிருந்தான். அவன் திரும்பியபோது ஒரு கோரமான காட்சியைக் கண்டான். தன்னுடைய தந்தை அசைவற்றுப் போய்விட்டார். இம்முறை அவருடைய சரீரம் முழுதும் பட்சவாதத்தால் பீடிக்கப்பட்டது. குடி நிறைந்த உடலைவிட்டு உயிர் பறந்தோடிவிட்டது. ஜகன்னாதனுக்கு அழத்தோன்றவில்லை. சிறிது நேரம் உயிரற்ற தந்தையை உற்றுப்பார்த்துக் கொண்டு நின்றான்.

தந்தையின் துன்பம் முடிந்துவிட்டது. இனி அவர் குடிக்கவே முடியாது!

## 11. "புது மனிதன்"

மேல் நாட்டிற்குச் சென்ற ராஜாமணியும் அவனுடைய நடிகைக் காதலியும் சந்தோஷ வாழ்க்கையில் மூழ்கிக்காலம் கழிக்கவில்லை. உண்மையில் இருவருக்கும் மனஸ்தாபமும் வருத்தமுமே அதிகரித்தது. ராஜாமணி தன்னுடைய புதிய புத்தகம் எழுதுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தான். அவனுடைய கதா நாயகி, நடித்துக்காட்டுமளவுந் தான் தன்னிடம் அவனுக்குச் சிரத்தையென்றும், அதன் பிறகு தன்னிடம் உண்மைக்காதல் சிறிதும் கிடையாதென்றும் உணர்ந்தாள்.

தன்னுடைய புதிய நாடகத்தின் ஒரு பகுதியை ராஜாமணி கந்தசாமிக்கு அனுப்பினன். கந்தனும், ஜகன்னுதனும் அதைப் படித்தார்கள். இம்முறை பணக்காரர்களைச் சந்தோஷப்படுத்துவதற்காக ராஜாமணி சமூகத்தில் பெரிய மனிதர்களின் வாழ்க்கையைக் காட்டும் கதையை எழுதியிருந்தான். இதில் அவனுடைய கலைத்திறம் குன்றிவிட்டது. சுருங்கச் சொல்லுங்கால் ராஜாமணி கலைக்காகவன்றிப் பணத்துக்காக எழுத ஆரம்பித்துவிட்டான். பணக்காரப் பெண்கள் கற்பழிக்கப்படுவதைப்பற்றியே கதைகள் எழுதவாரம்பித்தான். இந்தமாதிரிக் கதை தான் கற்பழித்தலைத் தொழிலாகக் கொண்ட பணக்கார ரஸிகர்களுக்குப் பிடித்தது.

ஆறு மாதம் கழித்து ராஜாமணி திரும்பி வந்து சேர்ந்தான். இம்முறை ஜகன்னுதன் வீட்டில் தங்கவில்லை. பட்டணத்திலேயே விடுதி அமர்த்திக் கொண்டான். தன்னுடைய நண்பர்களுக்கும் நாடக சம்பந்தமான பிரபலஸ்தர்களுக்கும் அருகில் இருக்கவேண்டியது அவசிய மென்ருன். உண்மையில் அவனும் அவனுடைய முக்கிய ஸ்த்ரீபார்ட்டும் சேர்ந்து வாழ விரும்பியதுதான் காரணம். "பொற்சிறை" தெற்கு ஜில்லாக்களில் நடந்து கொண்டிருந்தது. ராஜாமணியின் இரண்டாவது நாடகமான "புதுமனிதன்." என்ற சமூக வாழ்க்கைச் சித்திரம் சென்னையிலேயே ஒத்திகையில் விளங்கிற்று.

அநேக நாட்களாக ஜகன்னுதன் ராஜாமணியைப் பார்க்கவில்லை. ஒருநாள் ராஜாமணி ஒருவாடகை மோட்டாரில் ஜகன்னுதன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். அவனுடைய நிலைமையோ அதிக பரிதாபமாக விருந்தது. குடிமயக்கத்தில் யாரோ அவனுடைய சட்டைப் பையிலிருந்த பணத்தையெல்லாம் திருடிவிட்டார்கள். குடியால் ஆரோக்கிய மிழந்து தோன்றினன். மேலும், அப்பெண் நடிகை வேருெரு லக்ஷாதிபதியுடன் வாழப்போய் விட்டாள். ராஜாமணி மனமும் உடலும் வருந்திவந்து சேர்ந்தான். ஜகன்னுதன், ராஜாமணியை ஒரு படுக்கையிலிருத்தி வேண்டிய சிகிச்சையெல்

லாம்செய்தான்.இப்பொழுதுதான் ராஜாமணிக்கு ஜகன்னாதனது உண்மை அன்பு தெரிந்தது. தான் இத்தனை நாளாக அவனைப் பரிகாசமாக நடத்தியதற்காக வருந்தினான். தன்னுடைய வாழ்க்கை உபயோகமற்றதென்றும், தனக்காக ஜகன்னாதன் கஷ்டப் படுவது நியாயமல்லவென்றும் கூறினான். தான் காதலித்த பெண் எவ்வளவு மோசமானவளென்பதையும் ஜகன்னாதனுக்குத் தெரிவித்தான்.

ஜகன்னாதன், சந்தசாமியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, கந்தன் இஷ்டப்பட்டிருந்தால் ராஜாமணியைத் திருப்பியிருக்கலாமென்றும் கந்தனது அசிரத்தையான நட்பே ராஜாமணியின் வீழ்ச்சிக்குக் காரணமென்றும் கூறிப் புகார் செய்தான். இதைப்பற்றிக் கந்தசாமிக்குக் கோபம்தானாலும் ஜகன்னாதன் கூறியது முற்றிலும் உண்மையென்பது அவனுக்குத் தெரியும்.

கடைசியில் ஜகன்னாதனுடைய மனோவேதனை உச்ச நிலையை யடைந்துவிட்டது. திருத்துவாரின்றி ராஜாமணியைத் தனியாக விடுவது முற்றிலும் தவறு என்பதை உணர்ந்தான். தான் இத்தனை நாளாக எழுதத் தயங்கிய விஷயங்களையெல்லாம் சேர்த்து மரகதத்திற்கு ஒரு கடிதம் எழுதினான். முதலில் எழுதி எழுதிக் கிழித்தான். ராஜாமணியின் அம்சங்களைப்பெரிய குடும்பத்துப் பெண்ணாகியமரகதத்திற்கு எழுதப் பின்வாங்கினான். அதிகநேரம் யோசனைசெய்து மனதிற்குள்ளேயே வாதித்து விட்டு,"மரகதம் சென்னைக்கு வந்து ராஜாமணியைப் பார்த்துக்கொள்வது நல்லது" என்று எழுதியிருந்தான்.

மரகதம் உடனே பதில் எழுதினாள். அவளுடைய சொந்தக்காரர்கள் சிலர் பழவேற்காட்டில் இருந்தனர். அவர்கள் மரகதத்தை வரும்படி அநேகதடவை எழுதியிருந்தனர். ராஜாமணியை அங்கு அழைத்துக் கொண்டுபோய் சிலநாட்கள் வைத்திருப்பது நல்லதென்று மரகதத்திற்குத் தோன்றிற்று. இதற்காகத்தானும் சென்னைக்கு வருவதாக எழுதியிருந்தாள்.

மரகதம் வருகிருளென்ற செய்தியைக் கேட்டவுடன், ஜகன்னுதனுக்குச் சந்தோஷமும் மனப் பதைபதைப்பும் ஏற்பட்டது. தான் ரயிலுக்குப் போய் அவளைச் சந்திப்பது நியாயமா? தான் அவளைத் தன்னுடைய வீட்டிற்கு அழைக்கலாமா? ராஜாமணி, நடிகையிடம் கொண்டிருக்கும் நேசத்தைப்பற்றி அவளிடம் சொல்லலாமா? சொல்லாமலிருப்பது உண்மையை மறைப்பதுபோலாகுமே! என்ற சந்தேகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக அவன் மனத்தில் எழுந்தன.

அதற்குள் ராஜாமணியே, தான் அந்த நடிகையை வெறுத்து நீக்கிவிட்டதாகத் தெரிவித்தான். பழவேற்காட்டில் போய்ச் சிலநாள் தங்குவதற்குத் தயாராக விருப்பதாகவும் கூறினுன்.

மரகதம் வந்ததினத்தன்று ஜகன்னுதனும் ராஜாமணியும் ஸ்டேஷனுக்குப்போய் அவளைச் சந்தித்தார்கள். இருவரையும் பார்த்து மரகதம் அதிக சந்தோஷமடைந்தாள். ஆனுல், ராஜாமணியின் தேகநிலையைக்கண்டு அவள் வருத்தப்பட்டாள்.உண்மை தெரிந்திருந்தும், சாமர்த்தியமாக "ராஜாமணி' உடம்பு இளைத்துப் போயிருக்கிருயே அதிகமாக வேலை செய்கிருய்போலிருக்கிறது", என்ருள். பிறகு வீட்டுச் செய்திகளையும் நிலவிளைவு விஷயங்களையும் பற்றிப் பேசினுள் மரகதம். வண்டியில் ஏறப்போகும் சமயத்தில் "இப்பொழுது எங்கேபோகப்போகிருேம்" என்றுகேட்டாள் மரகதம். "பழவேற்காட்டிற்குத்தான்" என்று ராஜாமணி கூறியதும், ஜகன்னுதன் விடைபெற்றுக்கொள்ள முயன்ருன். ஆனுல், மரகதம் "ஓ நான் உங்களோடு பேசவேண்டுமே" என்ருள். மூவரும் ஒரு பெரிய ஹோட்டலுக்குச் சென்று காபி சாப்பிட்டுக்கொண்டே, பல விஷயங்களைப்பற்றிப் பேசுகிருர்கள். ராஜாமணியின் புதுநாடகத்தைப் பார்க்கவேண்டுமென்ருள் மரகதம்.

"ஓ, அது கொஞ்சம்கூட நன்ருயில்லை. ரொம்ப மோசமான கதை" என்று கூறினுன் ராஜாமணி.

மரகதம் வியப்புடன் "ஏது? ராஜா தன்னைப்பற்றியே இவ்வளவு தாழ்மையாகப் பேசிக்கொள்ளுகிருன்! இது புதுமையாயிருக்கிறதே" என்ருள்.

அதற்கு ஜகன்னுதன் "காலம் மாறிவிட்டது. சென்னை வாசிகளெல்லாம் உலகமே தங்களுடையதென்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அது தப்பு என்று இப்பொழுது தான் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது" என்று கூறினன்.

மரகதம் தான் இதுவரை தந்தையைப் பாதுகாக்க முயன்றதைப்போல் ராஜாமணியையும் பார்த்துக்கொள்ள முயன்ருள். ஆனல், இந்த வேலை அவளுக்குத் தனியாகச் சாத்தியப்படவில்லை. ஒருவர் உதவிவேண்டியிருந்தது. ஒரு நாள் மரகதம் ஜகன்னுதனைப் பார்க்க வந்தாள். ஜகன்னுதன் அவளைச் சந்தோஷத்துடன் வரவேற்ருன்.

மர:—"நான் நேற்று ராஜாமணியின் "புதுமனிதன்" என்ற நாடகத்திற்குப் போயிருந்தேன். நான்போனது ராஜா வுக்குத் தெரியாது. கதைமுழுமோசமாயிருக்கிறது. சென்னை யில் பெரியவர்கள் உண்மையாகக் கதையில் காட்டிய படியா நடந்துகொள்ளுகிருர்கள்?" என்ருள்.

ஜக:—"நீங்கள் அதைப்பார்த்திருக்கக்கூடாது" என் ருன்.

மர:—"ராஜாமணியின் மனதையும், வாழ்க்கையையும் நான் தெரிந்துகொள்ளவேண்டாமா? எப்படி அவனைத் திருப்புவது. நீங்கள்தான் எனக்குக் கற்றுக்கொடுக்கவேண் டும்." என்ருள்.

ஜக:—"என்னுலானதை நிச்சயமாகச் செய்கிறேன்" என்ருன்.

மர:—"முதலில் தாராபாய் என்னும் இந்த முக்கிய நடிகை எப்படிப்பட்டவளென்று எனக்குத் தெரியவேண் டும்." என்ருள்.

இதைக்கேட்ட ஜகன்னுதனுக்குத் தூக்கிவாரிப்போட் டது. இந்த விஷயம் ஒன்றைத்தான் மரகதத்திற்குத்

தெரியப்படுத்தக்கூடாதென்று அவன் எண்ணிக்கொண்டிருந்தான். அப்படியிருக்க மரகதமே, இதைப்பற்றிப் பேச ஆரம்பிப்பதென்றால் அவனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

அவனுடைய மனத்தாங்கலை யுணர்ந்த மரகதம், "ஆம் இந்த விஷயங்களெல்லாம் எனக்குத் தெரியாது, தெரியக் கூடாது என்று நீங்கள் நினைத்திருந்தீர்கள். ஆனால், பத்திரிகைகள் மூலம் நான் முழுவதும் அறிந்து கொண்டேன். அம்மாள் வருத்தப்படுவாளென்று எனக்குத் தெரிந்ததை வெளிப்படுத்தக்கூடாதென்று ரகசியமாய் வைத்திருந்தேன். அதே எண்ணத்தினால் தான் நீங்களும் என்னிடத்தில் தெரியப்படுத்தவில்லை. உண்மையை மறைப்பதினால், நமக்குக் கொஞ்சம்கூட உபயோகமில்லை. ராஜாமணியும், தாராபாயும் சேர்ந்து வாழ்ந்து வந்தார்களென்பது உண்மைதானா?" என்று கேட்டாள்.

ஜகன்னாதன் அதற்குமேல் என்ன செய்வான்? மரகதம் கூட இம்மாதிரிப் பேச ஆரம்பித்து விட்டாளே என்று வியந்தான். வேறு வழியில்லை. "ஆம் உண்மைதான்." என்றான்.

மர:—"எத்தனை நாட்களாக?"

ஜக:—"நாடகம் ஆரம்பித்த நாள் முதலாய்."

மர:—"அவள் எப்படிப் பட்டவள்?"

ஜக:—"முதலில் ராஜாமணியும் அவளும் நேசமாய்த் தானிருந்தார்கள். பிறகு மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டது."

மர:—"ஏன்?"

ஜகன்னாதன் பதில் கூறவில்லை.

மர:—"சொல்லமாட்டீர்களா? இந்த மனஸ்தாபத்தைப் பற்றி ராஜா உங்களிடம் சொல்லவில்லையா?"

ஜக:—"ஒருநாள் குடிமயக்கத்தில் என்னிடம் சொல்லியிருக்கிறான்."

மர:—“நீங்கள் முழுவதும் என்னிடம் சொல்லியே தீர வேண்டும். வெறும் மரியாதையும், சங்கோஜமும் இனிப் பயனில்லை. நானும் ராஜாமணியின் நண்பர்களைச் சந்தித்து அவர்களைப்போல் பேசப் பழகவேண்டும். அந்த வழியில் தான் அவனைத் திருப்ப முடியும்” என்று தீர்மானமாகக் கூறினாள் மரகதம்.

ஜகன்னாதனுக்கு வியப்பும் ஆச்சரியமும் அதிகமாயிற்று. அவனுக்குப் பேச நாவெழவில்லை.

ஒரு பெரிய வக்கீல், குறுக்கு விசாரணை செய்வதுபோல் ஜகன்னாதனைப் பல கேள்விகள் கேட்டு உண்மையை ஒருவாறாக அறிந்துகொண்டாள் மரகதம். ராஜாமணிக்குத் தாராபாயின் மீது உண்மையாய்க் காதலில்லாவிட்டால், அவளோடு ஏன் அவன் கூடி வாழவேண்டுமென்பதுதான் மரகதத்திற்குப் புரியவில்லை. இருவரும் இனி ஒருபோதும் சந்திக்காமலிருப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய மரகதமும், ஜகன்னாதனும் ஆலோசித்தார்கள். இவர்களுக்கு இன்னொரு தீர்மானமுண்டு. அது ராஜாமணி குடியை நிறுத்தவேண்டுமென்பது.

ஆனால் பழவேற்காட்டிலிருந்த உறவினர் குடும்பத்தில் சாராயம் தாராளமாய் வழங்கப்பட்டது. அந்தக் குடும்பத்தின் சொந்தக்காரரான ராமானுஜம் மதுவிலக்குச் சட்டத்தை விரும்பாதவர். அமுலிலிருக்கும் சட்டத்தை அவர் சிறிதும் லக்ஷியம் செய்யவில்லை. இம்மாதிரி பெரிய பணக்காரர்கள் வீட்டில் சாராயப்புட்டிகளைச் சேர்த்துவைத்துக் கொண்டிருந்தார்கள். ஜகன்னாதனுக்கும் மரகதத்திற்கும் ஒரே நம்பிக்கை சட்டம் தீவிரமாய் அமுலிலிருக்கும் என்பதே. சட்டத்தை மீறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று கவர்னரே அநேக பிரசங்கங்களில்கூறியிருக்கிறார். சட்டம் அமுலுக்குவந்து ஒரு வருஷமாகிவிட்டது.

“ராஜாமணிக்கு மாத்திரம் குடிப்பதற்குச் சாராயம் கிடைக்காமலிருந்தால் நம்முடைய கவலையெல்லாம் தீர்ந்து

விடும்'' என்று கூறிச் சில சமயம் பெருமூச்செறிவாள் மரகதம். இந்தக் கருத்தையே மனதில்கொண்டு கவலையுற்றிருந்த மாதர்கள் சென்னையில் எத்தனை பெயரோ!

## 12. பழவேற்காட்டு ராமானுஜர்

இச்சமயத்தில் சென்னையில் மதுவிலக்குச் சட்டத்தைப்பற்றி ஓரே குழப்பமாக இருந்தது. சிலர் இச்சட்டம் மிகவும் அக்கிரமமானதென்றும் ஏழைகளைத் துன்புறுத்தவே கொண்டுவரப்பட்டதென்றும் கூறினார்கள். சிலர் மனிதனது தனி உரிமைகளெல்லாம் கொள்ளை போய் விட்டனவென்று கிளர்ச்சி செய்ய வாரம்பித்தனர். ஒரு நாள் ஒருபெரிய ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் குடியர் ஊர்வலம் போகும்போது, ஜகன்னாதன் வாசலிலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். "எங்களுக்கு கள் எங்கே? மதுவிலக்குச் சட்டம் ஒழியவேண்டும்!'' என்று கூவிக்கொண்டு சென்றது. இவர்களோடு கந்தசாமியும் ஒரு போர்டைத் தூக்கிக்கொண்டு போவதைப் பார்த்து ஜகன்னாதன் வியப்படைந்தான். அடுத்தாற்போல் ஐந்து நிமிஷத்திற்குள், "வேண்டாம், வேண்டாம் குடிவேண்டாம்'' 'குடிகாரனையார் வேண்டுவார்கள்' பொய்யும் ஏமாற்றமும் தொலையும் காலம்வந்தது மகாத்மா காந்திகீ ஜே'' என்ற ஆரவாரத்துடன் மற்றோர் பிரும்மாண்டமான ஊர்வலம் வந்தது. இதில் ஸ்திரீகளும் குழந்தைகளும் காட்டிய உற்சாகம் ஜகன்னாதனை மகிழ்வித்தது.

பழவேற்காட்டில் ராமானுஜன் வசித்துவந்த பங்களாவுக்கு "லக்ஷிமி விலாசம்'' என்று பெயர். ஒருநாள் மரகதம் ஜகன்னாதனுக்கு லக்ஷிமிவிலாஸத்திலிருந்து ஒரு அழைப்பு கொண்டு வந்தாள். ஜகன்னாதனுக்கு ஓரே பரபரப்பு ஏற்பட்டது. அவ்வளவு பெரிய பணக்காரக் குடும்பத்தில் தான் போய்த் தங்கி அவர்களோடு சரியாய் அளவளாவு




வேண்டாம் வேண்டாம் குடிவேண்டாம்.

வதா? என்று எண்ணினன். ஆனல், அவனுடைய தாயார் அவனைச் சமாதானப்படுத்தித் தைரியங்கூறி அனுப்பினுள்.

மரகதமும், ஜகன்னதனும் ஒரு பெரிய மோட்டாரி லேறிச் சென்றார்கள். ரஸ்தாவுக்குச் சற்று ஒதுக்கமாய் ஒரு மைல் தூரத்தில் வயல்களுக்கும், சவுக்குத் தோப்புக் களுக்கும் நடுவில் ஒரு சிவப்புக் கட்டிடம் விளங்கிற்று. மோட்டார் வந்து நின்றதும், ஒரு வேலைக்காரன் ஓடி வந்து கதவைத் திறந்து ஜகன்னதன் பெட்டியை எடுத்துக் கொண்டான்.

அவனுக்காக நியமிக்கப்பட்ட அறையில் அவனுடைய உடைகள், காலை, மாலை, பகல் வேளைகளுக்கு அணிய வேண் டிய முறையில் எடுத்துவைக்கப்பட்டிருந்தன. அறையிலுள்ள மிகவும் சௌகரியமான படுக்கையையும் மற்றும் விலையு யர்ந்த நாற்காலி பீரோ முதலியவைகளையும் பார்த்து பிர மித்துவிட்டான். சாப்பிடும்போது, அந்தப் பெரிய வீட்டில் தங்கியிருப்பவர்களையெல்லாம் சந்தித்தான். ராமானுஜர், அவர் மனைவி, அவர்களுடைய 12 வயது குமாரன் தவிர, இன்னும் பல ஏழை, சுற்றத்தார் முதலியோர் அந்த வீட்டி லேயே சாப்பிட்டுக் காலங் கழித்து வந்தனர். பணமும், தயாள குணமும் இருந்து பந்துக்களும் ஏராளமாய் இருந்து விட்டால் கேட்க வேண்டுமா?

சாப்பாட்டிற்குப் பிறகு மரகதம், ஜகன்னதனுக்கு ரோஜாத் தோட்டத்தையும், மற்றுமுள்ள பூஞ்சோலைகளையும் காண்பித்தாள். மரங்களுக்கிடையில் தூரத்தில் ஒரு சிறு கூரை வேய்ந்த வீடொன்றை மரகதம் சுட்டிக் காட்டினுள். அந்தக் குடிசையில்தான் ராஜாமணி வசித்துவந்தான். தன் னுடைய எழுத்து வேலைக்குவேண்டிய ஏகாந்தத்திற்காக அங்கேயே இருந்தான். பெரிய வீட்டுக்கு அவன் அடிக் கடி வருவதேயில்லை. மரகதம், படகோட்டுவதில் பழக்க மடைந்தவள். இவர்கள் இருவரும் துறைமுகத்தினேரத்தி லேயே படகில் மிதந்து கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த தீபஸ்தம்பத்தை மரகதம் ஜகன்னதனுக்குக் காண்பித்தாள்.




குடிகாரனை யார் வேண்டுவார்கள்.

பழவேற்காடு ஒரு பழைய துறைமுகம். போர்ச்சுகீஸியர்கள் இந்தியாவுக்கு வந்த காலத்தில் இது ஒரு கப்பல் தங்குமிடமாக விருந்தது. இப்போழுதோ பாழடைந்து விட்டது. வரி கொடுக்காமல் திருட்டுத்தனமாகச் சாமான்களை முக்கியமாகச் சாராயவகையரு சாமான்களை இறக்கி உள்நாட்டிற்குக் கொண்டு போவதற்கே உபயோகப்படுகிறது. சட்டம் அமுலுக்கு வந்தபின் வியாபாரம் செய்யப்படும் வெளிநாட்டுச் சாராயம் முழுவதும் இந்தத் துறைமுகத்தின் வழியாகத்தான் இறக்குமதி செய்யப்பட்டதாகக் கதைகள் வழங்கின. இதைப்பற்றி யெல்லாம் மரகதம் ஜகன்னாதனுக்கு எடுத்துரைத்தாள்.

திருட்டுச் சாராயம் சாதாரணமாக இரவில்தான் ஓரிடத்திலிருந்து மற்றொரிடத்திற்குக் கொண்டுபோகப் பட்டது. இரவுதானே திருடனுக்கு உதவி! இரவில் பெரிய மோட்டார்கள் போகும் சப்தம்; சமிக்ஞை விளக்குகள் பளிச் பளிச்சென்று மின்னுதல்; இவைகளை மரகதம் ஜகன்னாதனுக்குக் காட்டினாள். வெளி நாட்டுக் கப்பல்கள் சாராயத்தைக்கொண்டுவந்தால் சமுத்திரத்தில் கரையிலிருந்து மூன்றுமைல் தூரத்திற்கு அப்பால் நிற்கவேண்டும். அந்தக் கப்பல்களில் மின்னும் விளக்குகளை மரகதம் ஜகன்னாதனுக்குக் காண்பித்தாள்.

பிறகு அவர்களிருவரும் ராஜாமணியைப்பற்றிப் பேசினார்கள். ராஜாமணி குடியை அடியோடு கைவிட மறுத்து விட்டான். அளவுக்கு மீறாமல் கொஞ்சமாகக் குடிக்கப் போவதாகக் கூறினான் என்று ஜகன்னாதன் எடுத்துரைத்தான். குடியின் பலனைப்பற்றிப் பேசுகையில் ஜகன்னாதன் தன்னுடைய தந்தையின் முடிவைப்பற்றி மரகதத்திற்குக் கூறினான். மரகதமும் ராஜசேகரரின் விபரீத மரணத்தைப் பற்றி ஜகன்னாதனுக்குக் கூறினாள்.

"ஆம், நம்மிருவருக்கும் நல்ல அநுபவம் கிடைத்து விட்டது. நமது அநுபவத்துக்காக நமது பெற்றோர்கள்

மடியவேண்டி நேர்ந்ததுதான் பயங்கரமாயிருக்கிறது" என்ருள் மரகதம்.

இருவரும் அதிகநேரம் படகில் உல்லாசமாய்க் காலங் கழித்தனர். காற்று சிலுசிலுவென்று வீசிற்று. கடலில் அலைகள் எழும்பிப் பாய்ந்து ஆரவாரம் செய்தன. எங்கு பார்த்தாலும் உலகம் சந்தோஷமா யிருப்பதுபோல் தோன்றிற்று. ஆனல், அவர்களுக்குத்தான் சந்தோஷமில்லை. சந்தோஷமாயிருக்க முயன்ருலும் மீண்டும் மீண்டும் ராஜா மணியைப் பற்றிய கவலை அவர்களுடைய மனச்சாந்தியைக் கலைத்துவிடும்.

"என்றும் அழியாப் புத்தகமொன்று எழுதவேண்டு மென்று ராஜாமணி கஷ்டப்படுகிருன். இப்பொழுதோ அவனுக்கு அம்மாதிரி எழுத வருவதில்லை. இதனல் கோபம் வந்துவிடுகிறது. சிறு விஷயங்களுக்காகவெல்லாம் பிரமாத மாகக் கோபமடைகிருன். இவைகளை யெல்லாம் மறப்பதற் காகக் குடிக்க ஆரம்பிக்கிருன். குடித்தால்தான் எழுத உற் சாகம் வருமென்றும் சொல்லுகிருன். அவனைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவதுதான் பெரிய கஷ்டமாயிருக் கிறது," என்ருள் மரகதம்.

மறுநாள் மாலை ஜகன்னுதன் தோட்டத்திலிருந்தபோது மரகதம் வந்தாள். ஜகன்னுதன் பிரமித்துப் போய்விட் டான். அவனுக்குத்தான் காண்பது கனவோ? என்ற சந் தேகம்கூடத் தோன்றி விட்டது. மரகதம் ஒரு நீலப் பட்டுப் புடவையை யணிந்திருந்தாள். அந்தப் புடவையும் ரோஜா வர்ண ரவிக்கையும் அவளுடைய உருவழகை நன்ருய் எடுத் துக் காட்டின. அழகே உருவெடுத்து வந்ததைப்போல் தோன் றிய மரகதத்தை—அவளுடைய மலர்போன்ற கைகளை, சந்திரன்போல் பிரகாசித்த முகத்தை, பூங்கொடிபோல் சாய்ந்து ஆடியதேகத்தைப் பார்க்க ஜகன்னுதனுக்குக் கண்கள் கூசின. இவ்வளவு அழகை ஒரே சமயத்தில் திடீரென்று பார்க்கத்தான் தகுதியற்றவனென்று எண்ணினன். இரு வரும் சந்திரிகையின் அழகை வியந்து கொண்டிருக்கும்

போது, அத்திபூத்தது போல ராஜாமணியும் அங்கு வந்து சேர்ந்தான். அவன் ஒரு சமாசாரம் தெரிவித்தான். கந்தசாமி, பத்திரிகைகளில் நாவல்கள் எழுதும் பாலாமணியென்ற பெண்ணை மணக்கப் போவதாகக் கூறினான்.

அதற்குள் பல வாலிபர்களும் பெண்களும் வந்து சூழ்ந்துகொண்டனர். ஒருபெண் பாரதியாரின் பாட்டமைப்பின் புதுமையைப்பற்றி ஏதேதோ கூறினாள். உடனே, ராஜாமணி பாரதியாரின் கற்பனைத்திறம், புதுசீரழகு, சங்கீதவன்மை முதலிய அம்சங்களைப் பற்றித் தன்னையும் மறந்து கேட்டுக்கொண்டு வந்தான். கேட்டுக்கொண்டிருந்தோர் தங்கள் கைகளில் டம்ளர்களிலிருந்த சாராயத்தை அடிக்கடி குடித்துக் கொண்டிருக்க, ராஜாமணி தன் டம்ளரை முற்றிலும் மறந்துவிட்டான். அவன் கருத்தும் கவனமும் அப்பொழுது பாரதியாருக்கு அடிமைப்பட்டு விட்டது.

மரகதத்திற்கும், ஜகன்னாதனுக்கும் அவனைப் பார்க்கப் பரிதாபமா யிருந்தது. பாரதியைப் பற்றிப் பேசும்வரையில் குடியை மறந்திருந்தான். ஆனால், அடுத்த நிமிஷம் பேச்சு வேறு விஷயங்களில் சென்றுவிட்டதும், எழுந்து சென்று புட்டியிலிருந்து டம்ளரில் சாராயத்தை ஊற்றிக் குடித்தான். குடிகாரக் கவியினுடைய வாழ்க்கையின் துக்கம் முழுவதும் அந்தச் செய்கையில் வெளியாயிற்று.

குடியின் அடிமை என்னே! சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தும் தான் பூர்ணசுதந்தரத்துடன் இருப்பதாகப் பாவித்துத் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் கைதியைப் போலானான். தன்னை அடிமையாகக் கொண்ட மதுவை எதிர்த்தபோதிலும்,வாழ்க்கை முழுவதும் அதன்சொற்படிக் கேட்கவேண்டிய சாபத்திற் காளானான். ஒரு சாதாரண மனிதனுக்கு இப்படி ஏற்பட்டால் அதுவே பரிதாபத்திற் குரியதாகும். ஒரு கலைஞன்! மேதாவி! வார்த்தைச் சித்திரிகனுக்கே இப்படி நேர்ந்தால்! இது அவனை மாத்திரமா பாழாக்குகிறது? இல்லை, கவி, கலை, எழுத்து, கற்பனை முழுதுமே

பாழாய்விடுகிறது. குடிகாரன் எழுத்தும் குடியின் சித்திரமும் கவியுமே சமூகத்திற்குக் கிடைக்கிறது! மது தேகத்திற்கு உண்டாக்கும் கெடுதலைப் போலவே சமூகத்திற்குள்ளும் நுழைந்து மனத்தைக் கெடுத்து எழுதச் செய்து நரம்புகளைத் தளர்த்திக் குற்றத்தைப் பரப்பி எல்லாவற்றையும் பார்க்கச் சகிக்காத வர்ணத்தால் பூசி விடுகிறது.

## 13. அவதூறு

பாராங்குசம் விடுதியில் நிலைமை கஷ்டமாய்ப் போய் விட்டது. அந்த வீட்டிலிருந்தவர்களெல்லாம் ஒவ்வொருவராய்க் காலிசெய்து கொண்டிருந்தார்கள். தங்களுடைய சட்ட விரோதமான சாராயத்தை எடுத்துக்கொண்டுபோக முடியாத ஒரு சிலர் மட்டும் தான் இருந்தனர். அனுவசியமாக வாடகை கொடுக்கவேண்டிய சிரமத்தை உத்தேசித்து ஜகன்னாதனும், அவனுடைய தாயாரும் கட்டிடத்தைக் காலி செய்யத் தீர்மானித்தார்கள். பாவம், இந்த விஷயத்தில் சாராயம் சேகரித்து வைத்திருந்தவர்களுக்குத்தான் கஷ்டம். புட்டிகளை வெளியேற்றும்போது, போலீஸ் பார்த்துவிட்டால் கஷ்டம். இதற்காக அவைகளை மறைத்து இரவில் சாமானுடன் சேர்த்து எடுத்துக்கொண்டு போனார்கள்.

ஜகன்னாதன் இனிமேல் வேறு எவ்விதத்திலாவது வேலையிலமர்ந்து சம்பாதிக்க வேண்டும்.

இதற்குள் மரகதத்திடமிருந்து ஒரு கடிதம் வந்தது. பழவேற்காட்டில் ராமானுஜர் வீடு தோட்டம் முதலியவைகளைப் பார்த்துக்கொள்வதற்கு உதவி மானேஜர் வேண்டியிருப்பதாகவும், அந்த ஸ்தானத்தை ஜகன்னாதன் வகிக்க வேண்டுமென்றும் எழுதியிருந்தாள். உதவி மானேஜர் பதவியைப் பற்றியும், அதில் செய்யவேண்டிய வேலையைப் பற்றியும், ஜகன்னாதனுக்கு ஒன்றுமே தெரியாது. ஆயினும் மரகதம் எழுதிவிட்டாளல்லவா? மறுநாள் பழவேற்காட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்.

தலைமை மானேஜரின் பெயர் மாணிக்கம். ஜகன்னுதனைப் பார்த்ததும் மாணிக்கம், உதவி மானேஜரின் வேலைகளையெல்லாம் கூறினர். அந்த பூஸ்திதி நிர்வாகத்திற்கு வேண்டிய சர்வ வேலைகளையும், தானே செய்து முடிக்க வேண்டுமென்பதை ஜகன்னுதன் உணர்ந்தான்.

"நீ எஜமான் வீட்டுக்காரர்களுக்கு நண்பனே?" என்று கேட்டார் மாணிக்கம்.

"ஒருமுறை அவர்களோடு தங்கியிருக்கிறேன்" என்று பணிவாகக்கூறினன் ஜகன்னுதன்.

"சரி அதைப்பற்றிக் கவலையில்லை. ஆனல் நீ நண்பன் என்ற நினைவில் எனக்குக் கீழ்ப்பட்டவன் என்பதை மறந்து விடாதே. யாராயிருந்தாலும் வேலை சரியாகச் செய்து தீர வேண்டும்" என்று முடிவாகக் கூறினர் மானேஜர்.

அந்தப் பெரிய தோட்டத்திலேயே ஒரு சிறு வீட்டில் ஜகன்னுதன் அவனுடைய தாயார் சிறிய தாயார் மூவரும் குடித்தனம் ஏற்படுத்திக் கொண்டார்கள். ஜகன்னுதன் அதிக சிரமப்பட்டு வேலை செய்தான். தலைமை மானேஜரின் விருப்பத்தின்படி வேலை செய்ய வேண்டியது தன் கடமையென்று அவன் தீர்மானித்தான். பூஸ்திதியின் எஜமானராகிய ராமானுஜம் ஆடிக்கொருநாள்தான் பழவேற்காட்டுக்கு வருவார். சென்னையில் அவர் ஒரு பெரிய வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தார். அவர் வந்த சமயங்களில் வேலைக்காரர்களெல்லாம் அரசனையே கண்டவர்கள்போல் பயபக்தியுடன் நடந்துகொள்வரார்கள்.

ஜகன்னுதன் எஜமானர் வீட்டினருக்குநண்பன் என்ற முறையில், அவனுடைய தாயார், சிறியதாயார் இருவரும் மானேஜர் மனைவியாலும், மற்ற வேலைக்காரர்கள் வீட்டுப் பெண்களாலும்,மரியாதையாக நடத்தப்பட்டார்கள். வேலைக்காரர்கள் நூற்றுக்கணக்காக அந்தப் பூமியிலேயே சிறு வீடுகள் கட்டி வசித்துக்கொண்டிருந்ததனல் அவர்களுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகள், பொருமை முதலிய விஷயங்க

ளெல்லாம் பெண்கள் மூலம் ஜகன்னுதன் தாயார் காதுக் கெட்டும்.ஜகன்னுதன்,தாயார் மூலமாகவிஷயங்களை அறிந்து கொள்வான். ஆனல் வேலைக்காரர்கள் சிலர் தங்கள் கடமையில் தவறிவிட்டார்களென்றல் தான் மாணிக்கத்தினிடம் அறிவிப்பான். மாணிக்கம் எல்லா வேலைக்காரர்களைப் பற்றியும் கேவலமான அபிப்பிராயமே கொண்டிருந்தான்.

மானேஜருக்கு அடுத்த ஸ்தானம் வகித்தபோதிலும், தானும் ஒரு வேலைக்காரன் தான் என்பதை ஜகன்னுதன் உணர்ந்துகொண்டான். ஒரு நாள் மரகதம் அவனைப் பெரிய வீட்டிற்குச் சிற்றுண்டி சாப்பிட அழைத்தாள். ஜகன்னுதனுக்குப் போவதற்குத் தயக்கம்.

"ஜகன்னுதன் ராமானுஜர் மனைவி என்ன சொல்லுவாளோ? என்றான்.

மரகதம் "ஏன்?" என்றாள்.

ஜகன்னுதன், "ஒன்றுமில்லை, என்னவானுலும் நான் ஒரு வேலைக்காரன் தானே, வேறு வேலைக்காரர்கள் ஒருவரையும் அங்கே அழைப்பதில்லை; அப்படி யிருக்கும்போது நான் அடிக்கடி வந்தால்......"

மரகதம் "என்ன இப்படிப் பேசுகிறீர்கள்! உங்களை தானல்லவோ அழைக்கிறேன்."

ஜகன்னுதன் "ஆம், இருந்தாலும்......அன்று ராமானுஜருக்கு மாணிக்கம் என்னை அறிமுகப்படுத்தியபோது அவர் தலையைமாத்திரம் ஆட்டிவிட்டுச் சென்றார். என்னை அவர் பிரமாதமாக நினைப்பதாகக் காட்டிக்கொள்ளவில்லை."

மரகதம் "ஓ, அவர் வேறு கவனமாக இருந்திருப்பார். அவர் ரொம்ப நல்லவராச்சே! நான் அவரைப் பார்த்தால் சொல்லி வைக்கிறேன்."

ஜகன்னுதன் "எதற்கும் அவருடைய மனைவிக்குத் தெரிந்து நான் வந்தால் நன்றயிருக்கும்."

மரகதம் "சரி, நான் அவளிடம் சொல்லி அழைக்கச் சொல்லுகிறேன் என்றாள்.

அன்றுமாலை மரகதம் வந்து எஜமானியே அழைப்பதாகக் கூறியபிறகு தான் ஜகன்னாதன் சென்றான். மாணிக்கத்திற்கு இந்த விஷயங்கள் சிறிதும் பிடிக்கவில்லை. சில நாட்கள் கழித்து, எஜமானியே, ஜகன்னாதன் வீட்டுக்கு வந்து அவனுடைய தாயாரிடம்பேசிவிட்டுப் போனாள். ஆகையால்,இனிமேல் சமூக விஷயத்தில் தன்னுடைய பதவியைப்பற்றி ஜகன்னாதன் அதிகக் கவலைப்பட வேண்டியதில்லை.

ராமானுஜருக்கு மூன்று குழந்தைகள். கிருஷ்ணன், சாவித்திரி, பார்த்தசாரதி. கடைசிக் குழந்தைக்கு 'பாப்பா' என்பது செல்லப்பெயர். கிருஷ்ணனும், சாவித்திரியும் சென்னையிலேயே ஹாஸ்டலில் இருந்து கல்லூரியில் வாசித்துக் கொண்டிருந்தார்கள். குடி, சிகரெட் முதலிய புதுமாதிரி பழக்கங்கள், அவர்களுடைய நட்பையும் சமூகத்தையும் எடுத்துக் காட்டிற்று. அவர்கள் எப்பொழுதாவது பழவேற்காட்டிற்கு வந்தால் கூட, ஜகன்னாதனை அதிகம் கவனித்ததாகக் காண்பிப்பதில்லை.

'பாப்பா' எப்பொழுதும் வீட்டிலேயே இருப்பான். அவனுக்கு வயது பதின்மூன்றிருக்கும். அடங்காப்பிடாரி. ஒருவர் சொற்படியும் கேட்கமாட்டான். ஏதாவது தொந்தரவுகொடுத்துக் கொண்டேயிருப்பான். மாடுகளை அவிழ்த்து விடுவான். வேலைக்காரர்களோடு சண்டை போடுவான். உதவி மானேஜரான ஜகன்னாதனை உபத்திரவம் செய்துகொண்டேயிருப்பான். ஒருநாள், தச்சன் சில பலகைகளை இழைத்துக் கொண்டிருந்தான். 'பாப்பா' தனக்கு ஒருபலகை வேண்டுமென்று கேட்டான். தச்சன் மறுத்துவிட்டான். உடனே பாப்பா' பலகையை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்தான். சாமான்கள் சரிவரப் பார்த்துக் கொள்ளப்படவேண்டும் என்று மானேஜரிடமிருந்து ஜகன்னாதனுக்கு உத்திரவு. ஆகவே, ஜகன்னாதன் பாப்பாவைப் பிடித்துப் பலகையை மீட்டபோது அந்தப் பையன் கோபமடைந்து ஜகன்னா

தனைத் தூஷித்துக் கல்லெடுத்து எறிந்தான். உடனே, ஜகன்னுதனை வேலையிலிருந்து நீக்கிவிடுவதாகப் பயமுறுத்திவிட்டுப் போனுன்.

அன்று மாலை ஜகன்னுதனைக் காபி சாப்பிட அழைத்திருந்தார்கள். தன் வீட்டில் ஜகன்னுதனைப் பார்த்ததும் பாப்பா "வேலைக்காரப் பயலுக்கு இங்கே என்னடா வேலை வெளியில் போ" என்று கட்டளையிட்டான். ஜகன்னுதன் சிரித்துக்கொண்டு கவனிக்காமலிருந்துவிட்டான். பாப்பாவின் தாயார் குழந்தையைக் கண்டித்து உள்ளே அனுப்பிவிட்டு "என்ன செய்வது? அவர் ஒருவரிடத்தில் தான் அவனுக்கு பயம். பெரிய சண்டியாயிருக்கிறுன்" என்று சமாதானம் கூறினுள்.

ராமானுஜர் மனைவிக்குக் குடும்பத்தில் ஏமாற்றம் உண்டு. கணவன் வேலையிலேயே கருத்தாயிருந்தார். குழந்தைகள் முன்னுக்கு வரவேண்டுமே. இதற்காக விருந்துகள் கொடுத்து வாலிபர்களும், யுவதிகளும் தனது மாளிகையில் வந்து கூடும்படி செய்வாள். இதில் இன்னெரு விசேஷம். ராஜாமணி விவாகம் செய்து கொள்ளுவதற்கு ஒரு பெண்ணும் மரகதத்திற்கு ஒரு பிள்ளையும் தேடவேண்டுமென்று அவளுக்கு ஆசை. ஆகவே, ஆண் பெண் இருபாலரும் மாளிகைக்கு வந்து போய்க்கொண்டிருந்தனர். இந்த விஷயம் ராஜாமணிக்குப் பிடிக்கவில்லை. அவன் எஜமானியிடம் விளையாட்டாக, "சரி, நேற்று வந்த பெண்ணை இன்றும் அழைப்பதில் எனக்கு ஆக்ஷேபணையே யில்லை. ஆனுல் நான் அவளை நிச்சயமாகக் காதலிக்கப் போவதில்லை" என்று கூறுவான். மரகதமும் இதை ஒரு விளையாட்டாகக் கருதினுளேயன்றி அதிமுக்கிய விஷயமாக நினைக்கவேயில்லை. அவளுக்குத் திரும்பிச் சோளவந்தானுக்குப் போக வேண்டும். அங்கு தாயார் தனியாக இருக்கிறுளே என்ற கவலை. ஆயினும், ராஜாமணியைப் பார்த்துக் கொள்வதற்காக இங்கு இருக்கவேண்டியது அவசியமாயிற்று.

சோளவந்தானிலிருந்து ஒரு செய்தி வந்தது. நடேசன் அதிகமாய்ப் பணம்போட்டு வைத்திருந்த மதுரை பாங்கி ஒன்று மூழ்கிவிட்டது. அதனுல் நிலத்தில் சில பாகத்தை அவன் விற்கவேண்டியதாயிற்று. இதனுல் மரகதம் அதிகச் செல்வாக்கில்லாமல் தன்னுடைய ஸ்திதிக்கு வந்துவிடுவாள் என்று ஜகன்னுதனுக்குத் தெரிந்திருந்தும், அவள் மாளிகைக்குவரும் பணக்கார வாலிபர்களோடு அடிக்கடி சென்னைக்குப்போய்அளவளாவிக்கொண்டிருந்ததைக் காண அவனுக்கு மரகதத்தை மணம்புரிவதென்பது,நடக்கக்கூடாத காரியமோ என்று தோன்றிற்று.

ஒருநாள் சாமான் வாங்கிக் கொண்டு வருவதற்காக ஜகன்னுதன் சென்னைக்குச் சென்றுன். அங்குக் கந்தசாமியைச் சந்தித்தான். கந்தசாமியின் விவர்கத்திற்குப் பிறகு இப்பொழுதுதான் அவனைச் சந்திக்கின்றுன். கந்தசாமி ஜகன்னுதனுக்கு அநேக விஷயங்களைப்பற்றிக் கூறினுன். ராஜாமணியும், தாராபாயும் சண்டையிட்டுப் பிரிந்துவிட்டார்கள். தற்சமயம் ராஜாமணி ஒரு பெரிய இரும்பு வியாபாரியின் வாலிப மனைவியுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்தான். தன்னுடைய தனி வீட்டில் ராஜாமணி புத்தகம் எழுதிக்கொண்டிருக்கிறுனென்று நினைத்துக்கொண்டிருந்த மரகதத்திற்கு இதெல்லாம் தெரியாது.

மற்றொரு புதிய விஷயம் ஜகன்னுதன் அறிந்தான். ராமானுஜர், பண விஷயமாக ஏதோ கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டார். ஏதோ பெரிய தொகையில் மோசம் செய்து விட்டதாகவும், இப்பொழுது அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்துத் தப்பிக்க வழி தேடுவதாகவும் கந்தன் கூறினுன். தவிர சென்னையில் ஒரு பெரிய வீட்டில் பல இளம் பெண்களை வைத்துக்கொண்டிருப்பதாகவும் இவை யாவும் கந்தன் கூறக்கேட்டு ஜகன்னுதன் ஆச்சரியம் அடைந்தான். ஜகன்னுதன் திரும்பிப் பழவேற்காட்டுக்குப் போகும் போது இந்த விபரீதங்களை யெல்லாம் பற்றி வியந்து சிந்தித்துக்கொண்டிருந்தான். இவ்விஷயம் முழுவதும் அவ

னுக்குப் பழையகாலத்தில் நடந்த, நவாப் தர்பார் போலவே தோன்றிற்று.

வசந்தகாலம் வந்தது. பழவேற்காட்டில் எல்லோரும் சுறுசுறுப்பாயிருந்தனர். அறுவடைசெய்தல், பழம், புஷ்பம் பறித்தல், அவைகளை மார்கட்டுக்கு அனுப்புதல் முதலியபல வேலைகள் இருந்தன. இவ்வளவு வேலைகளுக்கிடையில் எஜமானுடைய சென்னைத்திருவிளையாடல்களைப்பற்றி ஆலோசிக்க ஜகன்னாதனுக்கு நேரம் கிடையாது. தனது வேலையிலேயே முற்றிலும் ஈடுபட்டிருந்தான்.

கலாசாலைகள் மூடப்பட்டுக் கிருஷ்ணனும், சாவித்திரியும் விடுமுறைநாட்களைக் கழிப்பதற்காக வந்திருந்தார்கள். சாவித்திரி எப்பொழும் புதிய ஆடைகளணிவதிலும் முகத்தில் பவுடர் பூசிக்கொள்வதிலும் கருத்தாயிருந்தாள். சந்தோஷமாய்க் கழித்துவிட்டு இருவரும் திரும்பிச் சென்னைக்குச் சென்றார்கள். மாளிகையில் எல்லோருமே சந்தோஷமாய்த்தானிருந்தார்கள். நேரவிருக்கும் விபத்து ஒன்றை எவரும் அறியவில்லை.

ஒருநாளிரவு திடீரென சாமானுஜர் மனைவி, சென்னைக்குப் புறப்பட்டாள். ரயில் ஸ்டேஷன் வரையில் மோட்டார் ஓட்டிக்கொண்டு வரும்படி ஜகன்னாதனைக் கேட்டாள். ஜகன்னாதனுக்கு இந்த திடீர் பிரயாணத்தின் காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆயினும், எஜமானி கவலையுற்ற முகத்தோடிருந்ததைக் கவனித்தான். மேலும், தான் சென்னைக்குப் போவதை ஒருவரிடமும் சொல்லவேண்டாமென்றும் அவள் சொல்லியிருந்தாள்.

மறுநாள் உண்மை முழுதும் வெளியாகிவிட்டது. பழவேற்காடு முழுவதும் அதேபேச்சு. கிணற்றங்கரையிலும், வீட்டுத் திண்ணைகளிலும், பெண்கள் கூடி இந்த விபரீதத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். இந்தச்செய்தியை "ஏரோபிளேன் காதல்" "பணக்காரப் பெண் மறைந்தாள்! விபரீத முடிவு!" என்று தலைப்பிட்டுப் தினசரிப் பத்திரிகைகள் பிரசுரித்தன.

எஜமானி சென்னைக்குப் போன ரகசியம் இப்பொழுது தான் ஜகன்னாதனுக்குத் தெரிந்தது. சாவித்திரி திடீரெனத் தான் இருந்த பெண்கள் விடுதியிலிருந்து மறைந்து விட்டாள். முதல் நாள் சினிமாவுக்குப் போனவள் திரும்பி வரவேயில்லை. சில நாட்களாகச் சாவித்திரி, அந்தப் பெண் விடுதியின் தலைவிக்கு அடங்கி நடக்கவில்லையென்றும், ஆட்சேபகரமான முறையில் வாழ்ந்து வந்ததாகவும் சொல்லப் பட்டது.

அவ்வளவுதான், உடனே பத்திரிகை நிருபர்கள் பழ வேற்காட்டு மாளிகையைச் சூழ்ந்துகொண்டார்கள். மாளி கையைப் போட்டோ எடுத்துச் சாவித்திரியின் படத்துடன் பத்திரிகைகளில் பிரசுரித்தார்கள். பல சஞ்சிகைகளின் மாதர் பகுதியில் இளம் பெண்களின் மனோபாவத்தைக் குறித்தும், அவர்களுடைய வாழ்க்கைப் பிறப்புரிமைகளைப் பற்றியும், விசேஷக் கட்டுரைகள் சாவித்திரியின் போட்டோவுடன் பிர சுரிக்கப்பட்டன. எங்கு பார்த்தாலும் போலீஸ்காரர்களும், துப்பறிவோர்களும் சாவித்திரியைத் தேடியலைந்து கொண் டிருந்தனர்.

மாளிகை முழுவதும் இம்மாதிரி இந்த மர்மத்தினால் அல்லோல கல்லோலப் பட்டிருக்கும்போது திடீரென ஒரு நாள் சாவித்திரி மோட்டாரில் வந்திறங்கினாள். சிறிதும் அவ சரமின்றிச் சர்வ சாதாரணமாகத்தான் சுகுமார் போஸ் என்ற வங்காள நடிகரை மணந்து கொண்டதாகவும், இரு வரும் தென்னிந்தியாவில் பல சிற்பக்கலை ஸ்தானங்களுக்குப் போய்விட்டு வந்ததாகவும் கூறினாள். சுகுமார்போஸ் வாயி லில் மோட்டாரில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அனை வரும் சாவித்திரியின் தைரியத்தைக் கண்டு வியந்து திகைத்து விட்டனர்.

ஆனால் மறுநிமிஷமே, துப்பறிவோர் பெரிய விபரீதச் செய்தியொன்றைக் கொண்டுவந்தனர். "சுகுமார் போஸ்," என்னும் பேர்வழி சென்னை நாடகக் கொட்டகைகளில் சில்லறை பார்ட் நடிப்பவனென்றும், உண்மைப் பெயர்



சாவித்திரி விம்மி விம்மி அழுதாள்.

வீராசாமி யென்றும், வங்காளம் என்ற பிரதேசத்தைப் பற்றியே கேட்டிருக்க மாட்டானென்பதுமே அச்செய்திகள் திடுக்கிடச் செய்யும் உண்மை என்று அறிந்த ராமனுஜர் "சுகுமார்போஸ் என்பவரை இரண்டு உதைகொடுத்து அனுப்பிவிட்டார்" மோசம் போவதில் முதற்பரிசுபெற்ற "ஸ்ரீமதி சாவித்திரி சுகுமார் போஸ்" தன்னறைக்குச் சென்று விம்மி விம்மி யழுதாள். இக்கதை முழுவதும் மறு நாள் பத்திரிகைகளில் வந்துவிட்டது. செய்தியை யலங்கரிக்கப் பழவேற்காட்டு மாளிகைப் படம் ஒன்று. அதில் ஒரு ஜன்னலில் அடையாளக் குறிபோட்டு "ஸ்ரீமதி சுகுமார் போஸ் வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கும் அறை" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

## 14. மரகதத்தின் காதல்

ஜகன்னுதனுக்கு வாழ்க்கை கஷ்டமா யிருந்தது. அவன் இருவிதமான மனேபாவத்துடன் காலங்கழிக்க வேண்டியிருந்தது. ஒன்று, அவன் தனக்கு உயர்ந்தவனுன மாணிக்கம் சொற்படி வேலே செய்யவேண்டும். இரண்டாவதாக மாளிகையிலிருந்து பெண்கள் அழைக்கும்போதெல்லாம் போய் அவர்களோடு பேசிக் கொண்டிருக்க வேண்டும். நிரந்தரமான சொந்த மனேபாவம் கொண்டிருக்க முடியாது. மாளிகையி லிருக்கும்போது, ஒருகவலேயு மில்லாமல் அவர்களோடு சரியாக நட்பாடவேண்டும். வேலேயென்ற நினேவே கூடாது. வேலேசெய்யும் போதோ தான் அவர்களுக்கு நண்பன் என்பதை மறந்து வேலேயை ஒரு சாதாரண வேலேக்காரனேப் போலவே சரிவரச் செய்யவேண்டும்.

இந்தத் தர்மசங்கடத்தில் மரகதத்தைப்பற்றி அவனுடைய உணர்ச்சி வளர்ச்சியடைந்தது. ஆனுல், அவளுடைய பதவியை நினேத்துத் தனக்குள்ளேயே தயங்கினுன். அவளே எப்படியாவது அடையவேண்டும் என்ற ஆவலேக் கெட்ட எண்ணம் என்றே நினேத்தான். ஆகவே அவனுடைய மனச்

சாட்சிக்கும் கெட்ட எண்ணத்திற்கும் பெரிய வாக்குவாதம் ஒன்று நடந்துகொண்டேயிருந்தது.

ம. சா:—அடா பைத்தியமே! மரகதத்தை மணக்க வேண்டுமா? இதுதான் குறை! ஏதாவது பிதற்றிவைக்காதே. நீ பெரிய துஷ்டன் என்று எண்ணிவிடப்போகிருள். 'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது தெரியாதா? மூளையைப் பறிகொடுத்து விடாதே. அவளை மறந்துவிடு.

கே. எ:—ஆனல் மரகதம், ஏன் வேறு ஒருவரையும் விவாகம் செய்துகொள்ளவில்லை? சிறந்த வாலிபர்கள் எத்தனையோ பெயரைச் சந்திக்கிருளே.

ம. சா:—ஓகோ! பெரிய கோடீஸ்வரனுன உன்னை மணந்து வாழ்க்கையை அனுபவிக்கவேண்டுமென்றுதான் காத்துக்கொண்டிருக்கிருளோ ?

கே. எ:—ஆனல், என்னிடத்தில் அதிக அன்பாக இருக்கிருளே. அடிக்கடி என்வீட்டிற்கு வந்து என் தாயாருடன் பேசிக்கொண்டிருக்கிருளே!

ம. சா:—இது ஒரு காரணமா? மடையா! உண்மையில் அவளுக்கு உன்மேல் காதலுண்டானல் சமிக்ஞையாக அறிவித்திருக்கமாட்டாளா ?

கே. எ:—நீ தான் மடையன் என்று நன்ருய்த் தெரிகிறது. நானுக அவ்ளை விவாகத்துக்குக் கேட்கவேண்டுமென்று இருக்கிருள்.

இம்மாதிரியான மனேவாதம் ஜகன்னுதன் மனத்தில் தினந்தோறும் நடந்துகொண்டிருந்தது. இதற்கிடையில் ஜகன்னுதன் என்னசெய்வதென்று தெரியாமல் விழித்தான்.

ராஜாமணி தன்னுடைய புதிய நாடகத்தை முடித்துவிட்டான். சென்னையில் ஒரு மானேஜர், அதை நடித்துக் காண்பிக்கவும் ஒப்பந்தம் செய்துகொண்டார். இதற்குள் அவன் காதலித்த இளம்பெண், தன் கணவனுகிய இரும்பு வியாபாரியைவிட்டுப் பிரிந்துவிட்டாள். விவாகரத்து செய்யப்

பட்டது ஆகவே பங்கஜம் என்ற அம்மாது, இப்பொழுது சர்வ சுதந்திரமுடையவளானுள். ராஜாமணிக்கும், பங்கஜத்துக்கும் காதல் அதிகரித்தது. ஒருநாள் ராஜாமணி, இந்த விவகாரம் முழுவதையும் மரகதத்திடம் கூறினுன். இனி மேல் தன் சகோதரியிடம் ஒரு விஷயத்தையும் ஒளிக்கக் கூடாதென்று தீர்மானித்தான்.

ஆனல் தனக்கு விவாகத்தில் நம்பிக்கையில்லையென்றும், விவாகம் செய்துகொள்ளாமலேயே பங்கஜத்தோடு வாழப் போவதாகவும் அவன் கூறியபோது மரகதம் அவனேடு மன்ருடினுள். இதைப்பற்றி இருவரும் அதிக நேரம் வாதித்தும் ஒரு முடிவுக்கும் வரவில்லை. பிறகு ராஜாமணி குடிப்பதைப்பற்றிப் பேச்சு வந்தது. அவன்தான் இப்பொழுது அடிக்கடி குடிப்பதில்லை யென்று கூறினுன். மரகதம், சோளவந்தானுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்பட்டது. போய்விட்டுவந்த பிறகு விவாக விஷயத்தில் ராஜாமணியின் மனதைத் திருப்பி விடலாமென்று நினைத்தாள்.

மரகதம் ஊருக்குப் போகப்போகிருளென்பதைக் கேட்டவுடன் ஜகன்னுதன் மனத்தில் நடந்துகொண்டிருந்த தர்க்கம் பெரிய யுத்தமாகத் தலையெடுத்தது. மரகதம் ஊருக்குப்போய்விட்டால்! என்ன செய்வது என்று ஏங்கினுன்.

ஒருநாள் ஜகன்னுதனும், மரகதமும் தோட்டத்தில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். பால்போல் நிலாப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சுற்றிலும் நிசப்தமாயிருந்தது. பூஞ்செடிகளிலிருந்து வாசனைக்காற்று வீசி ஒருவித உல்லாசமான மயக்கத்தைக் கொடுத்தது. மரகதம் ஒரு வெல்வெட் ரவிக்கையும் பச்சை கலந்த மஞ்சள் புடவையும் அணிந்திருந்தாள். அவளுடைய முகத்தைப் பார்ப்பதற்கே ஜகன்னுதனுக்கு பயம். இதற்கு முன் ஒருநாளும் அவள் அவ்வளவு அழகிய தோற்றத்துடனிருந்ததில்லை. என்ன பேசுவதென்றே அவனுக்குத் தெரியவில்லை.

"நீங்கள் ஊருக்குப் போய்விட்டால் உங்களையே நினைத்துக்கொண்டிருப்போம்." என்று பொதுப்பன்மையில் கூறினான்.

"இங்கு நான் இருந்த காலம் முழுவதும் சந்தோஷமாகவே இருந்தது." என்றாள் மரகதம்.

"நீங்கள் திரும்பிவருவதற்கு அதிக நாள் செல்லுமா?" என்று பரிதாபகரமாகக் கேட்டான் ஜகன்னாதன்.

"நீங்களும் ஒருதடவை சோளவந்தானுக்கு வரவேண்டும்" என்றாள் மரகதம்.

ஜக:—"வேலை அதிகமாயிருக்கிறதே. இல்லாவிட்டால் வந்து விடுவேன்." என்றான்.

"ஒருமாதம் ரஜா எடுத்துக்கொண்டு வாருங்கள். நீங்கள் படும் சிரமத்திற்குப் பரிகாரம் அவசியம்வேண்டும். தீபாவளிக்கு வந்துவிடுங்கள். என் தாயாரும் நடேசனும் உங்களைப் பார்க்க அதிக சந்தோஷப்படுவார்கள்" என்று அழைத்தாள் மரகதம்.

ஜக:—"வருவதற்கு எனக்கும் சந்தோஷம்தான். வருகிறேன்." என்றான்.

அதோடு சம்பாஷணை முடிந்துவிட்டது. மேலே எதைப் பற்றிப் பேசுவது என்று ஜகன்னாதனுக்குத் தெரியவில்லை. சந்திரனையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். தன்னுடைய காதலைக் கூறலாமா வேண்டாமா என்று தனக்குள்ளேயே வாதித்தான். "மாட்டேன் எல்லாம் கெட்டுப்போய் விடும்" என்று தீர்மானத்துக்கு வந்தான்.

மர;—"ஜகன்னாதம்! என்னைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்றாள். மனச்சாட்சிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஜகன்னாதனுக்கு மரகதம் பேசுகிறாளென்று உணரச் சில விநாடிகளாயிற்று. இந்தக் கேள்வியைக் கேட்டுத் திகைத்துப் போய்விட்டான்.

ஜக:—"ஏன்—மரகதவல்லி உங்களுக்குத் தெரியாதா?"

மர:—"உண்மையாக எனக்குத் தெரியாது."

ஜக:—"நீங்கள் தான் உலகத்திலேயே அதிக அழகிய அற்புதப் பெண் என்று நினைக்கிறேன்."

மர:—"அப்படியானால் இதை ஏன் இதுவரையில் என்னிடத்தில் சொல்லவில்லை?"

ஜக:—"நான் எப்படிச் சொல்வது?"

மர:—"ஏன் சொல்லக்கூடாது?"

ஜக:—"என்னுடைய ஸ்திதி உங்களுக்குத் தெரியுமே."

மர:—"ஓகோ நான் பணக்காரியென்று சொல்லுகிறீர்களா? பணத்தினால் எனக்கு என்ன சந்தோஷம்? பணத்தினால் ராஜாமணிக்கு என்ன சுகம் ஏற்பட்டது? உங்களுடைய குணம் ஒன்றே பணத்திற்கு மேலானது."

ஜக:—"ஆம்—ஆனால்......"

மர:—"நான் ஒன்று நினைக்கிறேன்."

ஜக:—"என்ன மரகதவல்லி!"

மர:—"சொன்னால் நீங்கள் அங்கீகரிப்பீர்களோ என்னமோ."

ஜக:—"என்ன மரகதவல்லி உங்களுடைய செய்கைகளை நான் அங்கீகரிப்பதா.? உங்களைப்போல் சிறந்தகுணமும், நல்லெண்ணமும்......"

மர:—'அது தெரியும் எனக்கு எல்லோரும் அப்படித்தான் சொல்லுகிறார்கள். கடவுள் சிருஷ்டியால்தான் நான் நல்லவளா யிருக்கிறேன். நான் விரும்பியதைச் செய்தால் மற்றவர்கள் வேறு விதமாய் நினைப்பார்களோ என்னவோ?"

ஜக:—"ஓ நான் சம்பந்தப்பட்டமட்டில் நீங்கள் எது செய்தாலும் நல்லது என்று தான் நினைப்பேன்."

மர:—"ஒருவேளை நான் விரும்பும் வாலிபனையே மணம் செய்து கொள்வேனென்று பிடிவாதம் செய்து என் தாயார் நான் குறிப்பிடும் மனிதனை விவாகம் செய்துகொள்ள மறுத்து விட்டால்? நீங்கள் என்னுடைய நடத்தையை அங்கீகரிப்பீர்களா?"

ஜக:—"ஏன்......இது நியாயம்தானே.......அதாவது .......நான் சொல்வது......நீங்கள்.........." பாவம். ஜகன்னாதனுடைய நாக்கு சிக்கலில் மாட்டிக்கொண்டது. பேச்சே வரவில்லை. தீர்மானமாகத் தன்னுடைய அபிப்பிராயத்தைக் கூற அவனுக்குத் தைரியம் வரவில்லை.

மர:—"நான் காதலித்த புருஷனை எப்படி விவாகம் செய்து கொள்ளுவது?' என்று மீண்டும் கேட்டாள்.

ஜக:—"வாஸ்தவம். ஆம்......உம் ... ஆம் .... நீங்கள் சொல்வது உண்மைதான்" என்று குழறினான் ஜகன்னாதன்.

மர:—"தவிர தான் காதலிக்கும் வாலிபனொருவரைச் சந்தித்தால் அவர் என்னைக்காதலிக்கிறாரா? என்று நான் அறியவேண்டாமா? அவர் என்னைக் காதலிக்காவிட்டால், எப்படி இருவரும் கலியாணம் செய்துகொள்ளுவது?"

"ஆம் நியாயம்தான்." என்று ஜகன்னாதன் திகைத்துப் போய்த் தன்னையறியாமல் கூறிக் கொண்டிருந்தபோது தனது மனதிற்குள் ஏதோ ஒன்றுபெருங் குரலில் "அடே முட்டாளே! அந்தப் பெண்ணே உன்னை விவாகம் செய்து கொள்ளக் கேட்கும்படி செய்து விட்டாயே. நீயல்லவோ முதலில் கேட்டிருக்கவேண்டும்; நீ அவளைக் காதலிக்கிறாயென்று அவளுக்குத் தெரியவேண்டாமா?" என்று உரக்கக் கூவியதுபோல் தெரிந்தது.

அவனுக்கு மனதில் இன்னும் அதிக சிக்கல் உண்டாய் விட்டது. அகப்பதைப்பு அதிகரித்தது. "மாரகதவல்லி நான் ஏழையாயில்லாமல் உங்களுடைய சம ஸ்திதியிலிருந்தால் உங்களைக்கேட்க........



அப்படியே அவளை கட்டி யணைத்துக்கொண்டான்.

"ஏழை பணக்காரன் என்ற கேள்வியே இதற்கு சம்பந்தமில்லை. நம்மிருவரையும் பற்றி மாத்திரம் பேசுவோம்."

"என்னைப் பற்றிப் பேச எனக்கு தைரியம் வரவில்லை. அதலால் தான் . .........

"இனிமேல் பேசலாம் நான் அனுமதி கொடுக்கிறேன். என்னைப் பற்றி எவ்விதமாய் நினைக்கிறீர்கள்?" என்று கேட்டாள் மரகதம்.

"நான் நினைப்பது மாத்திரம் சரியென்றுன், மரகதவல்லி என்னைப் போல சந்தோஷ முள்ளவள்........."

"அப்படியானுல் உண்மையில் என்மேல் உங்களுக்குப் பிரியமா?"

"எனக்குச் சொல்லவே வார்த்தைகள் வரவில்லை; சொல்லுவது சரியா என்றே........."

மரகதம் மெதுவாக ஜகன்னுதன் கரத்தைப்பற்றினுள். ஜகன்னுதன் அவளுடைய இருகரங்களையும் பற்றிக்கொண்டு தன்னுடைய உணர்ச்சியைத் தெரிவிக்க முயன்றுன். மரகதம் அவனருகில் நெருங்கிச் சாய்ந்துகொண்டு அவன் கழுத்தைத் தன்னிருகைகளாலும் அணைத்துக்கொண்டு "ஜகன்னுதம், உங்களையே மணப்பேன்." என்றுள்.

ஜகன்னுதன் அவளை அப்படியே கட்டியணைத்துக் கொண்டான். மரகதம் தன் தலையை நிமிர்த்தினுள். ஜகன்னுதன் மெதுவாக அவளுடைய உதடுகளில் முத்தமிட்டான். அவளும் அதே பாஷையில் பதிலளித்தாள். உடனே ஜகன்னுதன் "கண்ணே மரகதம்" என்று சொல்லிக் கொண்டே அவளுடைய கன்னங்களிலும், நெற்றியிலும், கழுத்திலும் முத்த மழைபொழிந்தான்.

இந்த ஆனந்த அமுதத்தை மாறி மாறிப் பருகியவாறு இருவரும் சற்றுநேரம் நின்றனர்.

பிறகு மரகதம் "இது ஒருவருக்கும் தெரியாமல் இருக்கவேண்டும். முதல் முதலில் ஊருக்குப்போய் அம்மா

விடம் சொல்லப்போகிறேன். பின்புதான் மற்றவர்கள் அறியவேண்டும்'' என்ருள்.

"உன் தாயார் என்ன சொல்லுவாளோ?

"அதிக சந்தோஷப்படுவாள். என்னுடைய சுகம்தான் அவள் கருத்து. நீங்கள் சோளவந்தானுக்கு வந்ததும் நாம் விவாகம் செய்துகொள்ளலாம். அதாவது விவாகம் செய்து கொள்ளவேண்டுமென்று உங்களுக்கு இஷ்டமிருந்தால். நீங்கள் இன்னும் என்னை விவாகத்திற்குக் கேட்கவில்லை.

"ஓ! ஆ—ஆம். மரகதம்! என்கண்மணி என்னைக் கலியாணம் செய்துகொள்ளமாட்டாயா?''

"எனக்கு இப்பொழுதுதான் ஆனந்தமாயிருக்கிறது. உங்களுடைய தாயாருக்கும் அதிக சந்தோஷமாயிருக்கும்.''

"என்ன, இந்த விஷயத்தைப்பற்றி என் தாயாருக்குத் தெரியுமா?''

"ஆம். முதலில் உங்களுடைய தாயாரிடம் அநுமதி கேட்டுத்தான் நான் இவ்வளவு தைரியமாய்த் தங்களோடு பேச முன் வந்தேன். அவர்களும் அதிக சந்தோஷப்பட்டு நீங்கள் என்னை அங்கீகரிப்பீர்களென்று நம்பிக் கொண்டிருக்கிருர்கள்''.

ஜகன்னுதன் மூளை சிக்கலுக்கு மேல் சிக்கலில் மாட்டிக் கொண்டிருந்தது. சம்பவங்கள் நடக்கும் வேகத்தை அவனுல் அளவிடமுடியவில்லை. தான் வீட்டைவிட்டு அன்று மாலை வெளியேறியபோது தன் தாயாரும் சிறிய தாயாரும் ஒருவிதமாகத் தன்னைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தது இப்பொழுது தான் அவனுக்கு நினைவு வந்தது. இப்பொழுதோ அவ்விருவரும் இவன் நற்செய்தி கொண்டு வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்! பெண்கள் சதிசெய்ய ஆரம்பித்துவிட்டால் ஆண்மகன் என்ன செய்ய முடியும்? வயது முதிர்ந்த மாதரின் அனுபவமும் இளம் பெண்ணின் கண், கன்னம் அதரம் முதலியவைகளும் ஒருங்கு சேர்ந்து விட்டால் ஒரு வாலிபன் தப்பமுடியுமா?

விவாகமாகிவிட்டால் மரகதம் என்னசெய்வதென்பது பற்றிப்பிறகு பேசினார்கள். மரகதம்தான் ஒரு மதுவிலக்குப் பிரசாரகியாகப்போவதாகக் கூறினாள். ஒருநாள் சென்னையில் மதுவிலக்குச் சங்கமொன்றில் ஒருவர் பிரசங்கம் செய்தார். அதைக் கேட்க ஐந்தாறு கிழவர்கள் மாத்திரம் வந்திருந் தார்கள். பிரசங்கமும் சாரமாயில்லை. என்ன பயன் குழந்தை களுக்கல்லவோ முதலில் சொல்ல வேண்டும். குழந்தை களிடம் குடியர்களுக்கு நேரும் கதியை எடுத்துக் கூறினால், அது அவர்கள் மனதில் பதிந்து இளமையிலிருந்தே அவர் கள் குடியை வெறுக்கத் தலைப்படுவார்கள்" என்றாள் மரகதம்.

"குடியினால் பாழடையாமல் திடமாயிருப்பவர்களை ஒப்பிடுகிறார்களே எதிரிகள்"

பத்துப்பேர் குடித்தால் இருவர் அழிந்துவிடுகிறார்கள். அவ்விருவரில் நீ ஒருவனாயிருக்கலாம் என்ற தத்துவத் தைப் பிரசாரம் செய்தால்தான் பயம் இருக்கும்."

"ஆம் நாமிருவரும் நம்முடைய தந்தைகளைப் பற்றி அவர்களுக்குக் கூறுவோம்" என்று சற்றுத் துக்கத்துடன் கூறினான் ஜகன்னாதன்.

இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு மரகதம் சோள வந்தானுக்குப் புறப்பட்டாள். பயணத்திற்கு முன் தினமே இருவரும் நூற்றுக்கணக்கான ஆலிங்கனங்களுக்கும் முத் தங்களுக்குமிடையே பிரியாவிடை பெற்றுக்கொண்டார்கள். மரகதம் நாளொன்றுக்கு இரண்டு காதற்கடிதங்கள் எழுதி னாள். அவளுடைய தாயார் ஜகன்னாதனை மருமகனாக அங்கீ கரித்து விட்டாள். பழவேற்காட்டு மாளிகையிலுள்ளவர் களுக்கும் மற்ற நண்பர் உறவினருக்கும் இந்த சந்தோஷச் செய்தியைப்பற்றிச் சோளவந்தானிலிருந்து கடிதங்கள் வந்தன. ராஜாமணி ஜகன்னாதனுக்குத் தன்னுடைய சந்தோ ஷத்தைத் தெரிவித்தான். "மரகதம் மதுவைத் தொடாத வனைத்தான் மணப்பாள். நமது தேசம் முழுவதிலும் நீ ஒருவன்தான் அம்மாதிரி இருப்பவன். உனக்கு ஏற்றவள் தான் மரகதம்." என்றான்.

ராமாநுஜர் மனைவியும் ஜகன்னாதன் வீட்டிற்கு வந்து அவனுடைய தாயாரிடம் தன் சந்தோஷத்தைத் தெரிவித்தாள். மரகதத்திற்கும், ஜகன்னாதனுக்கும் தோட்டத்தின் மூலையில் தனிவீடுகட்டிக் கொண்டிருப்பதாகச் சொன்னாள். பிறகு, "ஜகன்னாதன் ஐப்பசி மாதம் முழுவதும் ரஜா எடுத்துக் கொள்ளலாம். விவாகமானதும் மரகதத்தோடு "சிறிது காலம் சந்தோஷமாயிருக்க வேண்டாமா?" என்றாள்.

ஜெகன்னாதனுக்கு ஆனந்தம் சொல்லமுடியாது. என்ன பதில் சொல்லுவதென்றே அவனுக்குத் தெரியவில்லை.

## 15. திருட்டுச் சாராய வியாபாரம்

சர்க்காரின் மதுவிலக்கு அமுலைப்பற்றிப் பல வதந்திகள் பரவிக் கொண்டிருந்தன. பணக்காரக் குடியர்களை அதிகாரிகள் ஒன்றும் செய்வதில்லை யென்றும், சில அதிகாரிகளே சட்டவிரோதமான சாராய இறக்குமதிக்கு உடந்தையாயிருந்தன ரென்றும் கதைகள் வழங்கின. ஜகன்னாதனுக்கு இவைகளையெல்லாம் கேட்க வருத்தமாய்த்தானிருந்தது. ஆனால் தன்னுடைய எஜமானனுக்குத் துரோகம் செய்யாமல் தன் கடமையை மாத்திரம் செய்துகொண்டிருப்பது என்று தீர்மானித்தான்.

ஒரு நாள் இரவு திடீரென்று ராமானுஜர் மாளிகையில் திருட்டுப்போய் விட்டது. வீடு முழுதும் ஒரே குழப்பம். சுற்றுப் புறமெல்லாம் திருடர்களைப் பிடிக்க ஆட்கள் அனுப்பப்பட்டனர். போலீஸும் உதவிக்கு வந்தது. திருடர்கள் கன்னம் வைத்து ஒரு அறையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த சாராயப் பீப்பாய்கள் முழுவதையும் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள். வேலைக்காரர்கள் எல்லோரும் விசாரணை செய்யப்பட்டனர். யாரோ மாளிகை வேலைக்காரன் உடந்தையாயிருந்துதான் இந்த வேலை நடந்திருக்க வேண்டுமென்று அபிப்பிராயப் பட்டார்கள். எது எப்படியிருந்தா

லும் ராமானுஜரின் சாராய பொக்கிஷம் முழுவதும்போய் விட்டது.

ஜகன்னாதன் சோளவந்தானுக்குப் போகவேண்டிய நாள் வந்தது. தன்னுடைய வேலைக் கவலையை யெல்லாம் விட்டு விட்டுத் தன் காதலியின் இருப்பிடத்திற்குப் பிரயாணமானான். அவன் சென்ற ரயில்வண்டியே அவனுடைய சந்தோஷத்திற்கு அறிகுறியாக ஒரு காதல் பாட்டு பாடுவதுபோல் இருந்தது. இவன் சோளவந்தானுக்குப் போய்ச் சேர்ந்த சில தினங்களுக் கெல்லாம் முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டு அதி விமரிசையாய் விவாகம் நடந்தது. ஒரு மாத காலம் இருவரும் சந்தோஷமாயிருந்து விட்டுப் பழவேற்காடு திரும்பினார்கள்.

இதற்குள் சாராயத் திருடர்கள் பிடிக்கப்பட்டிருந்தனர். அவ்வூரிலேயே இருந்த ஒருவன் திருட்டுக்கு உடந்தையாயிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டான். கோர்ட்டில் அவன் பல கேவலமான விஷயங்களை வெளியிட்டான். பணக்காரர்கள் மட்டும் சட்டத்தை மீறும்போது தனக்கும் அம்மாதிரி செய்ய உரிமை உண்டென்றும், ராமானுஜர் பழைய துறைமுகத்தின் மூலம் ரங்கூன், சிங்கப்பூர் முதலிய விடங்களிலிருந்து திருட்டுச் சாராயம் இறக்குமதி செய்யும் வழக்கத்தைக் கொண்டிருந்தாரென்றும் கோபத்தோடு உறுமினான். தவிர மற்றுமுள்ள ராஜீயவாதிகள், அதிகாரிகள் முதலியவர்கள் ரகசியமாக மதுவிலக்குச் சட்டத்தையே மீறி நடந்து வருவதாகவும் தனக்குத் தெரிந்தவற்றையெல்லாம் எழுதி ஒரு பொறுப்புள்ள நகரவாசியிடம் கொடுத்திருப்பதாகவும் கூடிய சீக்கிரத்தில் தன்னை வருத்தும் அதிகாரக் கூட்டத்திற்கும் கேடுகாலம் வருமென்றும் பய முறுத்தினான்.

இந்த விஷயங்களை யெல்லாம் பற்றி ஜகன்னாதனும் மரகதமும் அடிக்கடி கலந்து யோசித்தார்கள். இப்படிப் பட்ட சட்ட விரோதமான கெட்ட கொள்கைகளையுடையவர்களிடம் வேலை செய்து அவர்களுக்கு உதவிசெய்வதா?

அல்லது தேச நன்மைக்குரிய கடமையை மாத்திரம் செய்வதா என்பதே அவர்களுடைய கவலையாய் விட்டது. அவர்களுடைய இல்லற வாழ்க்கையில் காதலுக்கு மேல் கடமைக் குரிய பிரச்னைகளே அதிகமாகக் கவனிக்கப்பட்டன.

ராஜாமணி மீண்டும் அயல்நாட்டுப் பிரயாணத்திற்கு போய்விட்டான். இங்கிலாந்துக்குப் போய் உட்கார்ந்து கொண்டு அங்கு எப்படி ஒவ்வொருவரும் இஷ்டம்போல் குடிக்கலாம் என்னும் விஷயத்தைப்பற்றியும், பல வகை சாராயங்களின் குணகுணங்களைப் பற்றியும் ஜகன்னாதனுக்குக் கடிதங்கள் எழுதிக்கொண்டிருந்தான்.

ஜகன்னாதன் வீட்டில் ஒரு விசேஷம். மரகதம் ஜகன்னாதனுக்குத் தங்களிருவருடைய காதல் வாழ்க்கையின் கனியைக் கொடுக்கத் தயாரானாள். மரகதம் கர்ப்பமாயிருக்கிறாளென்று தெரிந்ததும் மாளிகையிலுள்ள பெண்களெல்லாம் அடிக்கடி வந்து அவளோடு தங்களுடைய அனுபவங்களைப் பற்றிப் பேசியும் அவளுக்கு வேண்டியசிச்ருஷைகளைச் செய்து கொண்டுமிருந்தார்கள். இனி, பெண்களின்வேலைதானே. ஜகன்னாதனுக்கு இப்பொழுது மரகதத்திடம் தனியாகப் பேசுவதற்கு அவகாசம் கிடைப்பதில்லை.

அவனுக்கு இப்பொழுது தினசரி வேலையைத் தவிர மற்றப் பொறுப்புகளும் வந்து சேர்ந்தன. ராமநுஜரின் ஜேஷ்ட புத்திரன் அடிக்கடி குடித்து விட்டுத் தாசிகள் வீட்டில் அகப்பட்டுக்கொள்வதையும், கொள்ளைக் கூட்டத்தார்களோடு சம்பந்தப்பட்டுப் பணம் கொடுத்துத் தப்பித்துக் கொள்ளவேண்டிய அவசியத்தையுமே அவன் மாளிகைக் காரர்களின் பந்து என்ற முறையில் கவனிக்க வேண்டியதாயிற்று.

ஒரு நாள் மானேஜர் மாணிக்கம் ஜகன்னாதனிடம் வந்து அன்று இரவு மாளிகையில் ஏதோ சில வேலைகள் நடக்கப்போவதாகவும் நானும் நீயும் அதில் சம்பந்தப்பட வேண்டியதில்லை யென்றும் அதைப்பற்றி நீ யொன்றும் கவனிக்காமலே இருக்க வேண்டுமென்றும் கூறினான்.

அன்றிரவு மோட்டார் வண்டிகள் வருவதும் போவது மாக இருந்தன. பழைய துறைமுகத்தில் சந்தடியும் விளக்கு வெளிச்சமும் தெரிந்தன. ஜகன்னுதன் ஒன்றையும் கவனிக்காமலே யிருந்து விட்டான். ஆனுல் உண்மை எப்படியோ வெளிப்பட்டுவிட்டது. மறுநாள் ஊர் முழுதும் 'ராமாநுஜர் திருட்டுச் சாராயம் ஏராளமாய் இறக்குமதி செய்யும் கொள்ளைக்கூட்டத் தொழிலில் இறங்கி விட்டார்' என்ற ஓரேபேச்சு.

ராஜாமணி ஐரோப்பாவிலிருந்து திரும்பி வந்து விட்டான். ஜகன்னுதன் மேற்கண்ட விஷயங்களையெல்லாம் ஒரு நாள் அவனிடம் கூறினுன். முதலில் இதை வெறும் தமாஷாகப் பாவித்துச் சிரித்தான் ராஜாமணி. பிறகு உண்மை முழுதும் தெரிந்ததும் "என்ன செய்வது. உன்னைப்போன்ற மதுவிலக்கு வெறிகொண்டவர்களால்தான் இவ்வளவும் நேர்ந்திருக்கிறது. நமது தேசத்தில் அதிக வருமானம் வரும் ஒரு பெரிய கைத்தொழிலேயே நிறுத்த முயன்றீர்கள். ராமானுஜர் போன்ற பெரும் லேவாதேவிக் காரர்களுக்குச் சாராய விற்பனையில் தான் லாபம். திருட்டுச் சாராயத்திலோ முதலுக்குமேல் இரண்டு பங்கு லாபம் கிடைக்கும். அதனுல் தான் அவர்கள் இந்தத் தொழிலில் ஈடுபடுகிறுர்கள்'' என்று விளக்கினுன்.

ராமானுஜர் செய்கை சட்ட விரோதமான குற்றம். ஜகன்னுதனுக்கும் மரகதத்திற்கும் இது நன்ருய்த் தெரியும். ஆனுல் ராமானுஜர் பணத்தை வாங்கி வயிறு வளர்க்கும் வரை அவர்கள் அதை எதிர்க்கவாவது மற்றவர்களுக்குக் கூறவாவது முடியுமா? எத்தனைநாள் இம்மாதிரி திருட்டுத் தனத்திற்கு உடந்தையாயிருப்பது? கடைசியில் தாங்களிரு வரும்கூட சம்பந்தப்பட்டவர்களென்று தெரிந்தால்? போலீஸ்கூட இதற்கு உடந்தையாயிருப்பதாகச் சொல்லப் பட்டது. அப்படியிருக்க உண்மைத் தேசாபிமானியின் கடமையென்ன? போலீஸிடம் கூறுவதா? சட்டத்தை சரியாக நடத்துமாறு போலீஸைக் கட்டாயப்படுத்துவதா?

ஊர்முற்றிலும் இதைப்பற்றியே பேச்சு. போலீஸாருக்கும் அதிகாரிகளுக்கும் மொட்டை விண்ணப்பங்கள் எழுதப்பட்டன. மதுவிலக்குப் பிரசாரகர்கள் கோப வெறியால் சீறினர்கள். ஆனல் அதிகாரிகளோ, ராமானுஜர்மீது வழக்குத் தொடர சரியான ருஜு இல்லையென்று சொல்லி விட்டார்கள்.

ஜகன்னுதன் சென்னைக்குப் போகும்போதெல்லாம், கந்தசாமியிடமிருந்து அநேக விஷயங்களைத் தெரிந்துகொண்டான். சென்னையிலுள்ள பெரிய அதிகாரிகளும் சட்டசபை அங்கத்தினர்களும்கூட திருட்டுச் சாராய வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பதை யறிந்தான். இவைகளோடு ராஜாமணி கந்தசாமி இருவர்களுடைய மதுபான சாதகமான வாதத்தையும் கேட்ட ஜகன்னுதன் மனம் குழம்பிவிட்டது. ஒரு வேளை மதுவிலக்கு அவ்வளவு சிறந்த காரியமாயிருக்காதோ என்ற சந்தேகமும் அவனுக்குத் தோன்றும்.

ஆனல் மரகதமோ அப்படியல்ல; மது வழக்கத்தை வேரோடு களைந்தெறிய வேண்டுமென்பது அவளுடைய லட்சியம். ஜகன்னுதனின் தயக்கத்திற்காக அவனைக் கோபித்துக் கொள்ளுவாள். இவ்விஷயத்தில் இருவருக்கும் அடிப்படையானவித்தியாசமிருந்தது. வேறெருவனைக்குடிக்காதேஎன்று சொன்னல் என்ன நினைத்துக் கொள்ளுவானேவென்று ஜகன்னுதன் தலையிடாமல் பேசாமலிருந்து விடுவான். மரகதமோ குடிப்பழக்கத்தையுடைய ஒவ்வொருவரையும் சீர் திருத்துவது என்று புறப்பட்டு அவர்களோடு வாதித்து மன்ருடுவாள். மதுவிலக்கைப்பற்றிய புத்தகங்களையும் பத்திரிகைகளையும் படித்துக் கொண்டேயிருப்பாள். தன்னுடைய சிரம பரிகாரத்தின் அவசியத்தைக் கருதவே மாட்டாள்.

இந்த விஷயத்தைப்பற்றி முற்றிலும் தெரிந்து கொண்டால் தான் எதிரிகளோடுவாதித்து அவர்களைத்திருப்பி விடலாம் என்பது அவளுடைய கருத்து. வயது முதிர்ந்தபெரியோர்கள் கூட சிலர் மதுவிலக்குக்காகப் பாடு படும்போது வாலிபர்கள், சும்மா இருக்கலாமா? அப்படியிருந்தும் ஜனங்

கள் அதிகமாகக் குடித்துக் கொண்டே வருகிறார்களே! கள்ளுக்கடைக்கு முன் குடியர்கள் காலில் விழுந்து மறியல் செய்தார்கள். மீண்டும் ஜனங்கள் குடிப்பதென்றால் இதன் காரணத்தை முழுவதும் அறிய வேண்டாமா? சர்க்கார் லைசென்ஸுடன் மாத்திரம் கள் விற்பது என்று முந்திய வழக்கம் இருந்ததே. அதிலாவது குடி குறைந்ததா? இல்லை கலால் இலாகா அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்தும் இன்னும் வேறு வழிகளிலும் கள் விற்கப்பட்டு எவனுக்கும் சுலபமாக மது கிடைக்கும் படி ஏற்பாடு செய்யப்பட்டது. எப்படித் திரும்பினாலும் கஷ்டமாக விருக்கிறது. தன் அழகிய நெற்றி சுருங்க, இதரவிஷயங்களையெல்லாம் பற்றி ஆழ்ந்த யோசனைசெய்து மரகதம் ஒரு புத்தகத்தில் அடிக்கடி ஏதோ குறிப்புகள் எழுதிக் கொள்வாள். "இந்தப்புள்ளிவிவரங்களையெல்லாம் வைத்துக் கொண்டு என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்கும் ஜகன்னாதனுக்குச்சரியான பதில் ஒன்றும் சொல்லமாட்டாள். இனிக் குடியர்கள் கேள்விகேட்பாரில்லாமல் தம்மிஷ்டம் போல்குடிப்பதற்குக் கொஞ்சம் கூட இடமிருக்கப்போவதில்லை என்ற தீர்மானத்தை மாத்திரம் கைக்கொண்டாள்.

மரகதத்திற்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தது. குழந்தையின் முகமோ ஜகன்னாதனின் தோற்றத்தை அச்செடுத்து வைத்தாற்போலிருந்தது. வாழ்க்கையில் தவறுதல்கள் நேர்வது சகஜம்தான். ஆனால் ஒரு ஜன்மம் மீண்டும் ஆரம்பிப்பதாயிருந்தாலும் அதேமாதிரி ஏற்படுவது நிச்சயம். இது குழந்தை பிறப்பில்தான் தெளிவாகத் தோன்றுகிறது. பெற்றோர்களின் தோற்றம் அவயவ அமைப்பு எல்லாம் குழந்தைகளில் காணப்படுவது ஆழ்ந்தறியக்கூடாத ஒரு உண்மையாகும்.

மரகதத்தின் குழந்தையைப் பார்க்க ஒவ்வொருவராக வந்துகொண்டிருந்தார்கள். சோளவந்தானிலிருந்து அவளுடைய தாயார்வந்து சேர்ந்தாள். குழந்தைகளைப்பற்றிய பேச்சுகள் வளர்ந்தன. குழந்தைகளைப் போஷிக்கும் விதம், அவைகளின் விளையாட்டுகள் முதலியவற்றைப்பற்றி மரகதத்

தின் தாயார் அவளுக்குக் கூறினாள். மரகதம் குழந்தையா யிருக்கும்போது நடந்துகொண்ட விதத்தைப்பற்றியும் கிழ விகள் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களைப்போலவே ஜகன்னாதனுக்கும் பெருமை. தன் னுடைய காதலின்பயன் குழந்தையாக அவதரித்ததை நினைக்க நினைக்க அவனுக்கு அற்புதமும் சந்தோஷமும் அதி கரித்தன. அவனுக்கு அகங்காரம் கிடையாது. ஆயினும் தன்னைப் பொறுத்தமட்டில்தான் நியாயமாகவும் தர்மமாக வும் இருந்து நல்ல கணவனாக நடந்துகொண்டதனால்தான் இப்பொழுது நானும் மரகதமும் தங்களுடைய காதல் செல்வத்தை அனுபவிக்க நேர்ந்ததென்பதை உணர்ந்தான்.

இச்சமயத்தில் ராஜாமணியின் புது நாடகம் நடத்தப் பட்டது. மரகதம் போகமுடியாது. ஜகன்னாதன்போயிருந் தான். அது சோகரசம் நிறைந்த நாடகம். விமர்சகர்கள் பெரிய இலக்கியப் பத்திரிகைகளில் அதைப்பற்றிச் சிலாகித் திருந்தார்கள். காளிதாசன், பாணபட்டன் தண்டி முதலிய வர்களுக்கு ராஜாமணியை ஒப்பிட்டுப் பேசினார்கள். கதை முடிவில் நாடகபாத்திரங்களெல்லோரும் மடியும்படியான நாடகம்தான் இலக்கியத்தில் உயர்ந்தபடி என்று 'பெரிய' விமர்சகர்கள் அபிப்பிராயப்பட்டனர். அது இயற்கைக்கு ஒத்ததல்லவா? ஆகவே இயற்கையை உலக நிகழ்ச்சி உண் மைகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ராஜாமணியின் நாடகம் சிறந்த மதிப்புரைகள் பெற்றது.

ஆனால் ராஜாமணியின் வாழ்க்கையும் நாடகத்தையே பின்பற்றுவதாயிருந்தது. மீண்டும் அதிகமாகக்குடிக்கவா ரம்பித்தான். தான் வைத்துக்கொண்டிருந்த நடிகைப் பெண் ணோடு அவன் சந்தோஷமாக வாழமுடியவில்லை.

அவனுடைய வாழ்க்கையைப்பற்றி உலாவிய வதந்தி கள் மரகதத்திற்கு அதிக கவலையையேற்படுத்தின. ராஜாமணி கேவலமான குடியர்களோடு சேர்ந்துகொண்டு குடித்துக் கலகம்செய்து காயம்பட்டதாகவும் செய்திகள் வந்தன.

ஆனல் பாவம் மரகதம் என்ன செய்வாள்? கைக்குழந்தையை விட்டுவிட்டுச் சகோதரனைச் சீர்திருத்த வெளியில் போக முடியுமா? ராஜாமணியின் விதி அவனுடைய தகப்பனர் சென்ற வழியில் செல்லவேண்டியதுதான்.

சர்க்காரின் மதுவிலக்கு அமுல் தீவிரமாக நடந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. ஆனல் மதுவிலக்கு இலாகாவின் தலைவரே கள்ளுக்கடைக் குத்தகையில் லக்ஷாதிபதியானவர். அந்தப் பணத்தின் உதவியால் இந்த உயர்பதவிக்கு வந்துவிட்டார். மற்றைக் கீழ் அதிகாரிகளோ சொல்லவேண்டியதில்லை. ஏழைக் கள்ளுக்கடைக்காரர்களை இம்சித்துத் தங்களுடைய அமுல் நன்ருய் நடந்துவருவதாகக் காட்டிக்கொள்வார்கள். பெரிய பணக்காரர்கள், சாராயத் திருட்டே வியாபாரமாகக் கொண்டிருப்பவர்கள் சிறிதும் அச்சமின்றித் தங்களுடைய தர்பாரை நடத்திக்கொண்டிருந்தார்கள். இந்த விஷயங்களையெல்லாம் ஜகன்னுதன் கந்தசாமியினிடமிருந்து அறிந்துகொண்டான். தவிர சுதேச ராஜ்யங்களில் இந்தச் சட்டம் அமுலுக்குப் பொருந்தாததால் சட்டவிரோத சாராய வியாபாரிகளும் குடியர்களும் சுதேச சமஸ்தானங்களின் எல்லைகளில் வசித்து இரண்டு பக்கத்திலும் சுலபமாக வியாபாரம் நடத்திவந்தார்கள்.

சட்டவிரோதமான அயல்நாட்டுச் சாராயம் இறக்குவதற்குப் பழவேற்காடு போன்ற பழைய துறைமுகங்களே சாதகமாயிருந்தன. இரவில் எப்பொழுது பார்த்தாலும் மோட்டார்களும் வண்டிகளும் பாரத்துடன் போய்க்கொண்டே யிருக்கும். போலீஸ் அதிகாரிகளுக்கு மாமூல் வழக்கமாயிருந்ததனல், அந்த ஒப்பந்தத்தைச் சரியாக நிறைவேற்றியவர்களுக்கு ஒருகஷ்டமும் கிடையாது. தேர்தல்களில் பணம் செலவழித்து உதவிய ராமானுஜருக்கென்ன குறைவு? மாளிகையில் விசேஷமாய் இரவு இரண்டுமணி சுமாருக்குத்தான் மோட்டார்களில் துறைமுகத்திலிருந்து சரக்கு வந்திறங்கும். ராமானுஜர் மனைவியைத்தவிர பார்த்தசாரதி உள்பட எல்லோரும் சரக்கு வரவை எதிர்பார்த்துக் கொண்

டிருப்பார்கள். சரக்கு கொண்டுவந்த கப்பல் விடிவதற்குள் கடலில் நெடுந்தூரம் போய்விடும். ஆனால் வேலைக்காரர்கள் மூலம் உண்மையைப்பற்றிய வதந்தி ஊர் முழுதும் மறுநாள் உலாவும். அடிக்கடி, சாராயத் தொழிலிலீடுபட்ட கூட்டங்களுக்குள் கலகம் நேரிடுவதும் உண்டு. போலீஸைச் சிநேகித்துக்கொண்ட கூட்டத்திற்குத்தான் வெற்றி. ராமானுஜர் பெரிய பணக்காரர். அவருடைய 'சரக்கு'த் தொழில் தடையின்றி நடந்து வந்தது. அவருடைய பாங்கித் தொழிலும் இதன்பயனாக விருத்தியாய் விட்டது. கூடிய சீக்கிரத்தில் ராமானுஜர் ரொக்கக் கடையின் நாணயம் மீண்டும் மதிப்படைந்தது.

இந்த நிலைமையில் ஒருநாளிரவு திடீரென ஒரு துப்பாக்கி சுடும் சப்தம் கேட்டது. நள்ளிரவில் எழுந்த அந்த ஓசை மாளிகையைச் சுற்றியிருந்த அமைதியைக் கெடுத்துவிட்டது. அதன்பின்னால் உடனே பல வெடிகள் கிளம்பின. திடுக்கிட்டெழுந்த ஜகன்னாதன் மரகதத்தையும் எழுப்பினான். மூவரும் குழந்தையுடன் தரையில் சுவரோரத்தில் பதுங்கிவிட்டார்கள். ஒருவேளை துப்பாக்கிக் குண்டு ஜன்னல் வழியாக வந்துவிட்டால். சப்தத்திற்குக் காரணம் ஏதோ இரண்டு கூட்டத்தார்களுக்கும் நேர்ந்த சண்டைதான். படபட வென்று வெடிகள் வெடித்தன. ஏதோ பெரிய மோட்டாரொன்று ஓடும் சப்தம். சிறிது நேரத்தில் முன்போல அமைதி.

ஜகன்னாதன் மெதுவாக எழுந்து வெளியே சென்றான். மரகதமும் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் அவனைப் பின் தொடர்ந்தாள். நாலாபக்கத்திலிருந்தும் வேலைக்காரர்களும் மற்றோரும் கூடிவிட்டார்கள். நடந்ததென்னவென்று ஒருவருக்கும் தெளிவாய்த் தெரியவில்லை. கொள்ளைக் கூட்டத்தாருக்கும் திருட்டுச் சாராயக்காரர்களுக்கும் சண்டை என்று மாத்திரமே புலப்பட்டது.

"காவல்கார வெள்ளையன் எங்கே?" என்றான் ஜகன்னாதன் திடீரென்று. வெள்ளையனைத்தான் காணவில்லை. எல்

லோரும் தோட்ட முழுவதும் தேடினார்கள். கடைசியில் ஒரு மரத்தடியில் துப்பாக்கிக் குண்டால் காயமடைந்து வெள்ளையன் கிடப்பதைக் கண்டார்கள்.

"இந்த விஷயத்தைப் போலீஸுக்குத் தெரிவிக்க வேண்டாமா?" என்றான் ஜகன்னாதன்.

"போலீஸாவது பூசணிக்காயாவது! இதை எஜமான் தான் கவனிக்க வேண்டும்" என்று கோபமாகச் சொல்லி விட்டு வேலைக்காரர்களுக்கெல்லாம் ராமானுஜர் கூறும் வரை மூச்சுவிடக் கூடாதென்று மாணிக்கம் உத்திரவிட்டான்.

பிறகு மாணிக்கமும் ஜகன்னாதனும் டெலிபோன் மூலம் ராமானுஜருக்கு நடந்த விஷயத்தைத் தெரிவித்தார்கள். எஜமானனே, நீங்கள் சும்மா இருங்கள் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டார். ஆம் பெரிய மனிதர் வழக்கமே அப்படித்தான். அவர்கள் எதையும் "பார்த்துக் கொள்ளுவார்கள்" ராமானுஜர் போலீஸ் அதிகாரிக்கும் மற்றும் சில பிரபலஸ்தர்களுக்கும் சில கடிதங்கள் எழுதுவார். அவர்கள் விஷய முழுவதையும் கௌரவமாக முடித்து விடுவார்கள்.

மறுநாள் விடிவதற்குள் ராமானுஜர் சென்னையிலிருந்து வந்துவிட்டார். முதலில் மாணிக்கத்தோடு கலந்து பேசி விட்டுப் பிறகு ஜகன்னாதனை அழைத்தார்.

"ஜகன்னாதம், இந்த விஷயத்தைப் பற்றி உனக்குத் தெரிந்தது முழுவதையும் சொல்" என்றார்.

"எனக்கு ஒன்றுமே தெரியாது. மற்றவர்களைப் போல் நானும் தூங்கிக் கொண்டிருந்தேன். துப்பாக்கி சத்தம் கேட்டுத்தான் விழித்துக்கொண்டேன்" என்று பதிலளித்தான் ஜகன்னாதன்.

"நீ ஜன்னல் வழியாகப் பார்க்கவில்லையா?"

"இல்லை நான் என் மனைவியையும் குழந்தையையும் பார்த்துக் கொண்டிருந்தேன்."

"சந்தேகமான பேர்வழி யாரையாவது நீ தோட்டத்தில் பார்த்ததுண்டா?"

"இல்லை."

"இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே போலீஸ்காரர்கள் வருவார்கள். கண்ட கேள்விகளைக் கேட்பார்கள், செத்துப்போன வெள்ளையனைப்பற்றிப் பஞ்சாயத்தார் விசாரணை நடைபெறும். உன்னைக் கேள்விகள் கேட்கும்போது ஜாக்கிரதையாகப் பதில் கூறவேண்டும். எனக்கு எத்தனையோ விரோதிகள் இருக்கிறார்கள். இந்தச் சம்பவத்திலிருந்து அவர்கள் வீண் வம்புகளைப் பரப்பி எனக்குத் தீங்கு செய்ய முயல்வார்கள்."

"ஆம்"

"இதனால் பத்திரிகைகளுக்கு மாத்திரம் தான் லாபமேற்படும். என்னுடைய வேலைக்காரர்களும் நீயும் எனக்கு நன்றி காட்டக் கடமைப்பட்டிருக்கிறீர்களென்று நம்புகிறேன்."

"வாஸ்தவம் என் மட்டில் நான் பத்திரிகைக்காரர்களிடம் ஒன்றும் சொல்லமாட்டேன்."

ராமானுஜர் சிறிது நேரம் தயங்கினர். ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்வதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தார். கடைசியில் "இதற்குமுன் இங்கு இரவில் நடந்த விஷயங்கள் உனக்குத் தெரியுமா?"

"தெரியும்"

"என்ன நடந்தது?"

"மோட்டார் வண்டிகள் போவதும் வருவதும்...—"

"ஆனல் நீ அதில் அதிகமாக உன் கவனத்தைச் செலுத்தவில்லையே?"

"இல்லை"

"மோட்டார் ஓட்டிகளொருவரையும் நீ பார்த்ததில்லையே."

"இல்லை"

"இதைப்பற்றி ஒருவரிடமும் சொல்லிய தில்லையே."

"இல்லை. இந்த விஷயத்தில் நான் தலையிட்டுக்கொள்ளக் கூடாதென்று முந்தியே எனக்கு உத்திரவு."

"யார் உத்திரவிட்டது?"

"மாணிக்கம்"

"என்ன சொன்னான்?"

"வெள்ளையன் காவல் பார்த்துக் கொள்வானென்றும் நான் இதைப்பற்றிச்சிரத்தையெடுத்துக்கொள்ளக்கூடாதென்றும் இது உங்களுடைய கட்டளையென்றும் கூறினான்."

"என்னுடைய உத்திரவென்று சொன்னான்?"

"ஆம்."

"நான் அப்படிச் சொல்லவேயில்லையே? நான் சொல்வது அர்த்தமாகிறதா?"

"மாணிக்கம் சொல்லியதுதான் எனக்குத் தெரியும்."

"அது அநேக நாட்களுக்கு முன்னால் அல்லவா?" ராமானுஜர் கொஞ்சம் கோபத்துடனேயே பேசினார்.

"ஆம் மோட்டார் வண்டிகள் வர ஆரம்பிப்பதற்கு முன்னால்."

"நீ மறந்திருக்கலாம். மாணிக்கம் தான் உன்னிடம் அப்படிச் சொல்லவில்லையென்று கூறினாலும் கூறலாம்.

இந்தமாதிரியான சாமர்த்தியப் பேச்சுகளில் ஜகன்னாதனுக்கு அதிக பழக்கம் கிடையாது. ஆயினும் ராமானுஜரின் வார்த்தைகளுடைய முழுதாத்பரியத்தையும் உணர்ந்துவிட்டான் "ஆம் மாணிக்கம் மறக்கலாம். நீங்கள் சொல்வது தெரிகிறது" என்றான்.

ராமானுஜருக்கு இப்பொழுதுதான் கொஞ்சம் சிரிப்பு வந்தது. "ஜகன்னாதம்! சில சமயங்களில் நாம் சில விஷயங்

களை மறந்துவிடுவது எப்பொழுதுமே நல்லது. நினைவில்லை என்று சொல்லப்படும் பதில் எப்பொழுதும் சட்ட விரோதமாகாது. நான் உனக்கு இங்கே நல்ல வேலை கொடுத்திருக்கிறேன். தவிர நீயும் குடும்பத்தில் சேர்ந்தவனுகவே இருந்து வந்திருக்கிருய். பணக்காரர்களின் விரோதிகள் பொருமையால் இம்மாதிரியான சிறு சந்தர்ப்பங்களைக் கொண்டு துன்பம் விளைவிக்கப் பார்ப்பார்கள். ஆகவே மோட்டார்கள் வரும் விஷயத்தில் நான் கொடுத்த உத்தரவுகளை மறந்துவிடு. யாராவது கேட்டால் உனக்கு ஒன்றுமே தெரியாதென்ருவது நினைவில்லையென்ருவது சொல்லிவிடு. தெரிகிறதா?'' என்ருர்.

ஜகன்ஞதன் இவைகளையெல்லாம் கேட்டுக்கொண்டு வீட்டுக்குப் போய் மரகதத்திடம் முழுவதும் சொன்ஞன்.

உடனே அவளுக்கு அடங்காக் கோபம் வந்துவிட்டது. "ராமாநுஜருக்காகப் பொய் சொல்லப் போகிறீர்களா?'' என்று பச்சையாய்க் கேட்டாள்.

"என்னை விசாரிக்க மாட்டார்களென்று நினைக்கிறேன்.'' என்ருன் ஜகன்ஞதன்.

"விசாரித்தால் என்ன செய்யப்போகிறீர்கள்?

"என்ன செய்வதென்று தெரியவில்லை. ஒரே குழப்பமாயிருக்கிறது. நீ என்ன செய்வாய்?''

"உங்களைக் கேட்கிறேன்!'' என்று மரகதம் அவனை உற்றுப் பார்த்த வண்ணம் கேட்டாள்.

"ஆஞல் கண்ணே, அவர்களெல்லோரும் உன் சொந்தக்காரர்களாயிற்றே! நான் உண்மையைக் கூறிஞல் குடும்பம் முழுவதும் கஷ்டப்படுமே. அத்தை முதலியவர்கள் ஒரு குற்றமும் செய்யவில்லையே. குற்றமற்றவர்களைத் துன்பப்படும்படி செய்தா, நாம் நம்முடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்?''

"அதெல்லாமிருக்கட்டும். எஜமானனுடைய உத்தரவென்று அன்று மாணிக்கம் சொன்னதை என்னிடம்கூடச்

சொன்னீர்களே. அது எனக்கு இன்னும் மறக்கவில்லையே! அப்படியிருக்க, நீங்கள் விசாரணையில் நினைவில்லையென்று சொன்னால் அது சத்தியத்திற்கு விரோதமல்லவா?

"ஆம்" தவிர விசாரணைக்குமுன்பே உண்மையைச் சொல்வதாக, கடவுள் சாட்சியாக சத்தியம் செய்து விட்டல்லவோ பேசவேண்டும்? அப்பொழுது பொய் சொன்னால் மிகவும் பாபமாயிற்றே? எல்லோரும் பொய் சொல்ல வாரம்பித்தால், உலகம் பாழடைந்து விடுமே."

"உண்மையைச் சொன்னால் அத்தைக்குக் கஷ்டம். அதுவும் பாவம்தானே! இரண்டு குற்றங்களில் எதைச் செய்தாலென்ன?

"அத்தைக்குக் கஷ்டமேற் படுவதால் பரவாயில்லை. அதனால் அவள் கடைசியில் ராமானுஜனைக் குடிப் படுகுழியிலிருந்து மீட்க உதவும்."

"ஆனால் விசாரணையில் உண்மை சொல்லச் சொல்கிறாயா?"

"உங்களிஷ்டம். எனக்காகவாவது, அத்தைக்காகவாவது ஒருகாரியம் செய்ய வேண்டாம். நீங்களே நன்றாய் யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்."

அப்படியானால் நாம் இவ்வேலையையும் இவ்வீட்டையும் விட்டு விடவேண்டியதுதான். உன்னுடைய நிலைமையும் குழந்தையின் கதியும் என்னவாகும் அப்பொழுது?"

அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். வேறு வீட்டுக்குப் போவோம். வேறு தொழிலிலமர்வோம். குழந்தை மேல் பழியைப்போட்டு நாம் மானத்தை இழக்கவேண்டாம்."

"அப்படியானால் சரி. என்னுடைய எஜமானனுக்காக நான் பொய் சொல்லக் கடமைப்பட்டிருக்கவில்லை. என்னுடைய சம்பளத்திற்குச் சரியான வேலை செய்திருக்கிறேன். என் மனச்சாட்சியை நான்விற்று விடப் போவதில்லை."

என்று ஜகன்னாதன் கூறியதும் மரகதத்திற்கு வெற்றி கிடைத்து விட்டது.

"இதற்காக வேண்டுமென்று ராமானுஜர் மேல் குற்றம் சாட்டவேண்டாம்! ஆனால் உங்களை விசாரிக்கும்படி நேரிட்டால் பொய் சொல்ல வேண்டாம்." என்று எச்சரித்தாள்.

## 16. விசாரணை

முறைப்படி விசாரணை நடந்தது. ஏற்கெனவே பல பத்திரிகைகளில் மாளிகை துப்பாக்கிக் கொலை சம்பந்தமாக வதந்திகள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. விசாரணையில் நீதிபதி ஸ்தானம் வகித்தவர் ராமானுஜருக்கு மிகவும் வேண்டிய உள்ளூர் பிரபலஸ்தர். ஆனால் பஞ்சாயத்தார்களில் கைலாசம் என்னும் தீவிர மதுவிலக்குப் பிரசாரகர் ஒருவராயிருந்தார். முதலில் மானேஜர் மாணிக்கம் அழைக்கப்பட்டான்.

அவன் இரவில் நடக்கும் சமாசாரத்தைப்பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாதென்றும், மோட்டார்கள் வருவதும் போவதும், தனக்குத் தெரியாதென்றும் சொல்லி விட்டான். விசாரணைத் தலைவர் பிறகு ஜகன்னாதனைச் சாக்ஷியாகக் கூப்பிட்டார். முதலில் அவர் சில லேசான கேள்விகளைக் கேட்டுவிட்டு ஜகன்னாதனைப்போகச்சொல்லும் சமயத்தில் கைலாசம் தாம் சாக்ஷியைச் சில கேள்விகள் கேட்க விரும்புவதாகத் தெரிவித்தார்.

"ஜகன்னாதம்! துப்பாக்கி சப்தம் கேட்டவுடன் மோட்டார் போகும் சப்தமும் கேட்டீர்களல்லவா?

"ஆம்"

"அந்த மோட்டார்காரில் என்ன கொண்டு வரப்பட்டதென்று உமக்குத் தெரியுமா?"

"மோட்டாரில் வந்த சாமான் என்னவென்று எனக்குத் தெரியாது."

"அதாவது மற்றவர்கள் சொல்லத்தான் கேட்டிருக்கிறீர்கள்?"

இச்சமயத்தில் நீதிபதி குறுக்கிட்டார். கேள்விப்பட்ட விஷயங்களை எல்லாம் சாட்சி சொல்லக் கூடாதென்றும் கைலாஸம் ஒழுங்கற்ற முறையைப் பின்பற்றுவதாகவும் கூறினர். உடனே கைலாஸம்,

"சரி நீங்கள் கேள்விப்பட்டதைச் சொல்லவேண்டாம். அந்த மோட்டார்காரில் என்ன வந்ததென்பது உங்களுக்குத் தெரியவே தெரியாது?"

"தெரியாது"

"என்னவென்று தெரிந்துகொள்ள நீங்கள் முயற்சிக்கவில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"அது என் வேலையல்ல."

"ஓ, உன் வேலையல்லவென்று உனக்குச் சொல்லப்பட்டதா?

"ஆம்"

"யார் சொன்னது?"

"மாணிக்கம்"

"இரவில் மோட்டார்கள் வரும் விஷயத்தைப்பற்றித் தெரிந்துகொள்ள நீங்கள் முயற்சி செய்யக்கூடாதென்று மாணிக்கம் உங்களுக்குக் கூறினர்?

"ஆம்."

"எப்பொழுது"

"ஒரு வருஷத்திற்குமுன்"

"அதாவது மோட்டார் வண்டிகளில் சாமான்கள் வர ஆரம்பித்ததிலிருந்து?"

"ஆம்."

"நீங்கள் ஏன் தலையிட்டுக் கொள்ளக்கூடாது என்று மாணிக்கம் கூறினாரா?"

"இல்லை. நமக்கொன்றும் காரணம் தெரியாதென்று சொல்லிவிட்டார்."

"ஓ அவருக்குத் தெரியாதா? அப்படியானால், வேறொருவரிடமிருந்து வந்த உத்திரவைத்தான் உங்களிடம் தெரிவித்தாரோ?"

"ஆம்."

"யாருடைய உத்திரவு என்று சொன்னார்?".

"நிறுத்து! அதற்குப் பதில் சொல்லக்கூடாது" என்று கூவினார் விசாரணைத் தலைவர். இம்மாதிரி கேள்விகளெல்லாம் கேட்கக் கூடாதென்று ராமானுஜரைக் காப்பாற்ற முயலும் விசாரணைத் தலைவர் கூறினார். உடனே கைலாசம் விசாரணைத் தலைவரின் கடமை, அதிகாரம், பஞ்சாயத்தார்களின் உரிமை முதலியவைகளைப்பற்றிய சட்டக் குறிப்புகளை மேற்கோள் காட்ட வாரம்பித்துவிட்டார். இருவருக்கும் சண்டை. ஆனால் நீதிபதிக்கு அதிக சட்டம் தெரியாது. தமக்குத் தெரியாதென்பதை வெளியிடவும் மனமில்லை. ஆகவே கைலாசம் உரிமையில் வெற்றியடைந்து

"யாருடைய உத்திரவென்று சொன்னார் என்று மீண்டும் கேட்டார்.

"ராமானுஜரின் உத்திரவென்று சொன்னார்"

"ஓகோ இந்த விஷயங்களில் தலையிட்டுக் கொள்ளக் கூடாதென்று ராமானுஜர் உத்திரவிட்டதாக உங்களுக்குத் தெரிவித்தார்?"

"ஆம்"

"மோட்டார்களில் சாராயம் வந்திறங்கிற்று என்று எப்பொழுதாவது நீங்கள் நினைத்ததுண்டா?"

"ஆம்"

"இதைப் போலீஸுக்குத் தெரிவித்தீர்களா?"

"இல்லை"

"ஏன்?"

"அது என் கடமையென்று நான் நினைக்கவில்லை."

"சட்டவிரோதமான காரியங்கள் செய்யப்படுகின்றன வென்பது உங்களுக்குத் தெரியும்?"

"ஆம்"

மாணிக்கம் மீண்டும் அழைக்கப்பட்டான். சாமர்த்திய சாலியாகையால் ஜகன்னாதன் கூறியதை முழுதும் மறுக்காமல், ஜகன்னாதன் கூறியபடி எஜமானுடைய உத்திரவைத் தான் தெரிவித்ததாகத் தனக்கு நினைவேயில்லை என்று சொல்லிவிட்டான்.

ஆனால் ஜகன்னாதன் சாட்சியத்தின் மூலம் வேண்டிய அளவு உண்மை கிடைத்து விட்டது. மதுவிலக்காளர்கள் ஜகன்னாதனுடைய தைரியத்திற்கு வியந்து அவனைப்புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

மரகதம் மாளிகைக்குச் சென்று ராமானுஜர்மனைவியிடம் முழுவதையும் சொல்லித்தன் வருத்தத்தைத் தெரிவித்தாள். உடனே அங்குள்ள வேலையை விட்டுப்போய் விட வேண்டுமென்று ஜகன்னாதனை வற்புறுத்தினாள். ஆனால் ராமானுஜர் மனைவிபோகக் கூடாதென்றும், ஜகன்னாதன் உண்மையைத் தவிர எதுவும் கூறியிருக்கமுடியாதென்றும் கூறி விட்டாள்.

ஆனால் ஜகன்னாதனுக்கு வேலையில் மனம் ஓடவில்லை. உண்மையைச் சொன்னபோதிலும், எஜமானத் துரோகம் செய்துவிட்டதாக அவன் எண்ணினான். தான் வேலைக்காக வாங்கும் சம்பளம் நியாயமா என்றுகூடத் தனக்குள்ளேயே வாதித்துக்கொண்டான். நல்ல வேளையாக மாணிக்கமே இன்னும் ஒரு மாதத்தில் ஜகன்னாதன் வேலையை விட்டுப் போகவேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்துப் பிரச்னையைத் தீர்த்துவிட்டான்.

## 17. மரகதத்தின் தீவிரப் பிரசாரம்

ஜகன்னாதன் பழவேற்காட்டில் ஒரு சிறிய வீடு வாடகைக்குப் பேசிக்கொண்டு மனைவி குழந்தை தாயார் முதலியவர்களுடன் வசிக்கச்சென்றான். ராமானுஜர் மாளிகையிலிருந்து சத்தியத்தைக் காப்பாற்றிக்கொண்டுவெளியேறியதே மரகதத்திற்குச் சந்தோஷம்.

ஜகன்னாதன் வேறு வேலை பார்க்கவேண்டியதாயிற்று. பலவிடங்களில் போய் முயன்றுபார்த்தான். வியாபாரம் முதலிய பணவிருத்தி விஷயத்தில் ஈடுபட்டவர்கள் ஜகன்னாதனது சத்தியத்தையும் நேர்மையையும் பார்த்து அவனுடைய குணத்திற்கும் தங்களுடைய தொழிலுக்கும் சரிவராதென்று சொல்லிவிட்டார்கள்.

ஒரு நாள் ராஜாமணி மரகதத்தைப் பார்க்கவந்தான். வீட்டின் சிறுமையையும் மரகதம் படும் கஷ்டத்தையும் பார்த்து இரக்கம் கொண்டான். "மரகதம் நீ ஏன் இம் மாதிரி கஷ்டப்படவேண்டும்? என்னிடம் சொல்லியிருந்தால் பணம் கொடுத்திருப்பேனே" என்றான்.

"ராஜா! நாங்கள் ஒருவரிடமும் பணம்வாங்கப் போவதில்லை" என்றாள்.

ராஜாமணி அவளுடைய வைராக்கியத்தைக் கண்டு வியந்தான். "மரகதம், என்ன சமாசாரம்? முழுவதையும் என்னிடம் சொல்" என்றான்.

"சொல்லி என்னபயன்? உனக்கு என்மேல் வெறுப்புத் தான் ஏற்படும்."

"அதெல்லா மொன்றுமில்லை. உன்னுடைய உண்மை நிலைமையை நான் அறியவேண்டாமா?

"சரி, நீ ஒரு முறை எடுத்த வேலையையே நம்பி உன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொண்டாயல்லவா?

அதேமாதிரி நானும் என்னிஷ்டப்படியே நடந்துகொள்ளப் போகிறேன்."

"என்ன செய்யப் போகிருய் ?"

"மதுவிலக்குப் பிரசாரம் செய்யப்போகிறேன்.

ராஜாமணி ஒருமுறை அவளைச் சுற்றிப் பார்த்துவிட்டு, மதுவிலக்குப் பிரசாரகர்கள் சிறு குடிசைகளில்தான் வசிக்க வேண்டுமோ ?" என்று கேட்டான்.

"ஆம், அவர்களுக்குப் பணமேது ? ஜனங்களைக் குடிக்கச் செய்பவர்களுக்கல்லவோ பணம் நிறைந்திருக்கும் !"

வேறு வழியில்லை. ராஜாமணி சிறிது நேரம் தன் சகோதரியை உற்றுப்பார்த்தான். அவளுடைய முகத்தோற்றத்தைப் பார்த்தமாத்திரத்திலேயே அவள் தான் சொல்லியபடி மதுவிலக்குக்காகத் தன்னையே தியாகம் செய்வாளென்று அவனுக்குத் தெரிந்தது.

மரகதம் இப்பொழுது சிறு வீட்டிலேயேயிருந்தாலும், ஊர்ப்பெண்கள் அடிக்கடி வந்து அவளோடும் அவளுடைய மாமியாரோடும் பேசி அளவளாவிக் கொண்டிருந்தனர். நாளாக ஆக மரகதத்தின் மதுவிலக்குக் கொள்கைகளில் அவர்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டது. தேச முழுவதும் மதுவிலக்குச் சட்டம் மறுக்கப்பட்டு வருவதைப்பற்றியும் அதைத் தடுப்பதற்குத் தாங்கள் செய்யவேண்டிய வேலையைப்பற்றியும் பொழுது போக்குக்காகப் பேசிக்கொண்டிருந்தவர்கள் கடைசியில் தீவிரமாகத் தலையெடுக்கவாரம்பித்தனர். பிரசாரம் பெண்கள்தான் முதலில் ஆரம்பிக்கவேண்டும். இதற்கு மரகதம்தான் தலைமை வகிக்கவேண்டும். அப்படியானல் மரகதம் கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்யவேண்டுமே? பாவம் அவளுக்குப் பயம் தோன்றி விட்டது. ஆனால் ஜகன்னாதன் அவளைத் தேற்றினன். அவனுக்குத் தைரியந்தான். ஏனெனில் அவன் பிரசங்கம் செய்ய வேண்டிய நிலையல்லவா?

மரகதம் சொற்பொழிவுகளை எழுதி மனப்பாடம் பண்ணவாரம்பித்தாள்.

கடைசியில் மரகதம் ஒரு கூட்டத்தில் பேசவேண்டுமென்று தீர்மானமாயிற்று. இக்கூட்டத்தைப்பற்றிப் பல முன்னறிக்கைகள் விடப்பட்டன. மரகதம் மாளிகை சொந்தக்காரர்களின் உறவு என்பதனாலேயே ஊர் முழுவதும் அவளுடைய பிரசங்கத்தைக் கேட்கவேண்டுமென்று ஆவலாயிருந்தது. திருட்டுச் சாராயம் இறக்குமதி செய்யும் பெரிய வீட்டுக்காரரைச் சேர்ந்தவள் எப்படிப் பேசுவாள்?

கூட்டத்தன்று ராமானுஜரது மனைவிகூட வந்திருந்தாள். அவளுடைய குடிகாரக் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தாளானால் அவர்களுக்கு நல்ல போதனை கிடைத்திருக்கும்.

தலைவர் எழுந்து மரகதவல்லியைச் சபையோருக்கு அறிமுகம் செய்து வைத்தார். கரகோஷத்திடையே மரகதம் மேடையேறினாள்.

"நண்பர்களே" என்று சபையோரை விளித்துவிட்டு தான் தன்னுடைய குழந்தைப் பருவத்தில் குடியர்களின் வாழ்க்கையை நேரில் கண்ட அனுபவத்தைப்பற்றியே பேசப் போவதாகத் தெரிவித்தாள். சபையில் முக்கால்வாசி குழந்தைகளும் சிறுவர்களும்தான். குழந்தைகளுக்குப் போதிப்பதுதான் முக்கியம் என்பது மரகதத்தின் கருத்து. இவள் தன்னுடைய குழந்தைப் பருவக் கதையைச் சொல்லியதைச் சிறுவர்கள் சந்தோஷமாய்க் கேட்டார்கள். அது அவர்களுக்கு ஒரு யோகினிக் கதைபோலிருந்தது. பிரசங்கம் மாதிரியே தோன்றவில்லை.

ஆனால் இந்தக் கதையில் ஒரு ராக்ஷஸனும் இருந்தான். ராக்ஷஸன் தோற்றம் தனக்கு எப்படி முதலில் தெரிந்ததென்பதை மரகதம் விரிவாகச் சொன்னாள். தன்னுடைய தந்தை குடி என்னும் ராக்ஷஸனுக்கு அடிமையாய் விட்டாரென்பதை முதன் முதலில் பார்த்தபோது தனக்குத் தோன்

றிய உணர்ச்சிகளை விவரித்தாள். பிறகு தன்னுடைய ஊர்ப் பக்கத்தில் குடிப்பது என்பது என்ன, எப்படி என்பதையும் எடுத்துக் கூறினுள். குடிப் பழக்கம் முதிரும் வரையில் அந்த ராக்ஷஸன் கொடுமை தெரியாதென்றும் முதலில் சந்தோஷமாகவே யிருக்குமென்றும் விளக்கினுள். தன்னுடைய தந்தையின் கொடிய பழக்கத்தையும் கொடிய முடிவையும் பற்றி எல்லோருக்கும் கூறுவதற்கு அவளுக்குக் கஷ்டமாய்த் தானிருந்தது. ஆனுல்தான் அனுபவித்த கஷ்டங்களையும் தந்தை பட்டதுன்பத்தையும் நினைக்கும்போது மற்றவரிடத்தில் சொல்லிக் கொள்ளாமல் என்ன செய்வது?

தன்னுடைய தந்தையின் இளம் பருவத்தில் இந்தக் கொடுமைகளை உணர்ந்திருந்தால் அறியாமையினுல் துன்பத்திற்காளாகி யிருக்கமாட்டார் அல்லவா? தன் தந்தையின் கதையைச் சொல்லியதால் சபையிலிருக்கும் ஒரு குழந்தைக்காவது நன்மை யுண்டாகும்படி செய்தால் தன் பிரசங்கம் பயனுள்ள தெனத்தான் நம்புவேனென்றும் தெரிவித்தாள்.

சபையோர் எல்லோரும் இக்கதையினுல் உணர்ச்சி யெழுச்சி யடைந்தனர். பிரசங்கம் முடிந்ததும் எல்லோரும் மரகதத்தைச் சுற்றிக்கொண்டு தங்கள் வாழ்த்துகளையும் புகழ்ச்சியையும் மொழிந்தார்கள். பிரசங்கம் மிகவும் சிறப்பாக நடந்து விட்டது. வீட்டுக்கு வந்ததும் மரகதத்திற்குப் பெரும் கவலையும் ஏற்பட்டு விட்டது. தன்னுடைய தந்தையைப்பற்றி இப்படி வெளிப் படையாகப் பேசியதற்காக ராமானுஜர் மனைவி தன் தாயார் முதலியவர்கள் என்ன நினைப்பார்களோ? பிரசங்கம் மிகவும் நன்றுயிருந்த தென்றும் மரகதம் அதிகமரியாதையுடனேயே நடந்து கொண்டாளென்றும் ஜகன்னுதன் அடிக்கடி அவளுக்கு எடுத்துக் கூறவேண்டியதாயிற்று.

மறுநாள் பத்திரிகைகளிலெல்லாம் மரகதத்தின் பிரசங்கம் வெளியாய்விட்டது. பழவேற்காட்டுப் பெரிய குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பெண் மதுவிலக்குப் பிரசங்கம் செய்வ

தென்றால் அது விசேஷ செய்தியல்லவா? உடனே பலஸ்தாபனங்களிலிருந்து மரகதத்திற்கு அழைப்புக்கள் வந்துவிட்டன. மரகதத்திற்கு முதலில் கொஞ்சம் தயக்கம்தான். ஆனால் பின்வாங்கினால் மதுவின் கொடுமையைப்பற்றி மற்றவர்கள் அறிவதெப்படி? ஆகவே வாரத்திற்கு இரண்டு மூன்று தடவை அவள் வெளியிற்சென்று பல கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்யவேண்டியதாயிற்று.

ஜகன்னாதனுக்கும் மரகதத்தின் பிரசங்கத்தைத் திருப்பித் திருப்பிக்கேட்டதில் தைரியம் வந்துவிட்டது. சர்க்காரின் மதுவிலக்கு அமுல் இலாகாவில் அமரவேண்டுமென்று முயற்சி செய்தான். இதற்காக ஒரு சட்டசபை மெம்பர் சிபார்சு செய்யவேண்டியிருந்தது. தன் தகப்பனாருக்குத் தெரிந்த ஒரு மெம்பரிடம் போய்க்கேட்டான் ஜகன்னாதன். அவர் முதலில் பெரிய சிரிப்பாகச் சிரித்துவிட்டார். குடியிற் சிறந்த பராங்குசத்தின் பிள்ளை மதுவை ஒழிக்க முன் வருவதென்பது அவரால் நம்பக்கூடவில்லை. ஆனால் ஜகன்னாதன் உண்மையிலேயே சேரவேண்டுமென்றிருப்பதை உணர்ந்து சிபார்சு செய்தார். ஜகன்னாதன் ஒரு அச்சடித்த காகிதத்தில் பெயர் மதம் ஜாதி முதலிய விபரங்களையெல்லாம் எழுதி தன் மனுவைப்போட்டுவிட்டுப் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சர்க்கார் விவகாரங்களில் பதில் உடனே வந்துவிடுமா?

ஒருநாள் மரகதத்திற்குக் சென்னையிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. குடியை ஒழிப்பதற்காக உழைக்கும் சங்கமொன்று அவளுக்குப் பிரசங்கத்திற்காகப் பணமும் கொடுப்பதாகக் கூறிற்று. மரகதம் பிரசங்கத்தில் முக்கியமாகத் தன்னுடைய தந்தையின் வாழ்க்கையைப்பற்றித்தான் பேசித்தீரவேண்டும். தந்தையைப்பற்றி இழிவாகப் பேசுவதற்காகப் பணம் வாங்குவதா? ஆனால் அழைப்புக் கிணங்கித்தானே ஆகவேண்டும்.

பிரசங்கத்தைப்பற்றிய அறிக்கை எல்லாப் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்ததால் கூட்டத்திற்கு அநேகர் வந்

திருந்தனர். அவர்களில் ராஜாமணியும் கந்தசாமியும்கூடப் பிரசன்னமாயிருந்தனர். தன்னுடைய சகோதரி இம்மாதிரி பகிரங்கமாய்க் குடும்ப விஷங்களைப்பற்றிக் கூறி நடந்து கொள்வதைத் தடுக்கும்படி ராஜாமணிக்குஅவனுடைய தாயார் எழுதியிருந்தாள். கூட்டத்தில் ராஜாமணியைப் பார்த்துவிட்ட மரகதத்திற்குதான் சொல்லவேண்டியதைச் சொல்ல அதிகக் கஷ்டமாய்த் தானிருந்தது. ஆனால் அவளுடைய முக்கிய கருத்து குழந்தைகளுக்குக் குடிக் கொடுமையை எடுத்துணைப்பதுதானே? சிரமத்துடன் ராஜாமணியைப் பார்க்காமல் பிரசங்கத்தை முடித்து விட்டுத்தன் தந்தையினுடைய வாழ்க்கையின் நீதியைக் குழந்தைகளுக்கு எடுத்துரைக்கும் போது இளம்பருவத்தில் ராஜாமணிக்கு உபதேசித்த நினைவு வந்துவிட்டது. அந்த மனோபாவத்தில் அவள் அதிக உணர்ச்சியுடன் தன்னுடைய முடிவுரையைச் சொல்லி முடித்தாள்.

கந்தசாமியின் சஞ்சிகை இந்தப் பிரசங்கத்தைப்பற்றி மிகவும் பரிகாசமாகக் குறிப்புகள் வெளியிட்டது. சட்டபூர்வமாய் மதுவிலக்குச் செய்வது முட்டாள் தனமென்பதற்கு அத்தாட்சியாக இளம் பெண்களுக் கிடையில் இப்பொழுது குடி அதிகமாய்விட்டதென்று எடுத்துக்காட்டிற்று. இது முழுதும் தப்பு என்று கூறி மரகதம் அந்த சஞ்சிகைக்கு ஒரு கடிதம் எழுதினாள். சஞ்சிகையில் கடிதம் வெளியாயிற்று. ஆனால் அதற்குப் பதில் வழக்கம்போல் குறிப்பற்றதாயும் பரிகாசமாயுமே யிருந்தது.

பிரசங்கம் முடிந்ததும் ஒரு பெரியவர் மரகதத்தினிடம் வந்து பேசிக்கொண்டிருந்தார். அவர் ஒரு சபையின் தலைவர். தம்முடைய சங்கத்தினுதரவில் ஒரு பிரசங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆனால் இந்தப்பிரசங்கத்தில் ஒரு வித்தியாசம். பிரசங்கம் முடிந்ததும் பிரசங்க விஷயத்தைப்பற்றித் தர்க்கம் நடைபெறுமென்றும் மரகதம் சில கேள்விகளுக்குப் பதில் கூறவேண்டி நேரிடுமென்றும் கூறினார்.

மதுவிலக்கைப்பற்றி இருவரும் பேசிக்கொண்டே போய் வீடுசேர்ந்தனர். மதுவிலக்குப் பிரசாரகர்கள் திடீரென்று சட்டத்தால் மதுவிலக்கு செய்தது தவறு என்றும் இதனால்தொழிலாளர்கள் மாலையில் கள்ளுக்கடைகளில்கூடிக் காலங் கழிக்கும் சந்தர்ப்பம் போய்விட்டதென்றும் கூறினார். தொழிலாளர்களுக்கு நாள் முழுதும் வேலை செய்த பிறகு சந்தோஷப் பொழுது போக்குக்கு சந்தர்ப்பம் வாய்க்க வேண்டாமா?

“அதற்காக கள்ளுக் கடைகளை அனுமதித்து ஜனங்களைக் கெடுக்க வேண்டுமோ?” என்றாள் மரகதம்.

புத்தகாலயங்களும் மற்ற சமூக அபிவிருத்தி சங்கங்களும் ஏற்படுத்தி அங்கே மதுபானத்திற்குப் பதிலாகக் குற்ற மற்ற பானங்களைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷப் படுத்தலா மல்லவா? இது ஒரு நல்ல விஷயமென்று மரகதத்திற்குப் பட்டது.

தவிர அந்தப் பெரியவர் ருஷியப் பொதுவுடமைக்காரர்களும் மதுவிலக்கை ஆதரிக்கிறார்களென்றும், தொழிலாளர்களுக்கு மதுவினால் ஏற்படும் தீங்கை அவர்களே நன்றாய் உணர்ந்திருக்கிறார்களென்றும் அவர் கூறினார்.

அதுமுதல் மரகதவல்லி பல மதுவிலக்கு ஸ்தாபனங்களுக்குச் சென்று தன்னையும் தன்னுடைய நோக்கம், வேலை முதலியவற்றையும் அங்கங்கே அறிமுகப் படுத்திக்கொண்டாள். அவளுடைய திறமையையும் சாமர்த்தியத்தையும் கண்டு ஜகன்னாதன் ஆச்சரியமடைந்தான்.

அவனுடைய உதவியைக்கொண்டு மரகதம் சில திட்டங்களையும் வியாசங்களையும் தயாரித்து அச்சிட்டாள். இந்த அச்சுப் பிரதிகள் எல்லா ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப் பட்டன. அவள் பிரசங்கம் செய்யவேண்டிய பெரிய பொதுக்கூட்டத்திற்கு எல்லோரும் அழைக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட நாள்வந்தது. கூட்டத்திற்குப் பொதுவுடைமைக்காரர்கள், பணக்கார முதலாளிகள், பெண்கள், சிறுவர்

கள் அனைவரும் வந்திருந்தனர். மரகதம் பிரசங்கம் செய்த பின் சந்தேகம் தெளிவதற்காக இவர்கள் கேள்விகள் கேட்பார்கள். இவர்களுக்குச் சரியாய் வாதித்து இவர்களைத் தன்னுடைய கொள்கையைக் கைப்பிடிக்கும்படி செய்வதுதான் மரகதத்தின் வேலையாயிருந்தது. தலைவர் மரகதத்தைக் கூட்டத்திற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

மரகதம் அநேகர் வேண்டுகோளின்படியே பிரசங்கம் செய்ய முன் வந்ததாகவும் தான் புராதனமான ஓரிடத்தைச் சேர்ந்தவளென்றும் அங்குப் புது எண்ணங்கள், புது நாகரிகம் முதலியவை சீக்கிரம் பரவுவதில்லையென்றும் முகவுரையாகக் கூறிவிட்டுப் பின் வருமாறு மேலும் பேசலானாள்.

"உங்களில் எல்லோருக்கும் என்னைவிட அதிக அனுபவம் உண்டு. எனக்குத் தெரியாத பல விஷயங்களைப்பற்றி உங்களுக்கு முற்றிலும் தெரிந்திருக்கும். ஆனால் எனக்கு ஏற்பட்ட ஓரே ஒரு அனுபவத்தால் சில கொள்கைகள் வேரூன்றிவிட்டன. நான் மதுவிலக்கு வெறி கொண்டவள் என்று சிலர் கூறலாம். ஆனால் என்னைப்போன்ற பலர்தேசமுழுதும் இருப்பதையும் அவர்களைப்பற்றி நீங்கள் அறியவேண்டியதின் அவசியத்தையும் எடுத்துக்கூறுகிறேன்.

"ஒவ்வொரு மனிதனும் தன்னை அடக்கியாள முயலவேண்டும். உங்களில் அநேகர் குழந்தைகளை யுடையவர்கள். மதுவின் கொடுமையைப்பற்றி முக்கியமாகக் குழந்தைகளுக்குத்தான் கூறவேண்டும். மதுவின் கொடுமையால் நான் குழந்தைப்பருவத்தில் தன்னுடைய தந்தையின் அறிவைப்பார்க்க நேரிட்டது. நான்குழந்தைதானே என்று என்னை ஏமாற்ற அவர் எவ்வளவோ முயற்சிகள் செய்தார். உங்களில் அநேகருக்கு உலகத்தையே திருத்தி யமைக்கவேண்டுமென்றஆவல் இருக்கிறது. அதற்காக உங்களுக்குத் திறமை அவசியம். மதுமயக்கத்தில் உலகசீர் திருத்தத்திற்குத்திட்டம் போட முடியுமா?"

பிரசங்கம் முடிந்தபிறகு சரமாரியாய்ப் பல கேள்விகள் கேட்கப்பட்டன. சுயஉரிமையைச் சட்டத்திற்காகக் கைவிட்டு விடுவதா? என்று ஒருகேள்வி கேட்கப்பட்டது. சுய உரிமையைச் சில விஷயங்களில் தியாகம் செய்யவேண்டியது அவசியமென்றும், உதாரணமாக சமூகத்தின் அமைப்பிற்கு அடிப்படையான சட்டங்களுக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிய வேண்டியிருக்கிறதென்றும் எடுத்துக்காட்டினுள்.

ஒரு தொழிலாளன் எழுந்து, பசிப்பிணியால்வேதனைப் படும் ஏழை அந்த வேதனையை மறப்பதற்காகக்குடிப்பதைத் தடுப்பது நியாயமா? என்று கேட்டான். குடிப்பதனுல் வேதனை குறையாமல் அதிகமாகிறதே யென்றும் அப்படி வேதனை யதிகரிப்பதில் ஏழைக்குச் சம்மதமிருந்தால் அவனைத் தடுக்கக் கூடாதென்றும், வேதனையைப் போக்கவேண்டுமென்ருல் மயக்கமற்ற மூளையை உபயோகிக்கவேண்டுமென்றும் மரகதம் பதிலளித்தாள்.

இம்மாதிரியே இன்னும் பல கேள்விகள் கேட்கப்பட்டன. மரகதம் சிறிதும் தயங்காமல் ஒவ்வொன்றுக்கும் அமைதியாய்ப் பதிலளித்ததைப் பார்த்த ஜகன்ஞதன் அவளுக்கு இவ்வளவு சாமர்த்தியமும் தைரியமும் குறிப்புகளும் எங்கிருந்து கிடைத்தன வென்று வியந்தான்.

அறியாமையினுல் மற்றவர்கள் அழிந்து போவதைத் தடுத்து அவர்களுக்கு உதவி செய்வதே மரகதத்திற்கு முக்கிய நோக்கமாய் விட்டது. ஒவ்வொருவரும் தன்னேடு சேர்ந்து உழைத்தால் வெகு சீக்கிரத்தில் வெற்றி பெற்று விடலாமென்று அவள் நம்பினுள்.

# 18. சர்க்கார் போக்கு

ஜகன்னாதனுக்குக் கடைசியில் மதுவிலக்கு இலாகாவில் ஒரு வேலை கிடைத்தது. இவன் ஆபீஸுக்குப்போய் அங்குள்ளவர்களைச் சந்தித்தது ஒரு புது அனுபவமாயிருந்தது. அந்த இலாகாவில் ஈடுபட்டவர்கள் ஒருவராவது மதுவிலக்கில் நம்பிக்கை கொண்டவர்களாகத் தெரியவில்லை. தான் சரியாக வேலை செய்தால் கூட லஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்படுமென்னும் விபரீத உண்மையை அறிந்தான். இலாகா அதிகாரி ஜகன்னாதனுக்கு அவன் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றி உத்திரவுகள் கொடுத்தார்.

"அருணாசலம் என்னும் குமாஸ்தாவுடன் நீயும் சேர்ந்து வேலை செய்யவேண்டும். நீ செய்யவேண்டியதை அருணாசலம் சொல்லிக்கொடுப்பான். நீங்கள் ஒவ்வொரு ஹோட்டலுக்குள் போய் எங்கெங்கே திருட்டுச்சாராயம் விற்கிறார்களென்று பார்த்துச் சாராயத்துடன் ஆபீசுக்கு ரிபோர்ட்டு அனுப்பவேண்டும். பகல். 2 மணி முதல் இரவு 11 மணிவரை வேலை செய்யவேண்டும். நல்ல உடைகளையணிந்து கொண்டு பெரிய ஹோட்டல்களுக்குச் சென்று சாப்பிடுவதுபோல் பாவனைசெய்து சாராயம் விற்கப்படுகிறதாவென்று பார்க்கவேண்டும். அருணாசலத்தோடு போனால் சீக்கிரம் எல்லாம் தெரிந்துகொள்வாய்"

ஜகன்னாதனுக்கு அவனுடைய உத்தியோகத்திற்குரிய சின்னங்களெல்லாம் கொடுக்கப் பட்டன. அவனுடைய அதிகாரத்தைக் குறிக்கும் பில்லை ஒன்று, சில சிறுபுட்டிகள், நோட், புத்தகம், பேனா முதலியவைகளை வாங்கிக் கொண்டான். அருணாசலம் அனுபவத்தில் அடிபட்டவன். எப்பொழுதும் தமாஷாகப் பேசிக்கொண்டே யிருப்பான்.

இருவரும் சேர்ந்து வேலைக்குப் புறப்பட்டார்கள். அருணாசலம் கையில் ஒரு ஜாப்தா வைத்துக்கொண்டிருந்தான். "இந்த இடங்களெல்லாம் சந்தேகம். நாம் போய் மெதுவாகச் சாராயம் விற்கிறார்களாவென்று கண்டுபிடிக்க வேண்

டும். நமக்கும் சாராயம் வேண்டுமென்று வாங்கிக் குடித்துப் பார்த்தால் ருசியில் கண்டுபிடித்துவிடலாம்.''

"நான் எப்படிக் கண்டுபிடிப்பது?'' என்ருன் ஜகன்னுதன்.

"எப்படியா? சாராய ருசி கூடவா தெரியாது.''

"நான் ருசிகூடப் பார்த்ததில்லையே''

அருணுசலம் திடீரென நின்று ஜகன்னுதனை உற்றுப் பார்த்தான்.''

"ஏனப்பா கேலி செய்கிருயா''

"உண்மைதான் சொல்லுகிறேன்.''

"அப்படியானுல் சாராயருசி பார்த்துக்கண்டு பிடிக்கும் உத்தியோகத்துக்கு ஏன் வந்தாய்?

"நான் என்ன செய்யவேண்டுமென்றே முதலில் எனக்குத் தெரியாதே.''

அருணுசலத்திற்குச் சிரிப்பு அடக்கமுடியவில்லை. அதன் பிறகு ஜகன்னுதன் தன்னுடைய தந்தையின் கதையைச் சொன்னுன்.

"ஓகோ! ஆனுல் இந்த வேலையை உன்னுல் சமாளிக்க முடியுமா?''

"என்னமோ பார்க்கிறேன்'''

இருவரும் ஒரு 'டீ' கடைக்குச் சென்ருர்கள்.

"அப்பா என்ன குளிர். சூடாய் ஏதாவது கொடு. அப்பா என்ருன் அருணுசலம் கடைக்காரனைப் பார்த்து.

"நீ கேட்பது ஒன்றும் இங்கு கிடையாது'' என்ருன் கடைக்காரன்.

"என்னப்பா நம்பகிட்ட கதைபண்றே! போன வருஷம் நம்ப இங்கே வழக்கமா குடிச்சதெல்லாம் மறந்துட்

டாயா? இங்கே பார் ஒரு சிநேகிதனைக் கூட்டி வந்திருக்கி றேன். நல்ல அசல் சரக்கு எடு. கலப்பு வேண்டாம்.''

"இந்தா நம்ப கடையிலே வந்து கலப்பு கிலப்புனு பேசாதே. இங்கே ஒண்ணுமே கிடையாது. ஆனா பெரிய மனுஷா யாரானாலும் வந்தா..............''

"ஆம. அண்ணே. ரொம்ப ஜாக்கிரதையா வல்லெ இருக்கணும். இவர் அசல் சரக்கு வேணும்னு எங்கெல் லாமோ தேடுறாரு.எங்கே போனாலும் சர்க்காருக்குப் பயந்து மண்ணைத்தான் கரைச்சி கொடுக்கிறாங்க.''

அருணாசலம் இவ்வாறு பேசிக்கொண்டே போனான். இது முழுவதும் தந்திரமென்று அறிந்து கொண்டான் ஜகன்னாதன். இதற்குள் கடைக்காரன் இருவரையும் பின் கட்டிலிருந்த ஒரு அறைக்கு அழைத்துச் சென்றான். இரு வருக்கும் இரண்டு டம்ப்ளர்களில் "சரக்கு'' கொடுக்கப் பட்டது.

ஜகன்னாதன் கொஞ்சம் ருசி பார்த்தான். தொண்டை யில் ஏதோ வெடித்தது போலிருந்தது. இருமல் அபார மாய் வந்துவிட்டது. அருணாசலம் ஜகன்னாதனைப் பிடித்து பிடரியில் தட்டி சிகிச்சை செய்துகொண்டே, கடைக்கார னைப் பார்த்து "என்னய்யா இது? பழய சரக்கா? மோசமா பண்றே?'' என்று சந்தர்ப்பத்தை மாற்றுவதற்காகப் பேசி னான்.

"ஏய் என்ன ரொம்ப பேசறே! இப்போதான் கப்பல் லெருந்து வந்திருக்குது. முதல் கிளாஸ் சரக்காச்சே'' என்று கோபத்துடன் கூறினான் கடைக்காரன்.

இதற்குள் அருசணாசலம் ஒரு சமிக்ஞை செய்ய ஜகன் னாதன் மறுபக்கம் திரும்பித தன்சட்டைப் பையிலிருந்த சிறு புட்டியில் சாராயத்தை ஊற்றிக் கொண்டான். அருணாசலம் கடைக்காரனிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே யிருந் தான். தன் வேலை முடிந்ததும் ஜகன்னாதன் முழுவதையும்

குடித்து விட்டவனைப்போல் வாயைத் துடைத்துக் கொண்டு கண்ணாடி டம்ளரைக் கீழேவைத்தான். பிறகு இருவரும் கடையைவிட்டு வெளியில் வந்தார்கள்.

இருவரும் கடைக்காரன் பெயர் விலாசம் எல்லாம் எழுதித் தங்கள் மாதிரி எடுத்த சிறுபுட்டியில் ஒட்டினார்கள்.

"இந்தக் கடைக்காரனை எப்பொழுது கைதி செய்வார்கள்?"

"எனக்குத் தெரியாது. அதுபோலீஸ் வேலை, ஒரு புகார் எழுதிக் கொடுக்க வேண்டியதுதான் நம்முடைய வேலை"

"நாம்கோர்ட்டில் ஆஜராக வேண்டாமா?"

"அவசிய மிருந்தாலும் இருக்கும். இல்லாவிட்டாலும் இல்லை. அநேகமாய் எதிரிகள் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுவார்கள்."

"எத்தனை நாளாகும்?

"ஆறுமாதம், ஒருவருஷம் கூடவாகும்.'

"கடவுளே, அவ்வளவு காலமாகுமா?;'

"ஆம் எத்தனையோ வழக்குகள். ஏதாவது ஒருநாள் நியமிக்கப்படும். அன்று சிலர் வந்து குற்றத்தை ஒப்புக் கொள்ளுவார்கள். அபராதம் விதிக்கப்படும்."

"இதுநல்ல பலனைத்தரும் முறையாகத் தோன்ற வில்லையே."

"வாஸ்தவம். ஆனல் நம்முடைய வேலைதிருட்டைக் கண்டுபிடித்து ருஜுவுடன் புகார் செய்ய வேண்டியதுதான். மற்றதெல்லாம் அதிக சம்பளம் வாங்கும் நம்முடைய மேலதிகாரிகள் வேலை.

இம்மாதிரி பல டீக் கடைகளுக்கும் மருந்துக் கடைகளுக்கும் சென்று அருணசலம் தந்திரமாய்ப் பேசி சரக்கு

வெளியில் வரும்படி செய்ய ஜகன்னாதன் ருசிபார்த்து மாதிரி எடுத்துக்கொண்டான். கடைசியில் ருசிப்பார்ப்பதற்காகக் கொஞ்சம் கொஞ்சமாய் வாயில் ஊற்றிக்கொண்டதே ஜகன்னாதனுக்குத் தலைச் சுற்று உண்டாகும்படி செய்துவிட்டது.

அவன் வீட்டுக்கு வரும்போது அதிக தலைவலியாயிருந்தது. மரகதத்திடம் தன்னுடைய உத்தியோகத்தின் முதல்நாள் நடவடிக்கை முழுதும் சொன்னான். 'ஐயோ! இது ஒரு வேலையா-உங்களால் இது முடியாதே!'' என்றாள் மரகதம்.

"கண்ணே; நான் செய்து தீரவேண்டுமே."

"உங்களால் ஆகாதே! நினைக்கக்கூட முடியாதே."

"மரகதம் பயப்படாதே. நாளைக்கு இவ்வளவு கஷ்டமாயிருக்காது."

"என்ன ? நான் சொல்வதைக் கேளுங்கள். ஒரு நாள் கூட நீங்கள் இனிமேல் இந்த வேலையைச் செய்யமுடியாது. முகம் எவ்வளவு கோரமாயிருக்கிறது."

"இன்றைக்குக் கொஞ்சம் கஷ்டம்தான். பழக்கமாய் விட்டால்."

"பழக்கமா! பழக்கமாய் விட்டால் நீங்களும் குடிகாரனாகிவிடுவீர்கள்."

"நான் குடிக்கும் பழக்கத்தையே கைக்கொள்ளுவேனென்று சொல்லுகிறாயா ?''

"ஆம் உங்களுடைய தந்தையை மறந்துவிட்டீர்களா ?"

"ஆனால் யாராவது குற்றத்தைக் கண்டுபிடித்தாகவேண்டுமே! இது ஒரு பெரிய யுத்தம். நான் சேனையில் சேர்ந்த பிறகு பின்வாங்கலாமா ?

உண்மையில் என்ன நடக்கிறதென்பதை மரகதம் அதுவரை உணரவில்லை. சர்க்கார் பல வாலிபர்களுக்குச் சம

பளம் கொடுத்து கடைக்குக்குப்போய். குடித்துவிட்டுவரும்படி செய்துகொண்டிருந்தார்கள். மதுவிலக்குக்காகச் சர்க்கார் செய்யும் இந்த வேலே அந்த இலாகாவின் நோக்கத்திற்கே நேர் எதிரிடையாக விருந்தது. கடைசியில் தன் கணவனுக்கா இந்த ஸ்திதி வந்து சேரவேண்டும்! ஆனல் நோக்கம் ஒன்றுதானே. மதுவிலக்குத்தானே, யுத்த காலத்தில் மற்ற வாலிபர்களெல்லாம் தியாகம் செய்து கொள்ளும் போது தன் கணவன் மாத்திரம் போகக்கூடாது என்று இவள் சொல்லலாமா?

"நீங்கள் இதே வேலேயிலிருந்தால் எனக்கு இனிமேல் ஒரு நிமிஷம்கூட சந்தோஷமாயிருக்காது." என்முள்.

ஜகன்னுதன் அவளே யணேத்துத் தன்மடிமீது உட்கார்த்திக்கொண்டு "கண்ணே பயப்படாதே. இனிமேல் நான் குடிக்கமாட்டேன். முதல் நாள் தெரியாததால் கஷ்டப்பட்டேன். நாளே முதல் ருசிபார்த்துத் துப்பிவிடுவேன். ருஜு காண்பிப்பதற்கு அது நிஜ சாராயம்தான என்று தெரிய வேண்டாமா? நான் விழுங்கினல்தானே கெடுதல் செய்யும். வாயில் ஊற்றிப் பார்த்துத் துப்பிவிட்டால் என்ன கெடுதல்?" என்முன்.

"ஆனல் என் தகப்பனர் செய்தமாதிரி பழக்கமேற்பட்டுவிட்டால் என்னிடமிருந்து ஒளிக்காமலிருக்கிறேனென்று வாக்குதத்தம் செய்து கொடுங்கள்." என்று தன்னுடைய குழந்தைப்பருவத்தின் பயங்கரம் முழுவதும் தோன்றக் கூறினள். ஜகன்னுதனும் அப்படியே செய்வதாக வாக்களித்தான்.

மறுநாள் அவ்வளவு கஷ்டமாயில்லே. ஒரு கடைக்குச் சென்முர்கள். அந்தக்கடைக்காரன் அருணுசலத்தின் பழைய நண்பனுதலால், அவர்கள் வந்தவுடன் தன்னிடமுள்ள நல்ல சாராயம் முழுவதையும் காண்பித்து மனமாரக் குடிக்க உபசரித்தான். இவர்கள் சர்க்கார் ஒற்றர்கள் என்று அவனுக்குத் தெரியாது. அருணுசலம்தான் குடிப்பதில்லேயென்று சொல்லிவிட்டு வெளியில் வந்ததும் ஜகன்னுதனிடம்,

"பாவம் கபடம் தெரியாதவன். ரொம்ப நாள் நண்பன். அவன்மீது புகார் செய்யவேண்டாம். நண்பர்களை மோசம் செய்யலாமா?'' என்ருன்.

ஆகவே ஜகன்ஞதன் கடமை யொழுக்கத்திலிருந்து நட்புக்காகச் சிறிது தவற வேண்டியதாயிற்று.

அன்றுமாலை அவர்களிருவரும் மற்ருெரு திருட்டுச் சாராயக் கடைக்குச் சென்ருர்கள். ஆனல் இவர்கள் ஒற்றர் கள் என்று தெரிந்துவிட்டது; சாராயத்தைக் குடிப்பதுபோல் பாசாங்கு செய்து இருவரும் புட்டியில் 'மாதிரி' எடுத்துக் கொண்டிருக்கும்போது திடீரென இருவருக்கும் நல்ல அடி விழுந்தது. அவர்கள் கையிலிருந்த புட்டியும் உடைக்கப் பட்டது. ஒருவர்மேலொருவராய்ப் பலர் வந்து இருவரை யும் நன்ருய் அடித்து வெளியிலனுப்பி விட்டார்கள்.

அடிப்பட்டுத் திகைப்புற்ற ஜகன்ஞதனுக்குஅருணுசலம் தன்னுடைய அனுபவ தத்துவத்தை எடுத்துரைத்தான். கடைக்காரன் சாராயம் விற்றது உண்மைதானென்ருலும் அவன் சண்டையில் கலந்துகொள்ளவில்லை. நமது மாதிரியும் போய்விட்டது. சாராயம் விற்றதையும் சண்டை ஏற்பட்ட தையும் ரூபிப்பதே கஷ்டம். அப்படி வழக்கு வந்தாலும் நாம் தான் அதிகாரம் செலுத்துவதற்காக முதலில் சண்டைக் குப் போனேமென்று அவர்களுக்காக எத்தனையோ பேர் பொய்ச் சாட்சி சொல்ல வருவார்கள் என்ருன்.

"நாம் என்னதான் செய்வது?" என்ருன் ஜகன்ஞதன் ஒன்றும் தோன்ருமல்.

"நாமும் சண்டைவரும்போது அவர்களுக்கு தழும்பு ஏறும்படி நல்ல அடி கொடுக்கவேண்டியதுதான். அந்தத் தடி யன் மூக்கிலே ஒண்ணு கொடுத்தேனே பாக்கல்லே நீ. அது தான் சரியான பதில்.

சர்க்கார் மதுவிலக்கு வேலையிலீடுபட்ட உத்தியோகஸ் தர்கள்கூட சட்டத்தை மீறுபவர்களால் அடிக்கப்படுவ ஜகன்ஞதனுக்குச் சகிக்கவில்லை.



...நன்ருய் அடித்து வெளியிலனுப்பி விட்டார்கள்.

இவர்கள் சென்ற இன்னும் இரண்டு மூன்று இடங்களில் போலீஸ்காரர்களே கடைக்காரர்களுடைய உதவிக்கு வந்து இவர்களுடைய வேலையைக் கெடுத்து விட்டார்கள்.

ஒரே ஒருமுறை ஒரு சோடா கடைக்காரனைக் கைது செய்துவிட்டார்கள். இவர்களிருவரும் கடையில் உட்கார்ந்து சோடா சாப்பிடும்போது அவனுக்குச் சாக்கு பார்சல் ஒன்று வந்துசேர்ந்தது. இவர்கள் மதுவிலக்கு இலாகாக்காரர்கள் என்று தெரியாமல் அவன் வாங்கிவிட்டான். உடனே கைதுசெய்துவிட்டார்கள். அங்கிருந்த போலீஸ்காரன் ஒருவன் இவர்களுக்குக் கைதுசெய்ய அதிகாரம் கிடையாதென்று வாதித்தான். அந்தப்போலீஸ்காரன் நடத்தையைப்பற்றி அதிகாரிகளுக்குத் தெரிவித்து விடுவதாக அருணசலம் பயமுறுத்தியதன்மேல் தான், கடைக்காரன் மரியாதையாய் நடந்து கொண்டான். ஆனல் வழியில் இருவருக்கும் 1000 ரூபாய் கொடுப்பதாகவும் தன்னை விடுவித்துவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். உடனே அருணசலம் ஜகன்னதனை நோக்கி, “பார்த்தாயா அப்பா! இதுதான் உன்னுடைய முதல் வியாபாரம். ஒவ்வொரு தொகையையும் சேர்த்துவைத்து வருஷக் கடைசியில் கணக்குப்பார். பெரிய பணக்காரனு யிருந்திருக்கலாமென்று உனக்குத் தோன்றும்.” என்றுன்.

ஒவ்வொருநாளும் வீட்டுக்கு வந்தவுடன் ஜகன்னதன் தனது தாயாருக்கும் மரகதத்திற்கும் தன்னுடைய அனுபவங்களைப்பற்றிச் சொல்வான். மரகதமும் அவன் தாயாரும் ஜகன்னதனைப்பற்றிக் கவலையாகவே இருப்பார்கள். அவன் வாக்களித்த மாதிரி பழக்கத்தின் அடிமையாகவில்லையென்று தெரிந்ததும் மதுவிலக்கு விஷயத்தைப்பற்றி எல்லோரும் பேசுவார்கள். மதுவிலக்குப் பிரசாரத்திலீடுபட்டிருந்த மரகதத்திற்கு இது சாதகமாயிருந்தது. பொது ஜனங்கள் அறியாத பல விஷயங்களைப்பற்றி அவள் தெரிந்துகொண்டாள்.

மதுவிலக்கு இலாகா உத்தியோகஸ்தனுக்குப் பொதுவாக மதிப்பு மரியாதை கிடையாது என்பதை ஜகன்னுதன் மரகதம் இருவரும் உணர்ந்தார்கள். கடைகளுக்குப் போய், அவர்களை ஏமாற்றி மோசம் செய்வதைப் பற்றி, ஜகன்னுதனுக்குக் கொஞ்சம்கூட திருப்தியேயில்லை. ஆனல் என்னசெய்வது? சட்டத்தை மீறிச் சம்பாதிப்பவர்களைக் கண்டுபிடிப்பதெப்படி? யுத்தம் கூடாதென்றுதான் எல்லோரும் சொல்லுகிருர்கள். ஆனல் யுத்தத்தினல் தான் சில காரியங்கள் கைகூடுமென்று தெரிந்தால், யுத்தம் செய்து தானே தீரவேண்டும்! அப்பொழுது ஒற்றர்களை யனுப்பி எதிரியைக் கவனித்து ஏமாந்திருக்கும் சமயத்தில் தாக்கிவிடுவார்கள். இது தேசாபிமானம்! தேசத்தைக்காப்பாற்றும் சேனைகள் எதிரிகளைக் கொன்றுவீழ்த்தி, ஊர்களையும் நாசம் செய்வார்கள். கணக்கற்ற உயிர்ச்சேதம் ஏற்படும். ஆனல் எதற்காக? உலகத்தில் சமாதானம் ஏற்படுவதற்காக.

தேசத்திலிருந்து மதுபானத்தை ஒழித்து விடவேண்டுமென்பது மரகதத்தின் கொள்கை. இதற்காகச் சட்டத்தை மீறுபவர்களை ரூபிக்க சாக்ஷியம், ருஜு தேடவேண்டியதற்கு அவள் சம்மதித்தாள். அதற்காகச் சர்க்கார் வாலிபர்களுக்குச் சம்பளம் கொடுத்துக்குடிக்கச் செய்வதுயுத்தத்தில் சுட்டுக்கொல்லப் படுவதற்காக சேனை வீரர்களையனுப்புவதுபோல்தான். ஆனல் அது மிகவும் அவசியமா? இது மதுவிலக்கு இலாகா அதிகாரிகளின் குற்றமென்று மரகதம் பிறகு உணர்ந்தாள். சட்டத்தை மீறுகிறவர்களை உடனே கைதுசெய்யப் போலீஸுக்கு அதிகாரம் கொடுக்காமல் சாராயம் விற்கப்படுகிறதா என்று சோதிப்பதற்குக்கூட ருஜு, சாக்ஷியம் முதலியவை வேண்டும்! மதுவிலக்கு இலாகாக்காரர்களின் அசிரத்தையே இம்மாதிரி சம்பவங்களுக்குக் காரணமாயிருந்தது.

ஆனல் உண்மையில் ஏற்பட்டபலன் என்ன? ஜகன்னுதன் சட்டவிரோதிகளைக் கண்டுபிடிக்கப்பாடுபட்டுக் கொண்



......அவனுடைய ஸ்திதியைப் பார்த்ததும்
அதிக வருத்தப் பட்டாள்.

டிருந்தானே யொழிய மதுவிலக்கால் குற்றம் மாத்திரம் குறைந்தபாடில்லை. கண்டுபிடிக்கப் பட்டவர்கள் சிறு அபராதத்துடன் விடுவிக்கப்பட்டார்கள்.

மதுவிலக்குச் சட்டத்தினுல் வருஷத்திற்கு ஆயிரக் கணக்கான கைதுகள் செய்யப்படும். இவைகளையெல்லாம் விசாரிக்கப் புது நியாய ஸ்தலங்கள் வேண்டாமா? ஆனல் சர்க்காரோ, ஒரு கோர்ட்டாவது, ஜட்ஜாவது புதிதாக நியமித்து வேலைக்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவில்லை. ஏராளமான பொருள்களுக்கு ரூபாயை மட்டும் வாங்கிக் கொண்டு அவைகளைச் செய்யவேண்டிய யந்திரங்களையும் வேலையாட்களையும் ஏற்படுத்தாத கைத்தொழிற்காரனைப் போலிருந்தது சர்க்கார் மதுவிலக்குச் சட்டத்தின் அழகு. இந்த லக்ஷணத்தில் மதுவிலக்கு எப்படிச் சரிவர நடைபெறும்? பத்திரிகைகளிலோ—குடிகாரர்களால் நடத்தப்படும் பத்திரிகைகளில் "மதுவிலக்கு தோல்வியடைந்து விட்டது" மதுவை ஒழிப்பது நடக்காத காரியம்! என்று தலைப்புகள் காணப்பட்டது இயற்கை தானே?

ஒரு நாள் இரவு அருணுசலமும் ஜகன்ஞதனும் பெரிய இரவு கிளப் ஒன்றுக்குச் சென்ருர்கள். தானும் எல்லோரையும்போல் நடந்து கொடுக்கப்படும் சாராயத்தைக் குடித்து ருசிபார்த்து விடுவதென்று தீர்மானித்து ஜகன்ஞதன் ருசிபார்ப்பதோடு நில்லாமல் குடித்து விட்டான்.

அவ்வளவுதான் உலகம் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளும் உண்மையை அவன் கண்கூடாகக் கண்டு விட்டான். குடிமயக்கம் தலைக்கேறிவிட்டது. அருணுசலம் அவனை மெல்ல அழைத்துக் கொண்டுபோய் ஒரு ரிக்ஷாவில் ஏற்றியனுப்பினுன். வண்டியிலேயே ஜகன்ஞதன் தூங்கிவிட்டான். அவன் வீட்டிற்கு வரும்போது இரவு மூன்று மணி இருக்கும். மரகதம் அவனுடைய ஸ்திதியைப் பார்த்ததும் அதிக வருத்தப்பட்டாள். ரொம்ப சிரமப்பட்டு அவனுக்கு வேண்டிய சிகிச்சை யெல்லாம் செய்தாள்.

மறுநாள் ஜகன்னாதன் தன்னுடைய மேலதிகாரியிடம் போய் தன்னால் இனிமேல் அந்த வேலை செய்ய முடியாதென்று கூறிவிட்டான். "இந்த வேலை ரொம்ப மூடத்தனமாயிருக்கிறது. பகுத்தறிவுக்கே விரோதமாயிருக்கிறது. எங்கு கள் விற்கப்படுகின்றதென்று பார்க்கும்போதே தெரியவில்லையா? அந்த இடத்தைச் சோதிக்கவேண்டுமென்றால் அங்கே கொஞ்சம் குடித்து விற்பது சாராயம்தான் என்று ரூபிக்கவேண்டியிருக்கிறது. இம்மாதிரி குடித்துக் கொண்டே யிருந்தால் குடியை நிறுத்துவது எப்படி? அனுபவம் நிறைந்த அந்த அதிகாரியும் ஜகன்னாதன் மீது அதிக அனுதாபப் பட்டான். பிறகு ஜகன்னாதனுக்கு ஆபீஸிலேயே குமஸ்தாவேலை கொடுத்தான். அதன் பிறகு மரகதமும் அவளுடைய மாமியாரும் ஜகன்னாதன் வரவைக் கவலையோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அவசியம் ஏற்படவில்லை.

## 19. பொற்சிறைக் காதலியின் விடுதலை

ராஜாமணி மற்றொரு நாடகம் எழுதியிருந்தான். அதை நடத்திக் காண்பிப்பதைப்பற்றித் தன்னுடைய மானேஜர்களோடு வாதித்துக்கொண்டிருந்தான். வர, வர, அவனுக்குக் கொஞ்சம்கூட நிம்மதி யில்லாமல் போய்விட்டது. அவனோடு வசித்துக்கொண்டிருந்த தாராபாய்க்கும் அவனுக்கும் அடிக்கடி சண்டைகள். அவளுடைய தோற்றமும் அழகும் குறைந்துவிட்டன. ராஜாமணியின் குடிமாத்திரம் சிறிதும் குறையவில்லை. ஜகன்னாதன் ராஜாமணியை ஓரிரண்டு தடவை சந்தித்ததுண்டு. வழக்கம்போல் ராஜாமணி ஜகன்னாதனது மதுவிலக்கு உத்தியோகத்தைப் பற்றிப் பரிகாசம் செய்தான். தன்னுடைய உத்தியோக முறையில் ஒருநாள் ராஜாமணியையே கைது செய்ய நேர்ந்தால் என்ன செய்வது என்பதே ஜகன்னாதனுக்குக் கவலை.



இந்த வேலை ரொம்ப மூடத்தனமாயிருக்கிறது.

ஒரு நாள் திடீரென்று ஜகன்னாதனைக் கந்தசாமி டெலி போனில் கூப்பிட்டான்.

"ஜகன்னாதா! பெயர் ஒன்றும் சொல்லாதே. கேட்ப தற்கு மாத்திரம் பதில் சொல். எத்தனையோ பெயர் டெலி போனில் "ஒட்டு" கேட்பார்கள் உனது சொந்தக்காரனான கவிநாடகம் எழுதுவோன் இப்பொழுது எங்கிருக்கிறான் தெரியுமா?

ஜகன்னாதன் திகைத்து விட்டான். "தெரியாது" என் றான்.

"எங்கிருக்கிறானென்று தெரிந்தால் வெளியில் தலை காட்டாமல் இருக்கச்சொல். அவனைச் சிலர் தேடிக்கொண் டிருக்கிறார்கள். இதற்கு மேல் என்னால் போன் மூலம் ஒன் றும் சொல்லமுடியாது. வேறு விவரம் தெரியவேண்டுமா னால் வீட்டிற்கு வா" என்று சொல்லி நிறுத்தி விட்டான் கந்தசாமி.

ஜகன்னாதன் இந்த விஷயத்தை மரகதத்திற்குத் தெரி வித்தான். அவள் திகிலடைந்து விட்டாள். இருவரும் கந்தசாமியின் வீட்டிற்கு விரைந்து சென்றார்கள். கந்தசாமி இருவரையும்உள்ளேவரச்சொல்லிக் கதவை மூடித்தாளிட்டு விட்டுத்"தாரா பாய் தற்கொலை செய்துகொண்டு விட்டாள்" என்றான்.

"எப்படி?" என்றாள் பயந்து திகைத்த மரகதம்.

தன் அறைக்கதவைத் தாளிட்டுவிட்டுக் கழுத்தில் சுருக்குப்போட்டுக் கொண்டு இறந்துபோய் விட்டாள்.

"ராஜாமணி எங்கே?

"அதுதான் தெரியவில்லை. அவனை வீட்டில் காண வில்லை."

"ராஜாமணியும் தற்கொலை செய்து கொள்வானென்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டாள் மரகதம்.

"இல்லை. அவன் போலீஸார் கையில் அகப்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். யாரோ வேண்டுமென்று தாராபாயைத் தூக்குப்போட்டு விட்டார்கள் என்பது போலீஸ் அபிப்பிராயம்.,'

"ஆம், ராஜாமணி நியாயமாகப் போலீஸைச் சந்தித்துக் கேள்விகளுக்குப் பதில் கொடுக்க வேண்டாமா?

"இதில் இன்னொரு பெண்ணும் சம்பந்தப்பட்டிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ராஜாமணியைப் பார்த்தால் இரண்டாவது பெண்ணையும் பற்றிக் கேட்பார்கள். கேவலமான உண்மைகள் வெளிப்படும்.

என்ன செய்வதென்று தெரியாமல் மரகதமும் ஜகன்னாதனும் வீடுதிரும்பினார்கள். ஆனால் ராஜாமணியோ எங்கெங்கேயோ அலைந்துவிட்டுக் கடைசியில் தன் சகோதரியின் வீட்டில் அடைக்கலம் புகுந்திருந்தான்.

ராஜாமணியின் நிலைமை மிகப் பரிதாபமா யிருந்தது. அவன் தன்னுடைய கஷ்டங்களை யெல்லாம் மரகதத்திடம் கூறி முறையிட்டான். தாராபாய் அபினியின் அடிமை என்றும் கடைசியில் சிரமம் தாங்க முடியாது தன்னையே கொன்று கொண்டாளென்றும் தெரிவித்தான்.

மரகதம் தன் அன்பு முழுவதையும் ராஜாமணிமீது பொழிந்து அவனுக்குச் சிகிச்சை செய்தாள். இனிமேல் அவன் ஒரு சொட்டு மதுவைக்கூடத் தொடக்கூடாதென்று வற்புறுத்தினாள். அவனோ, தன் உயிர்போகும் நிலையிலிருக்கிற தென்றும் திடீரென்று நிறுத்த முடியாதென்றும் வாதித்து மன்றாடினான்.

"ராஜா! முடியவே முடியாது! நான் உன்னோடு கூடவே யிருந்து எந்தவிதத்தில் வேண்டுமானாலும் உதவிசெய்யத் தயார். ஆனால் என் வீட்டில் சாராயம் துளிகூடக் கூடாது. நீகுடியை நிறுத்தப் போவது உண்மையானால் ஒரே ஒருவழி தான் இருக்கிறது. குடியை மறந்துவிடு. நம்முடைய தந்தை,



மர்கதம் தன் அன்பு முழுவதையும் ராஜாமணிமீது
பொழிந்து அவனுக்கு சிகிச்சை செய்தாள்.

என்மாமனுர் இருவரையும் மறந்துவிட்டாயா? ராஜாவிட்டு விடு!" என்று மன்ருடினுள். மரகதத்திற்கு அழுகை வந்து விட்டது. 'ஹோ' வென்று அழுதாள். இளம் பருவத்தில் தான் ராஜாமணி மீது எவ்வளவோ அன்பாயிருந்ததை யெல்லாம் நினைத்துப் புலம்பினுள். இந்த நிலைமையில் ராஜாமணி ஒருதுளி சாராயமாவது எதிர்பார்க்க முடியுமா? கந்தசாமி ராஜாமணியைப் பார்க்க வந்தபொழுது கூட மரகதம் அவனைச் சோதித்துச் சாராயப்புட்டி யில்லையென்று தெரிந்த பிறகுதான் உள்ளே அனுமதிப்பாள்.

தாராபாய் தற்கொலையைப்பற்றிப் பத்திரிகைகளில் வழக்கம் போல நிருபர்களின் கற்பனுசக்தியைத் தெரிவிக்கும் கதைகள் வெளிப்பட்டன. ராஜாமணி கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுவான் என்று எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனுல் ராஜாமணி பெரிய பணக்காரரான ராமாநுஜர் சொந்தக்காரனலலவா? அவருடைய சிபார்சின்மேல் போலீஸார் தாராபாய் தற்கொலையை யடக்கிவிட்டார்கள்.

அதுமுதல் ராஜாமணி மரகதத்தின் மேற்பார்வையில் வசிப்பதென்று ஏற்பாடாயிற்று. அவன் மரகதம் குழந்தையோடு விளையாடிக்கொண்டும் மது விலக்குச் சட்டத்தையே தூஷித்துக்கொண்டும் காலங்கழித்து வந்தான். தன்னுடைய பழைய நண்பர்கள் வந்து குடிக்க வற்புறுத்திஞலும் மறுத்துவிடுவான். அவர்களோ அவனுக்குப் பைத்தியம் தான் பிடித்து விட்டதோ வென்று வியந்தார்கள்.

குடியை நிறுத்தியதிலிருந்து ராஜாமணிக்கும் அதிக கஷ்டமாயிருந்தது. அவனுக்கு ஒன்றும் எழுத முடிவதில்லை. எவ்வளவு முயன்றும் முன் மாதிரி ஜனங்கள் ஆச்சரியப் படும்படியான விஷயங்கள் எழுத வரவில்லை.

ஒருநாள் ஜகன்ஞதனும் ராஜாமணியும் பத்திரிகையைப் படித்துக்கொண்டிருந்தார்கள். ஒரு மரணச் செய்தியைப் படித்த ராஜாமணி உடனே சந்தோஷத்துடன் தன்னை நன்ருய் அலங்கரித்துக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்

டான். இறந்தது ராஜாமணி முன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்த பொற் சிறைக் கைதியின் கணவன் சிறைக் காவலன் இறந்துவிட்டான். இனி அழகிய கைதி தனக்குத் தானே சொந்தம்!

ராஜாமணியை அந்த அழகிய கைம்பெண் சந்தோஷத்துடன் வரவேற்றுள். இருவரும் காதலுணர்ச்சிமேலீட்டினுல் கட்டித்தழுவிமுத்தமிட்டுக் கொண்டனர்.

"கண்ணே நம்முடைய குழந்தைகள் எங்கே?" என்ருன் ராஜாமணி.

இருவரும் மாடிக்குச்சென்று குழந்தைகளைப் பார்த்தார்கள். பத்து வயதுப் பையன், ஒன்பது வயதுப் பெண். இருவரும் ராஜாமணியின் அச்சு' ராஜாமணிக்குத்தன்னுடைய குழந்தைப்பருவ நிலையால் தன்னையே பார்ப்பது போலிருந்தது.

"குழந்தைகளே! நான் யார் தெரியுமா? உங்களுக்கு ஒரு கதை சொல்லப்போகிறேன்" என்ருன்.

'சொல்லுங்கோ என்று இருகுழந்தைகளும் அவனிடம் அணுகின.

"ஒரே ஒரு ஊரில் ஒரு ராக்ஷஸன் இருந்தான். அவன் தங்கத்தினுல் ஒரு வீடு கட்டி அதில் ஒரு அழகான ராஜகுமாரியை அடைத்து வைத்திருந்தான்......"

"ஐயோ என்ன இது குழந்தைகளுக்கா......" என்று தடுத்தாள் பொற்சிறைக்காதலி.

"அப்புறம் ஒரு ராஜகுமாரன் வந்து அவளுக்குப் பாட்டுகள் பாடி அவளுக்குச் சந்தோஷமுண்டாகும்படி செய்து ராக்ஷஸனைக் கொன்று விட்டான். குமாரி விடுதலையானுள்? என்ருன்.

பொற்சிறைக்காதலி ராஜாமணியின் தைரியத்தைக் கண்டுதிகைத்து விட்டாள். பிறகு இருவரும் மேல் மாடிக்

குச் சென்றார்கள். தான் ஜன்னல் வழியாய் வந்து அவளைக் காதலித்ததெல்லாம் ராஜாமணிக்கு நினைவு வந்தது. தான் பாலமாக வைத்துவந்த பலகைகூட மேல் மாடி அறையிலிருந்தது. காதலி அதை அவ்வளவு பத்திரமாய்க் காப்பாற்றி வைத்திருந்தாள்.

ராஜாமணி சந்தோஷ மிகுதியால் தலைகால் தெரியாமல் வீடுவந்து சேர்ந்தான். "ராஜா! என்ன இவ்வளவு நேரம்? நாங்கள் எல்லாம் சாப்பிட்டாய்விட்டது. உட்கார்ந்து சாப்பிடு" என்றாள் மரகதம்.

"மரகதம், நான் இப்பொழுதுதான் அமிர்தம் பருகிவிட்டு வருகிறேன். தேவலோக முழுவதும் சஞ்சரித்துவிட்டு ஒரு கந்தர்வ ஸ்திரீயைச் சிறையிலிருந்து விடுவித்துவிட்டு வருகிறேன்." என்றான் சகோதரன்.

மரகதம் அவனை உற்று நோக்கினாள். அவளுக்குத் திகில் பிடித்துக்கொண்டது. ஒருவேளை ராஜாமணி மீண்டும் குடிக்க வாரம்பித்துவிட்டானோ?

"என்னப்பா ராஜா?"

"மரகதம் நான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நீ அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தாயே. நான் இப்பொழுது கலியாணம் செய்துகொள்ளலா மென்றிருக்கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?"

"பெண் நல்லமாதிரியாயிருந்தால் எனக்கும் சந்தோஷம்தான்" என்றாள் மரகதம்.

"அவளுடைய கணவன் நேற்றுத்தான் இறந்தார். நாங்களிருவரும் இத்தனை நாள் காத்துக்கொண்டிருக்கவேண்டியதாயிற்று.

"ராஜாமணி!

அவளுக்கு இரண்டு குழந்தைகளிருக்கின்றன. பையன் பத்து வயது. பெண் ஒன்பது வயது."

"ராஜாமணி, முதல் விவாக குழந்தைகளை நீ எப்படி போஷிப்பாய்......"

"இல்லை......குழந்தைகள் உண்மையில் என்னுடையது.

மரகதம் திடுக்கிட்டுப்போனாள். ராஜாமணி! உனக்கு இரண்டு குழந்தைகளா?

மரகதம், நீ "பொற்சிறை" நாடகம் பார்த்திருக்கிறாயே அது உண்மையாயிருக்கலாமென்று எப்பொழுதாவது உனக்குத் தோன்றியதுண்டா?"

"அப்படியானால் இந்தப்பெண்......"

"ஆம்."

"ராஜாமணி உன்னுடைய விஷயங்கள் ஒன்றுக்கு மேல் ஒன்று ஆச்சரியமாயிருக்கிறது."

"நான் விவாகம் செய்து கொள்ளலாமா?"

"குழந்தைகள் உன்னுடையது என்று சொல்லுகிறாயே நீ கலியாணம் செய்து கொள்ளவேண்டுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"சரி, உடனே நீ வந்து அவளைப் பார்த்து அங்கீகரிக்க வேண்டும்." இருவரும் ராஜாமணியின் காதலி வீட்டிற்குச் சென்றார்கள். பொற்சிறைக் கைதிக்கு முதலில் பயம்தான். மரகதம் அவளோடு அன்புடன் பேசி அவளுடைய பயத்தையும் சந்தேகத்தையும் தவிர்த்தாள்.

குழந்தைகளே, இதோ 'உங்கள் அத்தை வந்திருக்கிறாள்." என்றான்.

"அத்தைகூட கதை சொல்லுவாளா?"

"ஆம், எங்கள் வீட்டில் ஒரே ஒரு குழந்தையிருக்கிறது அதன் கதையைச்சொல்லுகிறேன் என்றாள் மரகதம்.

குழந்தைகளோடு பழகிக் கொண்டபின் மரகதம் ராஜாமணியின் காதலிக்கு அவனை எப்படிப்போஷிப்பதென்பதைப் பற்றி உபதேசம் செய்யவாரம்பித்தாள்.



......இதோ உங்கள் அத்தை வந்திருக்கிருள்.

சாராயம் என்னும் வாசனையே வீட்டில் கூடாதென்றும் பழைய நண்பர்கள் வந்து விருந்துகளில் சாராயம் வழங்கினாலும், மரியாதை கெட்டுப்போகும்படியாயிருந்தால் கூட ராஜாமணி சாராயத்தைத் தொடாமல் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு இனி அவளைச் சேர்ந்ததென்று எடுத்துக் கூறினாள்.

"ராஜா என்னவேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளட்டும். மதுவிலக்கைப்பற்றிப் பரிகாசம் செய்வதுதான் அவன் வழக்கம். ஆனால் அவன் சாராயத்தைமாத்திரம் தொடாமல் பார்த்துக்கொள்" என்று சொல்லிமுடித்தாள்.

## 20. தியாகம்

மரகத வல்லியின் பிரசார வாழ்க்கை மிகவும் சிறப்பாய் நடந்து வந்தது. ஜனங்கள் அவளுடைய பிரசங்கங்களை மீண்டும் மீண்டும் கேட்கவேண்டுமென்று விரும்பினார்கள். மதுவிலக்காளர்கள் சட்டத்தைமாத்திரம் நிறைவேற்றிவிட்டுப் பேசாமலிருந்துவிட்டது தவறு என்று உணர்ந்தாள் மரகதம்.

மதுவிலக்குச் சட்டம் கொண்டுவருவதற்கே அநேக நாள் பிரசாரம் செய்யவேண்டியிருந்தது. அந்த சட்டத்தின்படி நடக்கவேண்டிய அவசியத்தை ஜனங்கள் உணரும்படி செய்வதற்கு இன்னும் அவ்வளவு காலமாவது செல்லுமல்லவா? அடிக்கடி ஜனங்களின் உணர்ச்சியை எழுப்பி நெருப்பை விசிறி அதிகப்படுத்துவதுபோல் எரியும் நிலையிலேயே வைத்துக் கொண்டிருக்கவேண்டும். தவிர ஒவ்வொரு வருஷமும் புதிது புதிதாக குழந்தைகள் பிறந்துகொண்டிருக்கின்றன. அவர்களுக்கு ஒவ்வொரு முறையும் புதிதாக உபதேசம் செய்யவேண்டிய கடமையைக் கைவிடமுடியுமா?

இந்த எண்ணங்களையுடைய பிரசாரகிக்குப் போரின் அணியிலிருந்து விஷயங்களை யறிந்துகொண்டுவந்த கணவன் இருந்தது அதிக உதவியாயிருந்தது.

ஜகன்னாதனுடைய நேர்மையையும் உண்மையையும் பார்த்து அதிகாரிகள் அவனைத் தங்களுடைய இலாகாவிற்குள்ளேயே குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடிக்கும் உத்தியோகத்திலமர்த்தினார்கள். லஞ்சம்வாங்குபவனைப்போலவும் போக்கிரியைப்போலவும் பாசாங்குசெய்து தன்னோடு வேலை செய்தவன் ஒருவனைக் கவனித்துக்கொண்டே யிருந்தான் ஜகன்னாதன். அந்தப் பேர்வழி ஒரு சாராயக் கடைக்காரனிடம் 200 ரூ. வாங்கிக் கொண்டுவந்து 100 ரூ. வாங்கியதாகச் சொல்லி ஜகன்னாதனுக்கு 50 ரூ. கொடுத்தான். ஜகன்னாதன் அந்த 50 ரூபாயை அப்படியே மேலதிகாரியிடம் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டான். முடிவு மறுநாளே லஞ்சம் வாங்கிய உத்தியோகஸ்தன் வீட்டுக்கனுப்பப்பட்டான்.

மருந்து விஷயங்களுக்காகச் சில வைத்தியசாலைகள் குறிப்பிட்ட அளவு போதைவஸ்துக்கள் தயாரிக்கலாமென்று அநுமதிக்கப்பட்டிருந்தன. இந்தக் காரணத்தைக்கொண்டு அந்தவிடங்களில் ஏராளமான சாராயம் தயாரிக்கப்பட்டுப் பெரிய ஹோட்டல்களுக்கு அனுப்பப்படும். அவைகளைச் சோதித்துக் குற்றம் கண்டுபிடிப்பதை அநேகமாய் எப்பொழுதும் லஞ்சம் வாங்கும் போலீஸார் தடுத்துவந்தனர்.

ஒருநாள் அதிகாரியின் உத்திரவுப்படி விலக்கு இலாகா உத்தியோகஸ்தர்கள் பலர் ஒரு பெரிய 'சந்தேக' ஹோட்டலைச் சோதனையிடச் சென்றனர். இவர்கள் உள்ளே நுழையுமுன் ஒரு போலீஸ் மோட்டார் வந்து சேர்ந்தது. போலீஸார் இவர்களை உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டனர். விலக்காளர்கள் கோபத்தோடு தங்களுடைய அதிகாரசின்னங்களைக் காண்பித்ததும் போலீஸ்காரர்கள் தங்கள் குற்றத்தை உணர்ந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள். ஆனால் இவர்கள் வாதித்து ஒரு முடிவுக்கு வந்து தவறை உணர்வதற்குள் கடைக்குள் சாராயம் எல்லாம் மறைந்துவிட்டது. கடைசியில் விலக்காளர்கள் உள்ளே நுழையும்போது. காபி, டீ, குளிர்பானம் முதலியவைகளைத் தவிர, சந்தேகப்படக்கூடிய

பொருள்கள் எதுவும் தென்படவில்லை. இம்மாதிரிதான் போலீஸார் தங்களுக்குப் பணம் கொடுப்பவர்களைக் காப்பாற்றி வந்தார்கள்.

மறுநாள் பத்திரிகைகளில், ஜனங்களின் உரிமைகளில் அனுவசியமாய்த் தலையிடும் ஒரு அரசியல் முறைக்கு இது நன்றாய் வேண்டியதுதான் என்று கட்டுரைகள் வெளியிடப்படும். இம்மாதிரி ரகசியக்குடி அதிகரித்ததோடு அதோடு சேர்ந்த தீமைகளும் அதிகரித்தன. இரவு கிளப்புகள் குடிக்கு மாத்திரமன்றி விபசார விடுதிகளாகவும் நடத்தப்பட்டன. மது, மாதர், சங்கீதம் மூன்றும் சேர்ந்து பணம் கொழுத்தவர்கள் செலவு செய்ய வேண்டியதற்குப் பல வழிகள் ஏற்பட்டன.

போதாக்குறைக்கு நாடகமும் படக்காக்ஷியும் சேர்ந்து கொண்டன. இவைகளில் நீதியைத் தவறி நடக்கும் கொள்ளைக்காரனே கதாநாயகனாகிறான். ராமனையும் கிருஷ்ணனையும் புருஷோத்தமர்களாக நினைத்த இளைஞர்கள் நம்பக்கூடாத செயல்களைச்செய்யும் கொள்ளைக்காரனையே வீரனாக மதிக்கக் கற்றுக்கொண்டுவிடுகிறார்கள்.

பிரசார வாழ்க்கையின் வேகத்திற்கிடையில் மரகதத்திற்கு மற்றொரு குழந்தையும் பிறந்து விட்டது. குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு வீட்டிலிருப்பதா ஊரார் குழந்தைகளுக்குப் போதிக்க வெளியில் செல்வதா? தவிர தங்களுக்கு வரும் வரும்படி குழந்தைகளைப் பெற்றுக்கொண்டே இருந்தால் வளரும் குடும்பத்தை நிர்வகிப்பது சாத்தியமா?

கடைசியில் மரகதம் கர்ப்பத்தடை முறைகளை உபயோகிக்க நேர்ந்தது. இது அவசியமே. ஆனால் இம்மாதிரியான புது முறைகளைக் கைக்கொண்டதிலிருந்து மரகதத்திற்குச் சில சந்தேகங்களும் தோன்றின. ஒரு பெண் தன்னுடைய விவாகத்தை ரத்து செய்துகொள்ளலாமா? ஏன் கூடாது. ஒரு குடிகாரனுக்கு வாழ்க்கைப் பட்டுக் கஷ்டப்படும் பெண்

ஹுக்கு விவாக ரத்து ஒன்றுதானே நல்லவிடுதலை? இம்மாதிரி யாக அநுபவம் முதிர்ந்த மரகதம் சிந்திக்கலானள்.

ஜகன்னுதனுடைய வேலைத்திறத்தை மெச்சி அதிகாரிகள் அவனைப்படிப்படியாக உயர்த்தினர்கள். பல்வேறு கைத்தொழில்கள் நடத்துவதாகப் பாசாங்கு செய்து உள்ளே ரகசியமாகச் சாராயம் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அதிக சாமார்த்தியமாகக் கண்டுபிடித்து விட்டான். சென்னை முழுவதும் பணம் சம்பாதிக்க எவ்வளவோ வழிகள் இருந்தன. சாராயம் தயாரிப்பவர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஜகன்னுதனுக்குக் கொடுக்க முன்வந்தார்கள். ஆனல் ஜகன்னுதன் தன்னுடையசம்பளத்திற்குமேல்தம்பிடிகூடத் தொடுவதில்லை. என்ற தீர்மானத்தோடிருந்துவிட்டான். ஆனல் இத்தகைய நேர்மையோடிருந்த வேலைக்காரர்களுக்கு அங்கீகாரம் உண்டா ? அதுதான் கிடையாது. பெரிய கைத்தொழில் முதலாளிகளில் அநேகம்பேர் ரகசிய சாராயம் தயாரிப்பவர்கள். இவர்களே பணம் செலவழித்துப் பல அங்கத்தினர்களைச் சட்டசபைக்கு அனுப்பினர்கள். விலக்கு அமுல் தீவிரமாய் நடந்ததால் இவர்களுக்குத்தானே நஷ்டம். அப்படியிருக்கத் தங்களுடைய கடமையைச் சரிவரச் செய்யும் விலக்கு உத்தியோகஸ்தர்களை இவர்கள் உற்சாகப்படுத்துவார்களா? விலக்காளர்களுக்குச் சட்டம் கிடைத்தது குடிகாரர்களுக்குச் சாராயம் கிடைத்துக் கொண்டேயிருந்தது இது தான் முடிவு.

சென்னை நகரத்தின் செல்வவந்தர்களுக்காகச் சாராயம் தயாரிக்கும் தொழில் சொல்லொணுக் கேவல நிலைமையிலிருந்தது. சட்ட விரோதமான காரியமாகையால் தொழில்காரர்கள் ஒருவருக்கும் தெரியாத நிலவறைகளில் கைகளில் துப்பாக்கியைத் தாங்கிய வண்ணம் ஜாக்கிரதையா யிருந்து வேலையை நடத்தவேண்டி யிருந்தது. இந்த விடங்களில் மதுவிலக்கு இலாகா உத்தியோகஸ்தர்கள் போவது அபாயமல்லவா? திடீரென்று விரோதிகள் பின்னுலிருந்து துப்பாக்கியால் சுட்டுவிடுவார்கள். தற்காப்புக்காக உத்தியோகஸ்

தர்களும் துப்பாக்கியை உபயோகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும். ஜகன்னுதனும் குறி பார்த்துச் சுடப் பழகிக் கொண்டான். ஆனுல் உத்தியோகஸ்தர்கள் முதலில் எதிரிகளால் சுடப்பட்டாலொழியத் தாங்கள் சுடக்கூடாது என்பது சட்டம்.

ஜகன்னுதனது பணக்கார நண்பர்களெல்லோரும் அவனோடு பேசுவதைக்கூட அநேகமாய் நிறுத்தி விட்டார்கள். கந்தசாமி இன்னும் அதிக சம்பளம் பெறும் வேலையிலமர்ந்தான். பெரிய மோட்டார்களில் தான் போய்க்கொண்டிருந்தான். ஜகன்னுதனைப் பார்த்தால் பார்க்காதவன் போலவே இருந்தான். ராஜாமணியின் வாழ்க்கையே வேறு. தன்னுடைய மனைவியின் பணத்தைத் தாராளமாய் செலவழித்து வாலிப எழுத்தாளர்களையும் கவிகளையும் போஷித்து வந்தான்.

மரகதத்தின் வேலையோ முன்னையைவிட அதிக தீவிரமாய் நடந்தது. அவள் பெரிய சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் சந்திக்கும்படி நேர்ந்தது. சட்டசபை அங்கத்தினர்களில் சிலர் மதுவிலக்குச் சட்டத்திற்கு சிலதிருத்தங்கள் கொண்டு வந்தனர். இந்தத் திருத்தங்கள் குடிகாரர்களுக்குச் சாதகமானதென்று சொல்லவும் வேண்டுமா? திருத்தங்களை ஆலோசிக்கக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தப்பட்டது. திருத்தங்களை ஆதரிப்போரும் எதிர்ப்போரும் கமிட்டியின் முன் சென்று தங்களுடைய கக்ஷியை எடுத்துக்கூறலாம். குடிகாரர்கள் தங்களுடைய கக்ஷியிற் சிறந்த சொற்பொழிவாளர்களைக் கொண்டுவந்து முன்னுல் நிறுத்தினுர்கள். திருத்தத்தை எதிர்ப்போர்கள் முக்கியமாக மாதர்களையே தங்களுடைய பிரதிநிதிகளாக அனுப்பினுர்கள். இவர்களில் முக்கியமானவள் மரகதம்.

மரகதம் சட்டசபை முன் நின்று திருத்தத்தை ஆதரிப்போர்கள் சாராயம் தயாரிப்பவர்களுடைய பிரதிநிதிகள் தான் என்று கூறியது கோபத்தையும் பரபரப்பையும் உண்டாக்கி விட்டது. இது கமிட்டி அங்கத்தினர்களுக்கே

பெரும் அவமதிப்பென்று கூறி, ஒரு அங்கத்தினர் மரகத வல்லி தன்னுடைய வார்த்தைகளுக்கு ஆதாரம் காண்பிக்க வேண்டுமென்று கேட்டார். மரகதத்தைக் கேள்விக்கு மேல் கேள்விகள் கேட்டுத் தடுமாறும்படி செய்ய முயன்றார்கள். ஆனால், மரகதமோ சிறிதுந்தளராமல் தன்னுடைய கணவன் வேலையனுபவத்தால் சேகரித்த உண்மைகளைக் கொண்டு எந்தெந்த அங்கத்தினர்கள் எந்தெந்தச் சாராயச்சாலையில் சிரத்தையுள்ளவர்களென்று ஊர், பெயர், விலாசமுள்படக்கமிட்டி முன் தெரிவித்து எல்லோரையும் திகைக்கும்படி செய்து விட்டாள்.

ஜகன்னாதனது மேலதிகாரியான தீனதயாளு என்பவர் மாத்திரம் லஞ்சம் வாங்காமல் தம்முடைய வேலையைச் சரிவர செய்து வந்தார். அடிக்கடி அவர் ஜகன்னாதனுடன் வேலையிலுள்ள கஷ்டங்களைப்பற்றிக் கலந்தாலோசிப்பார்.

ஒரு நாள் அவரும் மரகத வல்லியின் பிரசங்கமொன்றிற்கு வந்திருந்தார். பிரசங்கம் முடிந்ததும், மதுவிலக்கைப் பற்றி மரகதம் அவரோடு பேசிக்கொண்டிருந்தாள்.

“சர்க்காரின் மது விலக்குச் சட்டம் சரியாய் அமுல் செலுத்தும் என்று நீங்கள் நம்புகிறீர்களா? என்றாள் மரகதம்.

“நன்றாய் அமுலில் வேலைசெய்ய வேண்டுமென்றால் சட்டத்தை மீறுகிறவர்களை விசாரித்துத் தண்டிக்க அதிக நீதி ஸ்தலங்கள் வேண்டும். முதலில் சென்னை, மதுரை போன்ற பெரிய பட்டணங்களில் சட்டம் தவறாமல் நடக்கும்படி பார்த்துக்கொண்டால் பிறகு சுலபம்தான். கஷ்டப்படும் சில்லறை உத்தியோகஸ்தர்களுக்குச் சரியான சம்பளமும் கொடுப்பதில்லை. ஆகவே லஞ்சம் கிடைத்தால் உடனே வாங்கிவிடுவார்கள். ஒவ்வொரு இலாகாவிலும்தான் லஞ்சம் வாங்கும் கெட்ட பழக்கம் இருந்து வருகிறது. இதற்காக அந்த இலாகாவையே குற்றம் கூறலாமா. அப்படி லஞ்சம் வாங்கிக் கடமையில் தவறுகிறவர்களை நீக்கிவிட்டால் வேலை

சரிவர நடந்துவரும். அரசியல் வாதிகள் திருட்டுக் குடியர்களோடு சேர்ந்திருக்கும் வரையில் இந்த நிலைமைதான் வளரும். சுயநலத்திற்காக வேலைசெய்யும் அரசியல் வாதிகளை ஒழிப்பது பொதுஜனங்கள் கடமை. தங்களுடைய தேசம் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்ருல் இம்மாதிரியான மோசடி அரசியல் வாதிகளைச் சட்ட சபைக்கும் அதிகார ஸ்தானங்களுக்கும் அனுப்பாமல் பொது ஜனங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்று தம்முடைய அனுபவ பூர்வமாக விளக்கினர் தீனதயாளு.

ஒருநாள் மாலை மரகதவல்லி வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தாள். திடீரென்று டெலிபோன் மணியடித்தது பேசியது ராஜாமணியின் மனைவி.

"அண்ணி, நானென்ன செய்வேன்! உங்களிடம் சொல்வதற்கே அவமானமாயிருக்கிறதே." என்ருள்.

"என்னம்மா, அம்புஜம் ?"

"அவர் திரும்பவும் குடித்துவிட்டார்.

"ஐயோ கடவுளே! இது என்ன விபரீதம் !"

"நேற்று முழுவதும் அவர் வரவில்லை. உடனே எனக்குத் திகில் பிடித்துக்கொண்டது. கடைசியில் கந்தசாமிதான் டெலிபோன் மூலம் தெரிவித்தார். குடிவெறியில் ஏதோ ஒரு சாராயக்கடையில் பிரக்ஞையற்றிருக்கிருராம். அவரை ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு போவதாகச் சொன்ஞர் கந்தசாமி.'

"ஐயோ அம்புஜம்! இது எத்தனை நாளாக நடந்து வருகிறது?"

"ஐந்தாறு மாதமாய் இப்படித்தான் நடந்துவருகிறது. நான் எவ்வளவு சொல்லியும் அவர் காதில் போட்டுக்கொள்ளவில்லை."

"இப்பொழுது என்ன செய்யப் போகிருய்".

"அதுதான் தெரியவில்லை. என் உயிரே போய்விடும் போலிருக்கிறது."

"நான் இப்பொழுதுதான் வெளியில் புறப்பட்டேன். இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு ஜகன்னாதனுக்கும் டெலிபோன் மூலம் செய்தியைத் தெரிவித்துவிட்டு மரகதம் ராஜாமணி வீட்டிற்குச் சென்றாள்.

அம்புஜம் துன்பக்கடலிலாழ்ந்திருந்தாள். அவமானமும் துக்கமும் அவளை வருத்தின.

"ஐயோ அண்ணி! நான் என்ன செய்வேன்? இந்த மாதிரியாகுமென்று எனக்குத் தெரியாதே! நான் கொஞ்சம் கண்டிப்பாக நடந்து கொள்ளாமலிருந்து விட்டேனே! அடிக்கடி தடுத்தால் அவர் கோபித்துக் கொள்வாரென்று இருந்துவிட்டேன். அவருக்காக நான் என்னவேண்டுமானாலும் செய்திருப்பேன். நானும் குடிக்கவேண்டுமென்று அவர் சொல்லியிருந்தால் கூட குடித்திருப்பேன். அவருடைய இஷ்டத்திற்கு விரோதமாய்ப் போக எனக்குத் தைரியம் வரவில்லையே என்று அழுதாள்."

"அம்புஜம், உன் குழந்தைகள்தான் கஷ்டப்படப் போகிறார்கள்."

"ஐயோ குழந்தைகளைப் பற்றி நினைக்கவே சகிக்கவில்லையே."

"அவர்களிடம் உண்மை முழுதும் சொல்லிவிடு."

"அண்ணி! குழந்தைகளிடமா?"

"அம்புஜா! இதைக் குழந்தைகளுக்குத் தெரியாமல் வைத்துக் கொண்டிருக்க முடியுமென்றா நினைக்கிறாய்? அவர்களுக்கு இந்த விபரீத உண்மை எப்படியும் தெரிந்துவிடும். முதலிலேயே அவர்களுக்குச் சொல்லித் தகப்பனாருக்கு நேர்ந்த தீமை தங்களுக்கு வராமல் அவர்களே பார்த்துக் கொள்ளும்படி செய்யவேண்டும்." பிறகு மரகதம் நின்று கொண்டே யோசித்துக்கொண்டிருந்தாள்.

மீண்டும் டெலிபோன் மணியடித்தது. ஜகன்னுதன் தான் ஏதோ ஒரு சாராயச் சாலே சோதனைக்குப் போவதாயும் அன்றிரவு வரமுடியாதென்றும் ஆபீஸிலிருந்து தெரிவித்தான். சோதனே என்ருலே மரகதத்திற்குப் பயம்தான் சோதனையில்தான் சண்டைகள் ஏற்படுவது வழக்கம். அவளுக்குத் திகில் உண்டாயிற்று. ஆயினும் தன் கணவனைப் போருக்கு அனுப்பும் வீரப் பெண்மணியைப்போல் "ஜாக்கிரதையாயிருங்கள்!" என்ருள்—இதுவே அவர்களிருவருக்கும் நடந்த கடைசி சம்பாஷணை.

மரகதம் அம்புஜத்தின் கதியைப்பற்றியே சிந்தித்தாள். அம்புஜத்திற்கு எவ்வளவோ செல்வாக்கு இருந்தும் சந்தோஷமாய் அனுபவிக்கக் கொடுத்து வைக்கவில்லே என்று தன்னுடைய சகோதரன் ராஜமணியைப்பற்றி வருந்தினுள். அவனுடைய குழந்தைகளுக்கு உண்மையை முழுவதும் கூறிவிடவேண்டுமென்று தீர்மானித்தாள்.

தனது அருமைக் குழந்தைகளிருவரையும் தூங்க வைத்தாள். கண்ணை மூடுமுன் ஆறுவயதுடைய முதற் குழந்தை "ஏனம்மா அப்பா வரவில்லே? கொள்ளேக்காரர்களேப் பிடிக்கப்போயிருக்காரா?" என்ருன்.

குழந்தைகள் தூங்கியவுடன் மரகதம் தனது பிரசார வேலேவிஷயமாய்க் கடிதங்களுக்குப் பதில் எழுதும் வேலேயிலீடுபட்டாள். திடீரென டெலிபோன் மணியடித்தது. பேசியவர் தீனதயாளு.

"மரகதவல்லி! தைரியமாயிருங்கள். ஒரு கெட்ட செய்தி. ஜகன்னுதனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டார்கள்."

"தெய்வமே!......ஐயோ—இறந்துபோய்விட்டாரா?"

"இல்லே. பெரியகாயம். ஆஸ்பத்திரியிலிருக்கிருர்."

டெலிபோனைக் கீழே போட்டுவிட்டு ஜகன்னுதன் தாயாரிடம் ஒரே வார்த்தை கூறிவிட்டு வெளியே ஓடினுள்.



ஜகனனாதன் இறந்துவிட்டான்.

மரகதம் ஆஸ்பத்திரிக்குள் நுழையும்போது வாயிலி லிருந்த தாதி ஒருத்தி துக்ககரமான செய்தியைத் தெரிவித் தாள்.

ஜகன்னாதன் இறந்துவிட்டான்!

மரகதம் துக்கம்மேலிட்டு கீழே சாய்ந்தாள்.

தன் கணவன் உயிர்போய்விட்டது. உயிர்போய்விட் டது. அவள் நினைத்தபடியே பயந்தபடியே நடந்துவிட் டது. ஆறு வருஷகாலமாக ஜகன்னாதன் இரவில் வேலைக் குப்போகும்போதெல்லாம் இப்படி நடக்குமென்றே பயந் தாள். ஆனால் அவனுடைய கடமை போகவேண்டும். இப் பொழுதோ இவளைத் தனியாக விட்டுவிட்டுத் திரும்பி வரா மல்போய்விட்டான். அவளால் பொறுக்க முடியவில்லை. ஆஸ்பத்திரி தாதிகள் வந்து அவளைத் தேற்றினார்கள்.

மரகதம் அவனுடைய உயிரற்ற உடலைப் பார்த்தாள். அவனது முகத்தில் ஒரு புன்சிரிப்புத் தவழ்ந்து விளையா டிற்று. வீட்டில் படுத்துத் தூங்குவதைப்போலவே காணப் பட்டான் ஜகன்னாதன். உடனே பல நினைவுகள் மரகதத் தின் நெஞ்சைப் பிளந்தன. இனி ஜகன்னாதனில்லாமல் வீடும் வாழ்க்கையும் எப்படியிருக்கும்? துக்கம் தொண் டையை யடைத்துக்கொண்டுவந்தது. மரகதம், பாவம், கண வனைத் தியாகம் செய்த மரகதம் அலறினாள், புலம்பினாள்.

என்ன பயன்? அவனுடைய தாயார் வரப்போகிறாள்.

'அந்தோ, பெற்றெடுத்த தாயார் எப்படி சகிப்பாள்.' மரகதம் தைரியமாயிருக்கவேண்டும்! ஆம் மதுவிலக்கு மது வரக்கனோடு நடக்கும் போர்! போரில் வீரர்கள் மடிவது இயற்கைதான்? இதற்குமுன் எத்தனையோ பெயர் இறந் திருக்கிறார்கள்.

## 21. மதுவிலக்கே மனித விமோசனம்

ஜகன்னாதன் இறந்த மூன்றாவது நாள் மாலை மரகதம் ஒரு பிரசங்கம் செய்ய முந்தியே ஏற்பாடாயிருந்தது. பிரசங்கம் ஏற்படுத்திய சபையார் தங்களுடைய வருத்தத்தைத் தெரிவித்துவிட்டு, பிரசங்கத்தை ஒத்திவைப்பதாகத் தெரிவித்தார்கள். கூடாது மரகதம் தியாகவெறி கொண்டவள். தன் கணவனுடைய மரணம் எதிர்பார்க்கப்பட்டதுதானென்றும் அதற்காகத் தன் வேலையை நிறுத்த முடியாதென்றும் கூறிவிட்டாள் மரகதம்.

கூட்டத் தலைவர் மரகதம் பேசுவதற்குமுன் சபையோருக்கு உண்மையைத் தெரிவித்தார். சபைமுழுவதும் நிசப்தமா யிருந்தது. வெளுத்துத் துக்கத்தி லடிபட்ட முகத் தோற்றத்துடன், மரகதம் முன் வந்தாள்.

"இன்று பேசுவது எனக்குக் கஷ்டமாய்த் தானிருக்கிறது. என்னுடைய குடும்பத்தில் பெண்ணுக்கு உரிய இடம் வீடுதான். பிரசங்க மேடைகளன்று. தேசம் முழுவதும் கள்ளரக்கனின் அட்டகாசத்தைக் கண்டு சகிக்காமல்தான் நான் பிரசாரத்தொழிலை மேற்கொண்டேன். ஆகவே இந்தக் அரக்கர்கள் என் கணவரைக் கொன்று விட்டதனால், நான் பின் வாங்கப் போவதில்லை. இன்று என் பிரசங்கத்தை கேட்பவர்களில் யாரேனும் சிலர் என் கணவன் விட்டுப்போன வேலையைத் தொடர்ந்து செய்யவரலாம்.

அதற்குமேல் பேசமுடியவில்லை. கணவன் பெயரைச் சொன்னவுடன் பத்துவருஷ இல்லற வாழ்க்கையின் நினைவுகளும் மரகதம் கண்கள் முன் தோன்றின. கண்களில் நீர் ததும்பிற்று. சமாளித்துக் கொண்டு மீண்டும் ஆரம்பித்தாள்.

"சகோதரிகளே! குடியரக்கன் கையில் சிக்காத குழந்தைகளே! உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்! நாம் யுத்தத்திற்குப் போக இதுதான் சமயம். உங்களுடைய தேசத்தைக் குடிப்பேயின் வசம் ஒப்புவிக்கப் போகிறீர்களா? நமது நாட்டின் மனச்சாட்சி அழிந்துவிட வில்லையென்று காண்



வருவீர்களா? பதில் வேண்டும். (தயார் தயார் கரகோஷம்.)

பிக்க முன் வாருங்கள்! அரசியல் வாதிகள் வேண்டாம். பெண்களாகிய நாமே நம்முடைய கைகளால் சாராயக் கடைகளை மறியல் செய்து தகர்த்தெறிவோம். மகாத்மாவின் ஆசி நமக்கு உண்டு."

வானமே இடிந்து விழுந்து விடும்போலக் கரகோஷமும் ஆரவாரமும் முழங்கிற்று. தன்னுடைய நெஞ்சைப் பிளந்து கொண்டுவரும் அழுகையை யடக்கிக் கொண்டு மரகதம் மீண்டும் பேசினாள்.

"குடிராக்ஷசனை நினைத்தாலே என் ரத்தமெல்லாங் கொதிக்கிறது. அதற்காகவே என் கணவர் உயிரைத் தியாகம் செய்தார். பெண்கள் அழுதுகொண்டிருப்பதை விட்டுவிட வேண்டும். போரின் முன்னணியில் நின்று கஷ்டங்களை ஏற்கத் துணியவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் தங்கள் பிள்ளைகளைக் காப்பதெப்படி? நாடு லஞ்சத்துக்கு இரையாகி, அதில் வியாபாரம் செய்கிறவர்கள் கைகளில் சிக்கிக்கொள்வதைப் பார்த்துக்கொண்டு எப்படி சும்மா இருக்கமுடியும்? இந்தப் பேராசைக்காரர்களும் பலாத்காரக்காரர்களும் என் கணவனைக் கொலை செய்தனர். என் உயிரும் ஒரு நொடியில் போகலாம். அதற்காக நான் அஞ்சவில்லை. போரில் வீரர்களை நீங்கள் போற்றுகின்றீர்கள். மதுவிலக்கு வேலை செய்கிற ஒருவனுக்கும்சதாபோர்தான். ஆனால் அவனுக்கு நீங்கள் உதவிசெய்வதில்லை. உங்கள் பத்திரிகைகளுக்கோ பணத்தின் மேல் மோகம். எந்த விதவிளம்பரத்தையும் அவை செய்கின்றன. ஹோட்டல்காரர்களுக்கு விருந்துக்கச்சேரிகளைவிட மனமில்லை. விருந்துக் கச்சேரிகளெல்லாம் அநேகமாக குடிக் கச்சேரிகளே. எங்கு பார்த்தாலும் குடிக்குச் சலுகையிருக்கிறது. நாட்டின் நடவடிக்கைகளோ கேட்கவேண்டியதில்லை. பணக்காரர்களுக்கே அதிக சுகம் கொடுக்கஏற்பாடுகள் இருக்கின்றன. என்ன அநியாயம். இதுவோ நாகரீகம்? இவர்கள் இட்டதே சட்டம். வாழ்க்கையின் அடிப்படையாக இன்று இருப்பது பணமே.

"சகோதரத்துவமும், அன்பும் இருக்குமிடம் தெரியவில்லை. அவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒரு ஜன சமூ

கத்தை அமைக்க என் கணவர் இச்சைகொண்டார். சில சாதுக்களுடைய முயற்சியினால் இந்தக் குடிப்பேய் போவதற்கு மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டது. குடி ராக்ஷசனோடு போர்புரிந்து அவனைத் தொலைப்பதாகத் துரைத்தனத்தார் தீர்மானித் திருக்கிறார்கள். ஆனால் நம் சைன்யத்திற்கு ஆள் பலம் போதாது. ஆயுதங்களோ இல்லை. யுத்தத்தில் ஜயமடைய வேண்டும் என்ற அந்தரங்க ஆசைகூட பலருக்கு இல்லை. பெரிய இடங்களில் ஆஷாடபூதித்தனமும், மோசடியும் நிரம்ப இருக்கின்றன. அவைகளை ஒழிக்க முன் வாருங்கள்.

"குடியினால் வருங்கேட்டை அறியாதவர் யார்? உடல் அழிவை உண்டாக்குவதில் அதற்கு மிஞ்சியது ஒன்றுமில்லை. வயோதிகத்தையும் அவலக்ஷணத்தையும் அது கொடுக்கிறது. அதன் கேடுகளை அறியாமல் மனிதர் அதனில் நுழைந்துவிடுகின்றனர். இந்த விஷயங்களெல்லாம் ஜனங்களுக்குத் தெரியாமலில்லை. பத்திரிகைகளில் அவர்கள் இவற்றைப்படிக்கிறார்கள். ஆனால் படித்தவற்றைச் சேர்த்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுவதில்லை. சிந்திப்பதில்லை. நம் தேசம் அழிவுக்கே சென்று கொண்டிருக்கிறது. உடனே நாம் விழித்துக்கொண்டு வேலை செய்தாலல்லாமல் பிழைக்க வழியில்லை.

"எனக்குப் புருஷர்களிடம் நம்பிக்கை இல்லை. ஸ்திரீகளிடமும், குழந்தைகளிடமுமே எனக்கு நம்பிக்கையிருக்கிறது. ஆகையால் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுத்துப் பெரியவர்களைச் சீர்திருத்த நாம் முயலவேண்டும். ரஷியாவில் இம்மாதிரியே புதிய கருத்துக்களைப் பள்ளிக்கூடங்களில் போதிக்கிறார்கள்; அவர்களை வீடுகளுக்கு அனுப்பிப் பெற்றோர்களுக்குச் சொல்லிக் கொடுக்கச் செய்கிறார்கள்.

"இப்பொழுது நாம் கத்தியின்றி ரத்தமின்றி ஒரு பெரிய யுத்தம் செய்யவேண்டும். இது தரும யுத்தம். இராஜாங்க அதிகாரிகளின் மனத்தில் கடவுளைப்பற்றிய பயத்தைப் புகுத்தவேண்டும். இந்தியா இன்னும் செத்துவிடவில்லை.

உறங்கிக் கொண்டிருக்கிறது. உறக்கத்திலேயே நாம் பிராணன்போக விடக்கூடாது. தட்டி எழுப்பி அதற்குப் பலம் கொடுக்கவேண்டும்.

“இக்குடியை அமெரிக்காவில் நிறுத்தமுடியவில்லையென்று சிலர் முணுமுணுக்கிறார்கள். அதிகாரிகளின் லஞ்சமும் பணக்காரர்களின் பேராசையுமே அதற்குக்காரணம். அங்குப் புருஷர்கள் உண்மையாக வேலை செய்யவில்லை. பெண்கள் உழைத்த இடமெல்லாம் வெற்றிபெற்றார்கள். சாராய ரகசிய விற்பனைக்காரர்கள் பலாத்காரத்தாலும் வஞ்சத்தாலும் வேலை முறையை நாசமாக்கினார்கள். அவர்களுக்கு நற்புத்தி போதித்தது பெண்களே.

“நாமெல்லாம் இவ்விஷயத்தில் வெறிபிடித்தவர்களாக வேண்டும். கள் விற்ற பணத்தால் ஆகக்கூடிய துரைத்தனம் நடவாமல் இருப்பது நலம். நற்காலம் வருகிறதென்றே எனக்குத் தோன்றுகிறது. ஆனால் அக்காலம் பெண்களால் தான் ஆகும் என்பது நிச்சயம்”.

கூட்டத்தில் பெரியபரபரப்பு உண்டாயிற்று. பலர் அவளைப் பின்தொடர முன்வந்தனர். “கள்ளுக்கடைகளை ஒழிப்போம். லஞ்சத்தைத் தகர்ப்போம் ஏழைகளை காப்பாற்றுவோம்” என்ற சத்தம் வானத்தைக் கிழித்தது.

“நம்முடையசொத்து அன்பு ஒன்றே. அவ்வன்பு பயன்பட வேண்டுமென்று அல்லும் பகலும் பாடுபடவேண்டும். அன்பு அறிவுடன் செலுத்தப்படவேண்டும். மாயக்காரி அரசியல்வாதி, மோசக்காரன் இவர்களைப்போல் நுட்பமாக அவ்வன்பைச் செலுத்தக் கற்றுக்கொள்ளவேண்டும். அன்புக்கு பொறுமை, களைப்பின்மை, ஜாக்கிரதை இவை அவசியம். ஆனால் அது சுத்த வெள்ளையாய் இருக்கக்கூடாது. அதை காலத்துக்குத் தக்கவாறு ஜோடிக்கவேண்டும்.

“அன்பு மகாசக்தி வாய்ந்தது. திடசித்தமுள்ள எளியோர்கள் கையிலும் அன்பிற்கு மகிமை உண்டு. அன்பு, சக்தி இவைகளின் வடிவம் ஸ்திரீகள். சாவித்திரி என்றும்

சீதையென்றும் பழங் கதைகளைப்பேசி பயனில்லை. நம்மிடை இப்பொழுது இப்பேர்பட்ட ஸ்திரீ ரத்னங்கள் இல்லாமலா போய்விட்டார்கள்? குடிகாரனை வெறுக்காத ஸ்திரீ எவளாவ துண்டா? (இல்லை இல்லை.) இல்லையென்றால் ஒவ்வொரு ஸ்திரீயும் சீதையே சாவித்திரியே.

"மகாத்மா காந்தி, மனித சமூகத்தைச் சீர்திருத்தப் போட்டிருக்கும் திட்டங்களில் பூரண மதுவிலக்கு முக்கிய மானது. மூன்று வருடங்களுக்குள் கள்ளரக்கனை ஒழித்து வறுமைப் பிணி ஒழித்து நாடு செழித்து மக்கள் வயிறார உண்ண வேண்டுமென்பது அவரது அவா. மகாத்மா உங்க ளது பிரதிநிதி, நீங்களும் காங்கிரஸ்சும் ஒன்று காங்கிரஸ் மந்திரி சபையும் ஒன்று, மந்திரி சபையும் கவர்ண்மெண்டும் ஒன்று என்ற பேச்சில் சந்தோஷப்பட்டு சும்மாயிருந்து விடக்கூடாது. மந்திரி சபையோ அதிகாரவர்கத்தினரோ நீதி வழுவாமல் நடக்க வேண்டுமானால் பொது ஜனங்கள் உற் சாகம் தளராமல் இருக்கவேண்டும். கஷ்டமில்லாமல் கோறிய பலனடையக் கூடிய வழி மறியல் ஒன்றுதான். இந்த உரி மையை நமக்கு மகாத்மா சம்பாதித்துச் கொடுத்திருக்கிறார்.

"பதவிமோகத்தால் தவறிழைக்கும் சந்தர்ப்பத்தை தடுக் கும்வழி இது ஒன்றே. இது மந்திரி சபையையோ அதிகார வர்க்கத்தையோ அவமதிப்பதாகாது. நாம் செய்யும் ஒவ் வொரு வேலையும் அவர்களுக்கு பக்க பலமாகத்தானிருக்கும். பொது ஜனங்களுக்கு உற்சாகமில்லை, ஆகையால் பூரண மது விலக்கு கைவிடப்பட்டது என்று சொல்ல இடம் கொடுக்கக் கூடாது. சர்க்கார் கள்ளுக்கடைகளை பூட்டுவதற்கு முன் நம் வாயை நாமே பூட்டிகொள்வதாகும். மகாத்மாவின் வாக்கை நிறைவேற்ற வேண்டுமானால், காங்கிரஸின் பெயரை காப் பாற்ற வேண்டுமானால், நீங்கள் பூரண மதுவிலக்குக்கு வோட்கொடுத்தது வாஸ்தவமாயிருந்தால் உடனே ஆங் காங்கு மறியல் ஆரம்பிக்கவேண்டும்".

கூட்டம்முழுவதும் இந்த வீரப் பிரசங்கத்தால் உணர்ச்சி கிளப்பப்பட்டு எழுந்தது. மரகதம் விரும்பியிருந்

தால் அப்பொழுதே அவர்கள் வெளிப்பட்டுச் சாராயக் கடைகளை யெல்லாம் நாசமாக்கியிருப்பார்கள். ஆனால் மரகதம் அவர்களைப் பொறுத்துக்கொள்ளும்படி வேண்டினாள்.

கூடிய சீக்கிரம் அவள் ஒரு திட்டம் தயாரிப்பாள். தேசம் முழுவதும் மாதர் சங்கங்கள் கிளம்பும்.

மதுவிலக்கு தோல்வியடையாது

மதுவிலக்கே மனித விமோசனம்

என்ற யுத்தக்குரல்களைக் கூவிக் கொண்டு நாட்டு மாதர் எல்லோரும் தங்களுடைய சகோதரர்களையும் குழந்தைகளையும் காப்பாற்றமுன் வந்து மதுவரக்கனை அழித்து விடுவார்கள். மரகம்தபோல் எவ்விதத்தியாகமும் செய்வார்கள்.

மதுரை காமராசர் பல்கலைக்
தமிழியல் துறை

The B. N. Press, Madras.

# சக்தி மலர்

சக்தி மலர்ப் பதிப்பு நூல்கள் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் ஏற்ற உயரிய நற்கருத்துக்களைத் தெளிவான எளிய நடையில் வெளியிட எழுந்தனவாகும்

## புதிய மலர்கள்

சோவியத் ருஷ்யா ...வெ. சாமிநாத சர்மா

யான் பெற்ற இன்பம் ...மு. அருணசலம், M.A.

இன்னும் ஒரு வார்த்தை...கா. இராமனதன் செட்டியார்
(டால்ஸ்டாய் கட்டுரைகள்)

பிரயாண நினைவுகள் ...ஏ. கே. செட்டியார்

இருளின் வலிமை ...நா. வானமாமலை, B.A.
(டால்ஸ்டாய் எழுதியது)

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி மதுரை